Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28| விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :67 தை 20ஆம் நாள் திங்கட்கிழமை 03 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி



"விமலுக்கு இன்னும் மண்டைக்குள்ள மண்தான். திரும்ப ஒருக்கா விளக்குமாத்து வரவேற்வேற்புக் குடுக்கத்தான் வேணும்போல..."

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணுக்குள் தோண்டி எடுங்கள்

## விமல்வீரவன்ஸ விசமத்தனக் கருத்து



யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் எனக் கூறப்படுபவர்கள் எவரும் இன்று உயிருடன் இல்லை. அவர்களின் உயிரிழப்புக்கு ராஜபக் ஷக்கள் பொறுப்பு அல்ல. இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தான் முழுப் பொறுப்பு. இப்படியான நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் வேண்டுமெனில் அவர்களை மண்ணுக்குள்தான் தோண்டி எடுக்க வேண்டும். இவ்வாறு கோத்தாபய அரசின் முக்கிய அமைச்சரான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

23 ➤

## நாளை கரிநாள் போர்: மக்களுக்கு அழைப்பு

கிளிநொச்சி, பெப். 3

இலங்கையின் சுதந்திர நாளான நாளை வட கிழக்கு முழுவதிலும்

23 ➤

## போராட்டத்துக்கு முழு ஆதரவு

*கலைப்பீடம் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 3

இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாக அறிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவு

23 ➤

## கொள்ளையர்கள் அட்டகாசம்

முல்லைத்தீவு, பெப். 3

புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் வீட்டிலிருந்தவர்களை அடித்துக் கட்டிவைத்துவிட்டு நகை மற்றும் பணம் என்பவற்றை முகமூ

23 ➤

## மாணவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் பெப்.2

தூக்கில் தொங்கிய நிலையில், மாணவன் ஒருவர் யாழ்.போதனா

23 ➤

*சீனாவிலிருந்து அழைத்துவரப்பட்ட*

## மாணவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 3

கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளான சீனாவின் வூஹான் நகரிலிருந்து நேற்று முன்தினம் அழைத்து வரப்பட்ட 33 இலங்கை மாணவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆறு பேர் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள்.

23 ➤

*காணாமல் ஆக்கப்பட்டோருக்கு*

## நடந்தது என்ன?

அழுத்தம் கொடுக்கிறது ஐ.நா

கொழும்பு, பெப். 3

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தல், அது குறித்த விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்தல் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல் ஆகியவை இடம்பெற வேண்டும் என்றே ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் இலங்கை


07 ➤

## யாழ்.மருத்துவருக்கு 'கொரோனா' இல்லை

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்.போதனா மருத்துவமனையில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டவருக்கு, வைரஸ் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்த

23 ➤




## 4 நாள்களில் 714 கிலோ கஞ்சா மீட்பு

***நேற்று 292 கிலோவுடன் 4 இந்திய மீனவர் கைது***

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணத்தில் கடந்த நான்கு நாள்களில் மாத்திரம் 714 கிலோ

06 ➤

## 5 எம்.பிக்களுடன் புதுமுகங்கள்

சித்தார்த்தன் ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 3

இளையோருக்கும், பெண்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென சுமந்திரன் சொல்வதை நானும் ஆதரிக்கிறேன். ஆனால், அதற்கு ஒரு பொறிமுறை அவசியம். தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்

23 ➤

முதலமைச்சர் வேட்பாளர்

## மாவையில்லா விட்டால் நானே களமிறங்குவேன்

சி.வி.கே. சிவஞானம் அதிரடி

கொழும்பு, பெப். 3

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதைப் பற்றி நான் சிந்திக்கவில்லை. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்க மாவை.சேனாதிராசாவே

06 ➤

## புலிகளின் ஆவணங்கள்: கிளி.யில் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 3

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 29 ஆவணங்கள், ஐந்து போலி இறப்பர் முத்திரைகள், மெமரிக் கார்ட்,

07 ➤

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கூட்டமைப்பின் சுமந்திரனே

# அரசின் அடிமைகளாக மக்களை மாற்றியவர்!

## விக்னேஸ்வரன் சரமாரியாகக் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம் ,பெப்.3**


**“கடந்த கால அரசின் கைக்கூலிகளாகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டனர். அதற்கு முக்கியமானவர் சுமந்திரனே.அரசின் அடிமைத்தனத்துக்குள் எமது மக்களை கொண்டு சென்றவர் அவர் தான்” எனக்குற்றம் சாட்டியுள்ளார் வடக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.**

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

“எனது மாணவனாகிய சுமந்திரனை நான் தனிப்பட்ட ரீதியில் அதிகம் விமர்சிக்க விரும்பவில்லை. அந்தத் தேவையும் எனக்கில்லை. எனினும் கொள்கையின் பொருட்டே நான் அவருடன் முரண்படுகிறேன்.

பொதுக் கொள்கையின் அடிப்படையில் நாம் யாருடனும் கூட்டுச்சேர்வதற்குத் தயாராகவுள்ளோம். எனினும் சுயலாப அரசியலுக்காக தேர்தல் கூட்டுவைப்பதற்கு நாம் ஒரு போதும் தயாரில்லை. அரசுடன் இணைந்து செல்வதன் மூலம் அரசு எமது மக்களுக்கு செய்யாது விடுகின்ற விடயங்களைத் தட்டிக்கேட்கத் திராணியில்லாமற் போகும். பூகோள அரசியல் நிலைமையைப் புரிந்து கொண்டு நாம் செயற்படவேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக வாக்களித்தமைக்குக் காரணம் ஜனாதிபதி கோத்தாபய மீதான வெறுப்பேயன்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியதால் மட்டும் அல்ல. கூட்டமைப்பு வெளிப்படையாக பரப்புரை செய்தமையும், சஜித்தின் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. அதே நேரம் தேர்தலை பகிஷ்கரிக்க கூறிய கஜேந்திரகுமாரின் முடிவும் முட்டாள்த்தனமானதே.



நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் எதுவும் செய்யவில்லை எனக் குற்றம் சாட்டுபவர்கள் நாம் செய்த விடயங்களைப்பற்றிக் கூறாது விடுவது வேடிக்கையானது. நாம் அந்த நேரத்தில் எதிர்கொண்ட சவால்களைப் பற்றியோ தடைகளைப்பற்றியோ அவர்கள் கூறுவ தில்லை . அந்தத் தடைகளைத் தாண்டி .அச்சுறுத்தல்கள் மத்தியில் செயற்பட்டமை பலருக்குத் தெரியாது. அரசிடமிருந்து வந்த தடைகளை விடத் தமிழ்த்தலைவர்கள் சிலரிடம் இருந்து வந்த தடைகளே அதிகமானவை. சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எமது காலத்தில் நாம் முற்பட்ட போதும் எமக்கு அதிகாரம் கிடைக்க வில்லை. தேவைகளை முன்னிறுத்தி நல்லாட்சி அரசிடம் 12 ஆயிரம் மில்லியன் கேட்டபோது எமக்கு கிடைத்தது ,வெறும் ஆயிரத்து 260 மில்லியனே “எனத் தெரிவித்தார். (ந)



## வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம்

மூதூர்.பெப்.3

திருகோணமலை ஐக்கிய பொதுச் சந்தை வளாகத்தில் வாராந்த சந்தை நடைமுறை தொடக்கி வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மத்திய சந்தை வர்த்தகர்கள், சந்தைக்கு முன்னால் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை மின்சார நிலைய வீதியில் 1997 ஆம் ஆண்டு சந்தைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. எனினும் அரசியல் காரணங்களால் வியாபார நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. பின்னர் அது இராணுவ முகமாக இயங்கி வந்தது. இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறிய பின்னர் வெறுமையாக இருந்த வளாகத்தில் வாராந்த சந்தையை அமைக்க சபை தீர்மானித்து நேற்று முதல் வாராந்த சந்தை ஆரம்பிக்கப்படவிருந்தது.

எனினும் வர்த்தகர்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் பலவாறு எழுதப்பட்ட சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர். நாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் வாராந்த சந்தை நடைபெற்று வருகிறது. ஆனால் திருகோணமலை நகரில் சந்தை நடத்தப்படுவதற்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னொரு சந்தை நடைபெற்றால் இன முறுகல் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-40)

# ஐக்கிய தேசிய முன்னணி முக்கிய சந்திப்பு நேற்று

கொழும்பு, பெப். 3

சஜித் பிரேமதாஸ தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணியின் பொதுச் செயலராக ரஞ்சித் மத்துமபண்டாரவை நியமிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக்கட்சி தலைவர்கள் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், புதிய அரசியல் கூட்டணி, அதன் செயலர் யார் என்பன விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக பொதுச்செயலர் விவகாரத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசியல் கூட்டணியின் பொதுச்செயலராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பச்சைக்கொடி காட்டினர்.

செயலரின் பெயரை முன்மொழிவதற்கான அதிகாரம் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுவின் ஒப்புதலுடனேயே இறுதி முடிவு எட்டப்பட வேண்டும் என ரணில் தரப்பு கூறுகின்றது. ரஞ்சித் மத்துவ பண்டாரவின் பெயர் ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவுக்கு பிரேரிக்கப்படும் என தெரியவருகின்றது.

புதிய அரசியல் கூட்டணியின் பெயர் என்ன, சின்னம் எது, யாப்பு எவ்வாறு அமையும் போன்ற விவரங்கள் அடுத்த வாரமளில் வெளியிடப்படும் என்று கூட்டத்தில் பங்கேற்றிருந்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டணியின் பொதுசெயலர் பதவிக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயரை முன்மொழிவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைக்குழுவின் தலைவராகவும் சஜித் பிரேமதாச செயற்படுவார். இதில் பங்காளி கட்சிகளின் தலைவர்களும், ஐதேகவின் பிரதிநிதிகளும் இடம்பெறுவர். ஒவ்வொரு பங்காளி கட்சியும் கூட்டணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடும்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் தொடர்பான கூட்டணியின் வேட்பாளர் நியமன சபையின் தலைவராகவும் சஜித் பிரேமதாச செயற்படுவார். இந்த சபையில் பங்காளி கட்சிகளின் தலைவர்களும், ஐதேகவின் பிரதிநிதிகளும் இடம்பெறுவர். ஐக்கிய தேசிய முன்னணியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மீண்டும் நியமனம் வழங்கப்படும். ஒவ்வொரு பங்காளி கட்சியும் 2015 ஆம் வருட தேர்தலில் பெற்றுக் கொண்ட நியமனங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளும். மேலதிக வேட்பாளர் நியமனங்கள் தொடர்பில் பேச்சுக்களின் அடிப்படையில். முடிவு செய்யப்படும்.

ஒவ்வொரு கட்சியின் உறுப்பினரும் குறிப்பிட்ட கட்சிகளின் ஒழுங்கு கோவையின் கீழ் செயற்படுவார்கள். ஒரு கட்சியால் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு அங்கத்தவரை இன்னொரு பங்காளி கட்சி எந்த சந்தர்ப்பத்திலும் உள்வாங்க முடியாது - என்றார். (ஒ.5,44)

# விடுவித்த இடத்திலேயே மீள்குடியமர்வு இல்லை

## புதிதாக விடுவிக்கக் கேட்கலாமா? இப்படிக் கேட்கிறார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் குடியேறுவதற்கு ஆர்வம் காட்டவில்லை. மேலதிக காணிகளை விடுவிக்குமாறு கோருகின்றனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட இராணுவத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள், எதிர்வரும் காலங்களில் காணி விடுவிப்புத் தொடர்பாக ஏதாவது முன்னேற்றகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.
இதுவரையான காலப்பகுதியில் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்படுத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்ட 8 ஆயிரத்து 800 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் விடுவிக்கப்பட்ட காணிகளில் 4 ஆயிரத்து 770 ஏக்கர் காணிகளுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலையில் அவை தொடர்ந்தும் மக்கள் பயன்படுத்தாத நிலையில் அக்காணிகள் பற்றைக்காடுகளாக காணப்படுகின்றன.
காணிகளை விடுவிக்குமாறு போராட்டங்களை மேற்கொள்ளும் பொதுமக்கள் காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் மீள குடியமர்வதற்கு ஆர்வம் காட்டவில்லை. குறிப்பாக 4 ஆயிரத்து 770 ஏக்கர் காணி தொடர்ந்தும் காடும், பற்றைகளுமாக கவனிப்பாரற்றும் காணப்படுகிறன. இது எமக்கு வேதனை அளிக்கின்றது.
பொதுமக்களின் காணிகளை முற்றாக விடுவிப்பதற்கு நாங்கள் அதற்கான வேலைத்திட்டங்களை முன்னோக்கி செய்து வருகின்றோம். ஆனால் காணி உரிமையாளர்கள் வந்து மீளக்குடியமரவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். நான் நினைக்கின்றேன் காணி உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் மீளகுடியமரும் இடத்து இராணுவம் பல்வேறு உதவிகளை வழங்க தயாராக உள்ளது - என்றார். (ஓ.5)

# மயங்கியவர் சாவு

வடமராட்சி, பெப். 3

வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையில் மருந்து எடுப்பதற்காகச் சென்ற பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
அல்வாய் வடக்கைச் சேர்ந்த அழகேந்தினி இந்திரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
மருத்துவமனைக்குச் சென்ற அவர் அங்கு மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். அவரது சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஓ.5.173)

# மணல் அகழ்ந்தோர் பொலிஸால் கைது

முல்லைத்தீவு, பெப். 3

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5பேர் பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.
புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தையும் சாரதியையும் புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்தனர்.
கள்ளியடிப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய நான்கு உழவியந்திரங்களையும் சாரதிகளையும் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட ஐவருக்கும் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5,19)

# ஜெனிவாவில் அரசுக்கு ஆப்புவைக்க கூட்டமைப்பினர் திரைமறைவில் சதி

## முறியடிப்போம் என்கிறார் அமைச்சர் நிமல் சிறிபால

கொழும்பு, பெப். 3

இம்முறை ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டால் இலங்கை ஆபத்தைச் சந்திக்காது. எமது அரசை அங்கு சிக்கவைக்க சில நாடுகளுடன் சேர்ந்துதமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் திரைமறைவில் சதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசுடன் எந்த நேரமும் பேச்சு நடத்தலாம் என்று கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். அது தொடர்பில் கவனம் செலுத்தாத கூட்டமைப்பினர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன்தான் சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்கள். ஜெனிவா தொடர்பில்தான் அதிக கவனம் செலுத்தி வருகின்றார்கள்.
இங்குள்ள எந்தப் பிரச்சினைக்கும் ஜெனிவா ஒருபோதும் தீர்வைப் பெற்றுத்தராது. அரசுதான் தீர்வை வழங்கும். இதை உணர்ந்து கூட்டமைப்பினர் செயற்பட வேண்டும் - என்றார். (ஓ.5.22)

# தமிழர், சிங்களவர்களை பிரித்துவைக்கும் செயல்

## ராஜபக்ஷ அரசை சாடுகின்றார் சம்பிக்க



கொழும்பு, பெப். 3

ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ், சிங்கள மக்களைப் பிரித்து அவர்களைத் தூரமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்க வேண்டாம் என இந்த அரசு கூறுகின்றது என்றால் அது வெறு மனேதமது வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ள சிங்கள மக்களை தம்வசம் வைத்திருக்க செய்யும் சூழ்ச்சியாகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களின் கடந்த கால சூழலை மீண்டும் நினைவுபடுத்தவா தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதை ராஜபக்ஷ அரசு தடுக்கின்றது என்ற கேள்வியும் தற்போது எழுகின்றது. இன்று இன வாதக் கருத்துக்களை மட்டுமே இந்த அரசு பரப்பி வருகின்றது.
எமது ஆட்சியில் சகல மக்களும் ஒன்றாக வாழக்கூடிய சூழலை அமைத்துக் கொடுத்தோம். ஆனால், ராஜபக்ஷாக்கள் ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் இனவாத அரசியலைச் செய்ய ஆரம்பித்துள்ளனர். இலங்கையின் சுதந்திர தினம் நாளை செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படக் கூடாது என அவர்கள் அறிவித்துள்ளனர்.
ஆனால், எமது ஆட்சியில் அவ்வாறு எந்தவொரு தடையையும் நாம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக செய்யவில்லை. சிங்கள மக்களும் அவ்வாறு தனித்துவமான நிலைமைகளை எதிர்பார்க்கவும் இல்லை. நாம் சிங்கள - தமிழ் மக்களை நெருக்கமாக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுத்தோம் - என்றார். (ஓ.5.22)

# ஹங்கொட சகாக்கள் கைது

கொழும்பு, பெப்.3

பாதாள உலகக்குழுத் தலைவரான ஹங்கொட லொக்காவின் உதவியாளர்கள் இருவர் முல்லேரியா பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.
பெனியா மற்றும் பிரசன்ன என்று அழைக்கப்படும் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியே எமது இலக்கு

## ரணிலையும் அரவணைத்து பயணிப்போம் என்கிறார் சஜித்

கொழும்பு, பெப். 3

நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான கூட்டணியைத் தோற்கடித்து வெற்றி பெறுவதே எமது இலக்கு. தேர்தலுக்கான புதிய கூட்டணியில் ரணிலையும் அரவணைத்துப் பயணிப்போம். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோற்றுவிட்டோம் என்று சரிந்து கிடக்க விரும்பவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் பாடம் புகட்டி வெற்றி பெற்று வீறுகொண்டு எழுந்து நிற்கவே விரும்புகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் உள்ளமை உண்மைதான். அதற்காகக் கட்சியை நாசமாக்க நாம் விரும்பவில்லை.
ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியையும் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளையும் அரவணைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காகப் புதிய கூட்டணியை அமைக்கத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஓ.5.22)

# பிரச்சினைக்கு தீர்வு காண பலமான அரசு அவசியம்!

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.3**
**நாடு முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பலமான அரசாங்கமும் சக்திவாய்ந்த நாடாளுமன்றமும் அவசியமாகும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அம்பாந்தோட்டையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு சக்திவாய்ந்த நாடாளுமன்றமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கவுள்ளது. அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நாம் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்கவில்லை. அன்று எமது கட்சியின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாகும். அவருக்காக மைத்திரிபால சிறிசேனவை தோற்கடிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். என்றாலும் மஹிந்த ராஜபக்ஷ அந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவியிருந்தார். ஐ.தே.கவுடன் அரசு அமைப்பது பொருத்தமற்ற செயற்பாடாக இருந்தபோதிலும் அன்று கட்சியின் தீர்மானத்துக்கமைய தேசிய அரசை அமைத்தோம். சிறிது காலத்திலேயே தேசிய அரசில் பயணிப்பது சாத்தியமில்லையென்பதை உணர்ந்து கொண்டோம். ஐ.தே.க அரசால் மத்திய வங்கியில் மேற்கொள்ளப்பட்ட பிணைமுறி மோசடி தொடர்பில் நாங்கள் தான் முதலில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தோம். ஐ.தே.கவின் சட்டவிரோதமான செயற்பாடுகள் காரணமாகத்தான் 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி மீண்டும் மஹிந்த ராஜபக் ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றே அனைவரும் தீர்மானித்திருந்தனர். அதன்படிதான் பணிகளையும் செய்தோம். அதனால் சஜித் பிரேமதாச படுதோல்வியடைந்தார். ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட சிலர் யோசனையொன்றை முன்வைத்தனர். ராஜபக்ஷமாரை தோற்கடிக்க சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பதே அந்த யோசனையாகும். என்றாலும் நாம் அந்த யோசனைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வானமும் பூமியும் போன்றவை. ஒருநாளும் ஒன்றிணைந்து பயணிக்க முடியாத இரு கட்சிகளாகும். சமகாலத்தில் நாடு முகங்கொடுத்துள்ள பிரச்சினை களுக்கு தீர்வு காண பலமான நாடாளுமன்றமும் அரசும் அவசியமாகும். அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க பொது மக்களுக்கு ஏப்ரல் மாத பொதுத் தேர்தலில் வாய்ப்பு கிடைக்கும். அந்த உயரிய பொறுப்பு நாட்டு மக்கள் கைகளிலேயே உள்ளது - என்றார். (எ-24)



# போதையில் பஸ் செலுத்திய இ.போ.ச சாரதி பணி நீக்கம்!

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்றுக்குப் பயணித்த இ.போ.சபைக்குரிய பஸ்ஸில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற சாரதி மதுபோதையில் இருந்தார் என்பது தெரியவந்தநிலையில், அவரை சேவையிலிருந்து உடனடியாக நீக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு போக்குவரத்து அமைச்சர் மேற்படி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் சாலையில் பணியாற்றும் சாரதியையே சேவையிலிருந்து நீக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த புதன்கிழமை இரவு 7.45 மணிக்கு அக்கரைப்பற்றுக்குப் புறப்பட்ட பஸ்ஸை யாழ்ப்பாணம் செம்மணி யாழ்.வளைவுப் பகுதியில் படையினரும் பொலிஸாரும் வழிமறித்துச் சோதனையிட்டனர். அதன்போதே அதன்சாரதி போதையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

சாரதியை பஸ்ஸிலிருந்து இறக்கிவிட்ட இராணுவத்தினர், பஸ்ஸை சோதனையிட்ட போது, 2 பியர் ரின்களும் சாராயப் போத்தல் ஒன்றும் சாரதியின் இருக்கைக்குக் கீழ் இருந்து மீட்கப்பட்டன என்று கூறி யிருந்தனர். சாரதியைக் கடுமையாக எச்சரித்து அவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்கு இராணுவத்தினர் அறிவித்திருந்தனர்.

46 பயணிகளும் அக்கரைப்பற்றுக்கு பயணிப்பதற்கு கோண்டாவில் சாலையைச் சேர்ந்த மற்றொரு பஸ் வரவழைக்கப்பட்டு அதில் அனுப்பிவைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# நிதி விடுவிக்கப்பட்டவுடன் கொடுப்பனவு வழங்கப்படும்

## மாவட்ட செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு.பெப்.3
கட்டு நிதிகள் முழுமையாக விடுவிக்கப்பட்ட பின்பு கொடுப்பனவு செய்ய வேண்டிய, அபிவிருத்தி வேலைகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் கட்டுமான வேலைகள் இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன என்று மக்கள் பலரும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
2019 ஆம் ஆண்டு மீள் குடியேற்ற அமைச்சு, கம்பெரலிய, துரித கிராம அபிவிருத்தித் திட்டம் போன்ற பல்வேறு விசேட திட்டங்களின் கீழ், 800 மில்லியனுக்கும் அதிகமான நிதி, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டு, வேலைகள் இடம்பெற்று வந்தன. ஆனால் வருட இறுதியில் கட்டு நிதி பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, வேலைகள் இடம்பெற்றும், அவற்றுக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியாமல் போய்விட்டது.

இதனால் வருட இறுதியில் குறிப்பிட்ட 800 மில்லியன் ரூபா நிதி, ஏற்கனவே வேலைகள் நிறைவுற்றும் கொடுப்பனவு செய்யமுடியாமல் இருக்கின்றது என்ற தகவலை நாங்கள் ஏற்கனவே நிதி அமைச்சுக்கும், திறைசேரிக்கும் அறிவித்திருக்கின்றோம். கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிதி விவரங்களையும், கடந்த வருடம் அவர்களுக்கு அனுப்பியுள்ளோம்.

எவ்வாறாயினும் இவ்வருடம் அதற்குரிய கொடுப்பனவுகளைப் படிப்படியாக வழங்க முடியும் என்பதில் நாம் திடமாக இருக்கின்றோம். மேலும் இந்த வருடம் சில கட்டுநிதிகள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஏனைய நிதிகளும் விடுவிக்கப்பட்ட பின்பு கொடுப்பனவு செய்ய வேண்டிய, கட்டுமானங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும். இதன்மூலம் இடைநடுவே ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களும் மீள ஆரம்பிக்கப்படும்- என்றார். (க-246)

# காப்புறுதி பத்திரமில்லை

## ரூ.3,000 தண்டம்

கிளிநொச்சி, பெப். 3
வரி மற்றும் காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வரி மற்றும் காப்புறுதிப் பத்திரங்கள் இன்றி வாகனம் செலுத்திய இரு சாரதிகளையும் கடந்த சனிக்கிழமை மன்றில் முற்படுத்தினர். தம் மீதான குற்றச்சாட்டுக்களை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். தலா 3ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (கு-6)

# கிராமிய வங்கிகளை விஸ்தரிக்கத் திட்டம்

வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளை இந்த ஆண்டில் மேலும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை கிராம மட்டத்தில் மேலும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

வங்கிகள் யாவும் செயல்திறன் மிக்க வலுவான செயற்பாடுகளை மேற்கொள்ளும் பட்சத்தில், அவற்றின் முகாமை மட்டத்தினருக்குச் சிறப்புப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

கடந்த 2019 ஆண்டில் மட்டும் கிராமிய வங்கி முகாமையாளர்களுக்கு 92 வரையிலான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மக்கள் வங்கி மற்றும் மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கி போன்றவை இந்தப் பயிற்சிகளை வழங்கின.

கூட்டுறவுக் கிராமிய வங்கியால் மேற்கொள்ளப்படும் கடன் வழங்கும் திட்டம், பயனாளிகளுக்கான கொடுக்கல் வாங்கல், பண வைப்பு உட்பட அனைத்து வங்கிச் செயற்பாடுகள் தொடர்பான வலுவூட்டல் கருத்துக்கள் இந்தப் பயிற்சியில் வழங்கப்பட்டன. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை மக்கள் மயப்படுத்தும் செயற்றிட்டத்தின் ஊடாக இந்தப் பயிற்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனை இந்த ஆண்டிலும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (க-17)

# சிங்களவரை நியமித்திருப்பது பனைத் தொழிலை நசுக்கவே

## ஐங்கரநேசன் கடும் கண்டனம்



**யாழ்ப்பாணம், பெப். 3**
**தமிழின் முகவரியாக விளங்குகின்ற பனை வளத்தின் அபிவிருத்திக்கு அதனுடன் எவ்விதத்திலேனும் தொடர்புற்றிராத தென்னிலங்கைச் சிங்களவர் ஒருவரைப் புதிய அரசு தலைவராக நியமனம் செய்திருக்கிறது.**

அங்குதொட்டு, இங்குதொட்டுக் கடைசியில் உயிர்மடியில் கைவைப்பது போன்ற அரசின் இந்தச் செயற்பாடு பேரினவாதத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடேயன்றி வேறொன்றுமல்ல.

இவ்வாறு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பனைஅபிவிருத்திச்சபையின் புதிய தலைவராக தென்னிலங்கையைச் சேர்ந்த கிரிசாந்த பத்திராஜ என்பவரை அரசு நியமித்துள்ளது.

தமிழர்களின் வாழ்வியலில் பிரிக்க முடியாத பிணைப்பைக் கொண்டிருக்கும் பனை மரத்தில் இருந்து பொருளாதார ரீதியாக உச்சப்பயன்களைப் பெறும் நோக்குடனேயே பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. ஆனால், இதன் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்க ளில் ஒருசிலரே பனையின் சமூக, பொருளாதாரம் பற்றிய பட்டறிவும் புலமைசார் அறிவும் கொண்டவர்களாக இருந்துள்ளார்கள்.

தற்போது பனை அபிவிருத்திச் சபையின் தலைவராச நியமிக்கப் பட்டிருப்பவரின் பாட்டனார் யாழ்ப்பாணத்தில் வெதுப்பகம் ஒன்றை வைத்திருந்தார் என்பதைத் தவிர பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பனையின் சமூக வாழ்வியலுடனோ, பனை அறிவியலுடனோ எவ்விதத் தொடர்பும் இல்லாதவர்.

இது ஏற்கனவே சரிவைநோக்கித் தள்ளப்பட்டுள்ள பனைத் தொழிலை மேலும் நசிவுக்குள்ளாக்கும் நியமனமாகவே அமையும்.

தமிழ்த் தேசியம் என்பது நாடாளுமன்றத்துக்குள்ளோ மாகாண சபைகளுக்குள்ளோ இல்லை. இவற்றுக்கு வெளியே தமிழ் மக்களின் வாழ்வியலுக்குள்ளேயே இது அடங்கியுள்ளது.

அந்தவகையில், தமிழ்த் தேசியத்தின் அடையாளமாக விளங்கும் பனை மரத்தைப் பெருக்கி, பனைசார் தொழில்களை மேம்படுத்த வேண்டுமெனில் அரசியல் நியமனம் அல்லாத, பனைசார் சமூகவியலையும் அறிவியலையும் தகைமைகளாகக் கொண்ட பொருத்தமான ஒருவரே பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

இது பற்றி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்குத் தமிழ்த் தேசியம் பேசும் எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகள் முன்வர வேண்டும். பனைவீழின் தமிழர் தம் வாழ்வும் வீழும் என்றுள்ளது. (த)

# இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் இம்மாதம் 14 ஆம் திகதி

கிளிநொச்சி,பெப். 3

இலங்கை இளைஞர் நாடாளுமன்ற தேர்தல் இந்த மாதம் 14 திகதி நாடுதளுவியரீதியில் நடைபெறவுள்ளது ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து ஒரு இளைஞர் நாடாளுமன்ற பிரதிநிதிக்கு இம்முறை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி மற்றும் 8 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை மாவட்டச் செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய முடியும்.

இளைஞர் கழக அங்கத்தவர் மற்றும் அங்கத்துவர் இல்லாத இலங்கைப் பிரஜை எவரும் தேர்தலில் வாக்களாராகவோ வேட்பாளராகவோ தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

வேட்பாளருக்குரிய வயதெல்லை 18 தொடக்கம் 27 வயது வரையாகும். (1992.12.31 க்கு பின் 2001.12.31க்கு முன் பிறந்தவராக இருக்க வேண்டும்). வாக்காளர் 15 தொடக்கம் 29 வயதிற்குட்பட்டவராக இருக்க முடியும். வாக்களிப்புக்கு வருகை தரும் போது கட்டாயம் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத 15 முதல் 18 வயதுடையோர் இளைஞர் கழக அடையாள அட்டை வைத்திருப்பின் வாக்களிக்க முடியும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (ஐ-6)

# திக்சிகாவுக்கு வவுனியாவில் அஞ்சலி

வவுனியா,பெப். 3


உடல்நலக்குறைவால் சாவடைந்த தமிழர் இளையோர் அமைப்பின் பிரிட்டனுக்கான முக்கியஸ்தர் திக்சிகா சிறிபாலகிருஸ்ணனுக்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியாவில் கடந்த 1078 நாள்களாக சுழற்சிமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்றுமுன்தினம் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

அவருடைய உருவம் தாங்கிய பதாதைக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் இந்துபௌத்த மாநாடு, இந்து மற்றும் கிறிஸ்தவர்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்துவதாக ஒரு வதந்தி உள்ளது. ஆனால் இருர்கள் அனைவரும் தமிழர்கள்.

யாழ்ப்பாணத்துக்கு வந்த பிக்குகள், தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக உறுதியளிக்கின்றனர். 2009 ல் ராஜபக்ஷவினர் ஒன்றரை லட்சம் தமிழர்களைக் கொன்றனர். அதன்போது அவர்கள் எங்கே இருந்தார்கள்? என்று நிகழ்வின் போது அவர்கள் கேள்வியெழுப்பினர். (த-110)




# 269 பேருக்கு கிளியில் கடந்த வருடம் டெங்கு

கிளிநொச்சி,பெப். 3

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் 269 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்று மாவட்ட பொது மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் கடந்த வருடம் 372 பேர் டெங்கு நோய்த்தாக்கம் என்ற சந்தேகத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் அவர்களில் 269 பேர் டெங்கு நோயாளர்கள் என அடையாளம் காணப்பட்டனர். கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 178 பேர் சேர்க்கப்பட்டு அவர்களில் 125 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 44 பேர் சேர்க்கப்பட்டு அவர்கள் 44 பேரும் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். பூநகரிப் பிரதேசத்தில் 95 பேர் சேர்க்கப்பட்டு அவர்களில் 54 பேர் இடங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். கண்டாவளை பிரதேசத்தில் 55 பேர் சேர்க்கப்பட்டு அவர்களில் 46 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# திறன் வகுப்பறை கட்டடம் திறப்பு



கிளிநொச்சி,பெப்.3

மாசார் வித்தியாலயத்துக்கான திறன் வகுப்பறை கட்டடம் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த திறன் வகுப்பறை அமைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் கருணாநந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள் அருள்செல்வி மற்றும் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-6)

# மாணவன் மீது குற்றஞ்சாட்டி தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 3

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள பல்கலைக்கழக மாணவரொருவர் தாக்கப்பட்டுள்ளார். காயமடைந்த அவர் மருத்து வமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த மாணவர் மீது குற்றச்சாட்டு முன்வைத்துத் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-105)

# அறுவடையில் அறுபடுகின்றன நாக பாம்புகள்


யாழ்ப்பாணம், பெப். 3

வழுக்கையாற்றுப் படுக்கைகளில் நெல் வெட்டும் இயந்திரம் மூலம் அறுவடைஇடம்பெறும்போது வயல்வெளிகளில் உள்ள பாம்புகள் நெல் வெட்டும் இயந்திரங்களுக்கு இரையாகியுள்ளன. நவாலி வழுக்கையாற்று பகுதியில் நெற் பயிர்களுக்கு இடையே யுள்ள பல வகை பாம்புகளே இவ்வாறு நெல்வெட்டும் இயந்தி ரங்களுக்குள் அகப்பட்டு துண்டு துண்டாக அறுபட்டு இறந்துள் ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வழுக்கையாற்று வெளியில் நாக பாம்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றன என்று விவசாயிகள் ஏற்கனவே கூறி யிருந்தனர். (த-50)

# அங்கஜன் எம்.பி. ஆயருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 3



யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான இ.அங்கஜன் மற்றும் யாழ்ப்பாண மறைமா வட்ட ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக் கும் இடையிலான சந்திப்பு ஆயர் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் செய் யக்கூடிய அபிவிருத்திகள் தொடர்பாகக் கதைத்ததாகவும் அரசியல் தொடர்பாகக் கதைக் கவில்லையென்றும் ஆண் டகை தெரிவித்தார்.

முக்கியமாக மக்களுக்கு தேவையான கல்வி, மீன்பிடி மற்றும் விவசாயம் என்பன வற்றை அபிவிருத்திசெய்வது தொடர்பில் கலந்துரையாடிய தாக அவர் மேலும் தெரிவித் தார். பல்துறை நிபுணர்களைக் கொண்ட அபிவிருத்தி குழு ஒன்று ஆயர் இல்லத்தால் உருவாக்கப்பட்டமைக்கு ஒத்து ழைப்பு வழங்குவதாக இதன் போது நாடாளுமன்ற உறுப்பி னர் இ.அங்க ஜன் தெரிவித் தார். (த-20)

# கால்நடைகளால் விபத்துகள் !

## *கட்டுப்படுத்துமாறு நகர சபையிடம் கோரிக்கை*

வவுனியா, ஜன. 3

வவுனியா நகர்ப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்தில் தினமும் நெரிசலும், விபத்துகளும் ஏற்படுகின் றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக வவுனியா நகரம், வவுனியா - மன்னார் பிரதான வீதி, பட்டானிச்சூர், வேப் பங்குளம், குருமன்காடு சந்தி போன்ற பகுதிகளில் வீதிகளின்நடுவில் கால்நடை கள் நிற்கின்றன, உறங்குகின்றன. இத னால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின் றது, விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கட்டாக்காலி மாடுகளால் கடந்த மாதத்தில் மாத்திரம் 10க்கும் மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. எனவே கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த நகரசபையி னர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக் கின்றனர். (த-18)


## மரண அறிவித்தல்கள்



தாயின் மடியில்
29 ... 12 ... 1965

மண்ணின் மடியில்
02 ... 02 ... 2020

**தனநாயகம் கைலைராஜன் (அசோக்)**

மீசாலையை பிறப்பிடமாகவும், பிரான்சை நிரந்தர வசிப் பிடமாகவும் கொண்ட தனநாயகம் கைலைராஜன் (அசோக்) நேற்று **(02.02.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திரு. திருமதி தனநாயகம் சோதீஸ்வரி தம்ப தியரின் புதல்வரும், உருத்திராதேவியின் கணவரும் அருண், அலெக்ஸ் ஆகியோரின் தந்தையும் ரமணன் (கண்ணா), ராகவன் (அர்ச்சுனா), ரஞ்சன் (இளங்கோ), வளர்மதி (கல்யாணி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கஜேந்திரன் (மைத்துனர்)
தொடர்பு:-077 699 2917


## 4 நாள்களில்...

கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் நான்கு பேர் 292 கிலோ கிராம் கஞ்சாவுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று அதி காலை 4 மணியளவில் கஞ்சாவுடன் இந்திய மீன வர்களைக் கைது செய்ததாக மண்டைதீவு கடற்படை யினர் தெரிவித்தனர். அவர்கள் விசாரணையின் பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

இதேவேளை, இந்தக் கஞ்சாவைக் கொள்வனவு செய்ய வந்திருந்தனர் என்ற சந்தேகத்தில் இருவரை மதுவரித் திணைக்களத்தினர் கைது செய்துள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5,26,105)

## மாவையில்லா...

பொருத்தமானவர். ஏதேனும் காரணங்களால் அவர் களமிறங்காதவிடத்து அடுத்த தெரிவு நானாகவே இருக்க வேண்டும். கட்சி இதனைச் செய்யாதவிடத்து அதற்கு எதிராக என்னுடைய செயற்பாடுகளை முன் னெடுப்பேன். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞா னம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபையில் தான் என்னுடைய சேவை தேவை என்று நினைக்கின்றேன். ஒரு திறமான சபை யிலேயே எங்களுடைய செயற்பாடுகள் திறமையாக அமையவில்லை என்பது என்னுடைய கவலை.

அடுத்த ஒரு மாகாண சபைத் தேர்தல் நடக்குமாக இருந்தால் நான் மாகாண சபையூடாக மக்களுக்குச் சேவையாற்றலாம். சேவையாற்ற வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத் தேர்த லைப் பற்றி நான் சிந்திப்பதில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து பின்னர் தான் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும். இப்போ துள்ள சூழ்நிலையில் மாவை.சேனாதிராசா தான் தலைமைத்துவத்தோடு ஏனைய பங்காளிக் கட்சிக ளின் தலைவர்களது ஆதரவோடு பொருத்தமானவ ராக இருப்பார்.

மாகாண சபைத் தேர்தலில் அவர் போட்டியிட்டால் அவரை ஆதரித்துச் செயற்படுவேன். அவர் களமி றங்காவிட்டால் அந்த இடத்துக்கு நான் பொருத்தமா னவன். மற்றவர்கள் என்ன சொன்னாலும் பரவா யில்லை. மாகாண நிர்வாகம், மாகாண ஏற்பாடுகள் சட்டங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருக் கின்ற வகையில் எனக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நிச்சயமாக நான் முன்வைப்பேன்.

இதற்கு மாறாக கட்சி ஒரு முடிவெடுத்தால் அது மக்களின் தீர்ப்பு. அப்படியான தேவை ஏற்பட்டால் அல்லது எனக்கு அதில் உடன் பாடு இல்லை என்றால் இது தான் இந்த நாட்டு மக்களுடைய விதி என்று நினைத்து ஒதுங்கி விடுவது எனக்குப் பிரச்சினை என்று நான் நினைக்கவில்லை.

தவறான தெரிவு வருகின்ற போது அதற்கு எதிரான கருத்தை நான் மக்களுக்குச் சொல்லுவேன். அது சுயநலமாக இருக் காது. பொது நலமாக இருக்கும்.

வடக்கு மாகாண சபையின் இரண்டாவது காலத்தை நிர்வகித்து ஓரளவுக்கு ஒழுங்கு படுத்திய பின்னர் வருகின்றவர்கள் அதைப் பின் தொடர்ந்து நடப்பதற்கு ஒரு முன்னுதா ரணமான சபையாக அடுத்த சபையை உருவாக்க வேண்டுமென்று நான் நினைக் கிறேன்.

ஆக வெறுமனே கதிரையில் இருந்து கலாட்டும் இடம் அல்ல அது. பொறுப்பு வாய்ந்த செயற்பாட்டிற்கான இடம். அதிலும் நிர்வாகப் பதவிகளுக்கு வரக் கூடியவர்கள் சட்டம் தெரிந்தவர்கள் அனுபவம் உள்ளவர் கள் தொடர்பாடல் உள்ளவர்கள் வர வேண் டுமென்று நான் எதிர்பார்க்கின்றேன். ஆனால் தமிழ் அரசுக் கட்சியாலோ அல்லது கூட்டமைப்பாலோ அவ்வாறான சூழ்நிலை இல்லையென்றால் அதற்கு இடமளித்து விட்டு தனிப்பட்ட முறையில் என்னுடைய செயற்பாடுகள் அமையும்- என்றார். (ஒ-5)




தோற்றம்
01 . 09 . 1983

மறைவு
31 . 01 . 2020

**தனபாலசுந்தரம் அச்சுதன்**

யாழ் மானிப்பாயை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிட மாகவும் கொண்ட தனபாலசுந்தரம் அச்சுதன் கடந்த (31.02.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஜேர்மனியைச் சேர்ந்த தனபாலசுந்தரம் வரதக்சனி தம்பதிகளின் அன்பு மகனும் யாழ் அச்சுவேலி தெற்கைச்சேர்ந்த தவீந்திரதாஸ் பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் கிரிஷாணியின் அன்பு கணவரும் கோகிலன், அருணன் ஆகி யோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் கிரிஷாந்தன், பிரசாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் டினுசன், சன்சனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.02.2020) புதன்கிழமை 1.00 pm தொடக்கம் 3.00 மணிவரை Friedhof strave, 48493 wettringen, Germany யில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்: குடும்பத்தினர்

- ஜேர்மனி -
04917647103802 (கிரிஷாணி)
004917642936381 (வரதக்சனி)

- அச்சுவேலி -
077 0050344 (கிரிஷாந்தன்)
021205 8618 (தாஸ்)

## மரண அறிவித்தல்



தோற்றம்
04 ... 01 ... 1950

மறைவு
02 ... 02 ... 2020

**திருமதி புவனேஸ்வரி இராஜநாயகம்**

சிறுப்பிட்டி தெற்கு. நீர்வேலியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராஜநாயகம் நேற்று **(02.02.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இந்திரை தம்பதியின ரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா இராசம்மா தம்பதியினரின் மருமகளும். இராஜநாயகத்தின் (சுன்னாகம்) பாசமிகு மனைவியும் தர்சிகாவின் அன்புத் தாயாரும் கமலாதேவி (முத்து- சிறுப் பிட்டி). வள்ளிப்பிள்ளை (அச்செழு). பத்மநாதன் (பத்தன்- சுவிஸ்). நட ராசா (நடா-கனடா). கனகாம்பிகை (கமலக்கொடி- அமெரிக்கா). புண்ணிய மூர்த்தி (மூர்த்தி- அமெரிக்கா). மனோ (கனடா) ஆகியோரின் சகோ தரியும் பரமநாயகம் (பரம்- சங்குவேலி). பாலசுப்பிரமணியம் (பாலன்- சுன்னாகம்). விமலா (கொழும்பு). காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் வைத்திலிங்கம். சற்குணவதி. சுசீலாதேவி. காலஞ்சென்ற சிவராசா மற்றும் பாலராசா. கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர். நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. தகவல்: குடும்பத்தினர்

தொலைபேசி இலக்கம்:- 077 138 2606

# மரண அறிவித்தல்கள்



## பூலோகநாதன் கண்ணம்மா

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம், நடுவுத்திருத்தியை பிறப்பிடமாகவும், பெருங்காடு 3ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூலோகநாதன் கண்ணம்மா நேற்று **(02.02.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அபிராமிப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பூலோகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கண்ணையா மற்றும் பாலசிங்கம் காலஞ்சென்ற முத்தம்மா, பூமணி, மங்கையற்கரசி, காலஞ்சென்ற பூபதி மற்றும் தர்மலிங்கம், முத்துலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும் சிறிதரன்(கனடா), ஸ்ரீகாந்தன் (வேலணை பிரதேசசபை), தவரஞ்சினி (உபதபால் அதிபர் குறிகாட்டுவான்), வாகீசன், வசிகரன் (தனியார் பஸ் உரிமையாளர் **776**) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயந்தி (கனடா), வசந்தகுமாரி, ஜெயகாந்தன் (ஜேர்மனி), கௌரி, வனிதா (ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரியங்கா, கிசோர், டிலீப்காந், ஐஸ்னிகா, சங்கீர்த்தணன் (ஜேர்மனி), அபிநயா, அகீபன், கஜீத், அதீஸ், நிதுசன், கரிகரன், அம்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று **(03.02.2020)** திங்கட்கிழமை நடைபெற்று பிற்பகல் **2.00** மணியளவில் முனையப்புலன் இந்துமயானத்தில் தனகஞ்செய்யப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**3ஆம் வட்டாரம், புங்குடுதீவு.** **தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 077 833 2701**



பிறப்பு 20 . 09 . 1938 — இறப்பு 02 . 02 . 2020

## ஆறுமுகம் முருகேசு

பருத்தித்துறை புலோலி தெற்கினைப்பிறப்பிடமாகவும் நவக்கிரி புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் முருகேசு நேற்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் லக்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - மகாலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் கமலாசனிதேவியின் அன்புக்கணவரும் சிவரூபி (கனடா), பிரதீபன் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சொரூபவதி (கனடா) சைலேஸ்வரன் (பிரதம செயலாளர் அலுவலகம் திட்டமிடல் வடக்கு மாகாணம்) ஆகியோரின் பெரியதந்தையும் காலஞ்சென்ற சிவகாந்தன், தர்மினி, (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிருணனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பத்மாதேவி மற்றும் சரஸ்வதி, சிதம்பரநாதன், கமலாதேவி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு சகேதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.02.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**சி.சைலேஸ்வரன் (பெறாமகன்)**

**077 605 9864**

### புலிகளின்...

பென் ட்ரைவ் ஆகியவற்றுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலிகளின் துண்டறிக்கைகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ தேசிய அடையாள அட்டை மற்றும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம், கரைச்சி பிரதேச செயலர், வவுனியா பிரதேச செயலர், வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு, இராணுவ புலனாய்வுத்துறை ஆகியவற்றின் போலி இறப்பர் முத்திரைகள் என்பனவும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி சிறப்பு அதிரடிப் படையினர், விவேகானந்த நகர் கிழக்கில் உள்ள வீடொன்றில் நடத்திய தேடுதலின் போதே இவை மீட்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்தில் 37 வயதான ஒருவரைக் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஒ-5-35-105-214)

### நடந்தது...

யிடம் வலியுறுத்தி வருகின்றன என்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் 'காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கான பதிலைப் பெற்றுக்கொடுப்பதற்கான முக்கிய பணியைச் செய்துவரும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பணியகத்தினரைச் சந்தித்தேன். இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அதுகுறித்த விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என்றுமே ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன, என்றார்.

(ஒ-5)

## யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
## பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| இல | பயிற்சி விவரம் | பயிற்சிக் காலம் | அடிப்படை கல்வித்தகைமை |
|---|---|---|---|
| 01 | 1.1 கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர - கனிஷ்ட பிரிவு | 04 மாதம் | எட்டாம் வகுப்பு சித்தி |
| | 1.2 கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர - சாதாரண பிரிவு | 06 மாதம் | க.பொ.த. சாதாரணதரம் சித்தி |
| | 1.3 கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர - உயர்பிரிவு | 10 மாதம் | க.பொ.த. உயர்தரம் சித்தி |
| 02 | கணினிப்பயிற்சி நெறி - MS Office | 03 மாதம் | க.பொ.த.சாதாரண தரம் |

மேற்படி பயிற்சிக்கான விவரங்களையும் விண்ணப்ப படிவத்தையும் சபையின் அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.


**விண்ணப்ப முடிவுதிகதி - 15.02.2020**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி - செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,**
**இல 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**குறிப்பு :- கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து சித்தியடைபவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு உண்டு.**

(m 12440) (13.17)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வன்
### ரசிக்குமார் ரதுஷன்

**அன்னை மடியில் 21.08.2000** — **இறைவன் அடியில் 21.12.2019**

உள்ளம் துடிக்குது உதிரம் கொதிக்குது
உன்பிரிவைத் தாங்க இதயம் மறுக்குது
கற்பனைக் கோட்டையைக் கட்டி கட்டுக்கணக்கின்றி
நாள்தோறும் மனதில் நாம் கட்டி மகிழ்ந்த
குடும்ப எண்ணக்கோட்டைகள் குதூகலித்த பொழுதுகள்
குற்றுயிராய் உழல்கின்றன
எம் அன்பு மருமகனே மைத்துனனே உம் நினைவுகள்
என்றும் எம்மில் வாழும்
உன் ஆத்மா சாந்தியடைய
கலட்டி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்


செல்வன் ரசிக்குமார் ரதுஷனின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று **03.02.2020 திங்கட்கிழமை** ஜேர்மனியில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

**மாமாமார், அத்தைமார், மைத்துனர்கள்**

## மரண அறிவித்தல்

### குமாரவரோதயர் சிவகடாட்சம்பிள்ளை

(ஓய்வுநிலை மின் அத்தியட்சகர்)



மாவிட்டபுரம், பளை, வீமன்காமத்தை பிறப்பிடமாகவும் இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவரோதயர் சிவகடாட்சம்பிள்ளை (ஓய்வு நிலை மின் அத்தியட்சகர்) நேற்று **(02.02.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் துணைவரும் காலஞ்சென்றவர்களான சிவகுமாரன் (மாகாணசபை உத்தியோகத்தர்), சத்திய குமாரன் (வரோதயன்-சுகாதார பரிசோதகர்) மற்றும் சிவானி, சியாமினி ஆகியோரின் தந்தையும் மலர்விழி, ஜெயகௌரி, ஸ்ரீமுருகையா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சிவதாசபிள்ளை, சிவசோதிப்பிள்ளை, பாலசுந்தரம்பிள்ளை, சிவசிங்காரியபிள்ளை மற்றும் சிவபூரணம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், அக்சனா, ஆர்த்தனா, அருணன், சுகாபரன், கோபி, மகிஷா, அனுசா, அக்சயா, அஸ்வனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(03.02.2020)** திங்கட்கிழமை பிற்பகல் **2.30** மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று உரும்பிராய் வடக்கு இருளன் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பா.இரமணாகரன் - ஆசிரியர் (மருமகன்)
077 854 8380

## வேலையாள் தேவை

யாழ். மடத்தடி சாப்பாட்டுக் கடை ஒன்றிற்கு மாலை நேரம் கடையினை நடத்தக்கூடிய ஒருவர் தேவை. அத்துடன் சமையல் உதவிக்கு பெண் ஒருவர் தேவை.

**077 330 7073**

## வீட்டுவேலைக்கு ஆள்கள் தேவை

கைதடியில் உள்ள வீடு ஒன்றுக்கு வேலை செய்வதற்குப் பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 165 0964, 076 880 7272**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111

## துயர் பகிர்தல்



எமது நிறுவனத்தின் பணியாளர்
**மு.இராஜரட்ணம்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கோவிந்தம்மா முருகையா**
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்**
**யாழ் கோ - திருநெல்வேலி.**

(m.cs 30971) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவு



பிறப்பு 10 . 04 . 1937
மறைவு 03 . 02 . 2019

**ஐயாத்துரை (ஆடியபாதம்)**
**யாக்கோபு**

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆடி உன்னை மறப்போமா?
வாடி நிற்கின்றோம் உமை இழந்து
தாங்காத துயரத்தோடு தவிக்கின்றோம் ஐயா
நீங்காத உம் நினைவுகளோடு பிரார்த்திக்கின்றோம்

(ANE/ 1101) (11,17)

நிரந்தர முகவரி :- சந்தை குறுக்குவீதி, காங்கேசன்துறை.
தற்காலிக முகவரி:- துன்னாலை மேற்கு, கரவெட்டி

குடும்பத்தினர்.
077 541 7466

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 23.07.1902
ஆண்டவன் அடியில் 18.01.1982

**அமரர் சின்னையா தம்பு**



அன்னை மடியில் 28.09.1926
ஆண்டவன் அடியில் 15.01.2019

**அமரர் தம்பு இராசமணி**

திதி:- 03.02.2020

பிள்ளைகள் வாழ்வுக்காய் தன்னையே உருக்கி வாழ்ந்து உற்றார், உறவினர், அயலவர்களுக்கு எந்தவேளையிலும் உதவி புரிந்து சொந்த பந்தம் ஊர் உறவுகள் போற்ற வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து விண்ணுலகு சென்று ஓராண்டு பூர்த்தியில் தங்கள் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம்.
குடும்பத்தினர்.

(IN/12451) (11.17)

## மரண அறிவித்தல்



### திருமதி பத்திநாதர் லூர்த்தம்மா

6ஆம் வட்டாரம் மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், சின்னத் தோட்டம், கடற்கரைவீதி, பருத்தித்துறையை தற்காலிக முகவரியாகவும், அல்வாய் வடக்கு, சக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்திநாதர் லூர்த்தம்மா நேற்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.02.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் வடக்கு,
சக்கோட்டை.
(CS/30976)(11,17)

தகவல்:-
மகன் (பீற்றர்)

077 990 5213, 077 926 5477

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் செல்வலட்சுமி சுந்தரம் (செல்லம்)

(A.K.S. சாவகச்சேரி)


கடந்த 04.01.2020 அன்று இறைபதம் அடைந்த எம் இதய தெய்வம் எங்கள் அன்னையின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.02.2020) திங்கட்கிழமை எங்கள் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்து அனுதாபத்தை தெரிவித்த அனைவருக்கும் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டும், மலர்வளையங்கள் சாத்தியும் தமது அனுதாபங்களை தெரிவித்த நல் உள்ளங்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"லட்சுமி பவனம்"
கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி. (m.12461) (13.17)

குடும்பத்தினர்.
077 110 2935

# தமிழின வரலாற்றில் முதுமை



மனிதர்களில் முதுமைப்பருவம் என்பது முக்கியமானது. தனது அனுபவ அறிவினூடாக தனது வாழ்க்கையை மேம்படுத்துவதோடு ஏனையோருக்கும் வழிகாட்டியாக விருந்து அவர்களது வாழ்க்கை நெறிகளையும் மனிதன் செம்மைப்படுத்துகிறான். தமிழின வரலாற்றிலே கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை என்பது அலாதியானதும், ஆழமானதும் ஆகும். தமிழினம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை பின்பற்றப்பட்டு முதியவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர். எந்தவொரு செயற்பாடுகளையும் முதியவர்களின் ஆலோசனைகளைப் பெற்றபின்பே இளையோர் செய்தனர். தமிழின வரலாற்றில் பிள்ளைகள், பெற்றோர் என்ற கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையிலே ஒருவரையொருவர் பேணி நிற்பதென்பது தமிழின பண்பாடு கலாசாரத்தின் எதிர்பார்ப்பாக மட்டுமன்றி மரபுவழி வாழ்வாகவும் கொள்ளப்பட்டது. அந்த வகையிலே சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக்கொண்ட இனமாகத் தமிழினம் இன்றைய நிலையிலும் மதிக்கப்பட்டு வருகின்றது.

**முதியோர் என்போர்**

பிறேசில் உருகுவே போன்ற தென்னமெரிக்க நாடுகளில் 40 வயதின் ஆரம்பம், முதியோர் வயதாகக் கொள்ளப்படுகிறது. அமெரிக்கா போன்ற குறிப்பிட்ட ஒரு சில நாடுகளிலே 70 வயதை முதியோர் வயதாகக் கொண்டுள்ளமையையும் காணலாம். ஆனால் ஐ.நா போன்ற பொதுஅமைப்புக்கள் உலகளாவிய ரீதியில் 60 வயதை முதியோர் வயதாக 1980ஆம் ஆண்டளவில் அறிவித்தன.

பொதுவாக மூப்படைதல் என்பது உலகளாவிய ரீதியில் ஒரு பருவமாறுதல் என்ற போதிலும் அவை தொடர்பான பிரச்சினைகள் ஒரு சமூகத்தின் கலாசார, பண்பாட்டுக் கோலங்கள் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. சமூக பண்பாட்டுச்சூழல் மரபுகள்இ பழக்கவழக்கங்கள், சமய சம்பிரதாயங்கள்இ சடங்குகள், கட்டுப்பாடுகள் என்பவை மட்டில் இலங்கை நாட்டுக்கும, மேலைநாடுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையிலே, இலங்கையில் முதியவர்கள், பெற்றோர்களைப் பிள்ளைகளே தம் வீட்டில் வைத்துப் பராமரிக்கின்றனர். ஆனால் மேலைநாடுகளில் முதியோர் வயதை அடைந்த ஒருவரை அந்த நாட்டு அரசாங்கங்கள் பிள்ளைகளிடமிருந்து வேறுபடுத்தி தமது பொறுப்பிலேயே அவர்களுக்கான சகல வாழ்வதார உதவிகளையும் வழங்கிச் சிறந்த முறையில் பராமரித்து வருகின்றன. ஆனால் எமது பண்பாட்டு நிலை ஏற்கெனவே குறிப்பிட்டது போல் முற்றிலும் மாறுபட்டது. எமது மரபுவழி நியமங்கள், விழுமியங்கள், கலாசாரங்கள் பெற்றோரை மற்றும் முதியவர்களை இறுதிவரை அவர்களது பிள்ளைகளே பேணவேண்டுமென வலியுறுத்தி நிற்கின்றன.

தமிழர்தம் குடும்ப வாழ்வில், மதிப்பும் அதிகாரமும் கொண்ட பாத்திரமாக முதுமையானது. இயல்பாய் இனிதாய் அமையும் வாழ்வின் எச்சங்களை இன்றும் எமது மரபுவழிக் கிராமங்களில் காண முடிகிறது. ஆயினும், தற்போது நிகழும் எமது சமூக மாற்றங்களின் காரணமாக, எமது கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. இதனால் முதியவர்களின் நிலையும்தளரத்தொடங்கியுள்ளது. 'எமது வாழ்வை, வாழ்வின் நம்பிக்கைகளை விளங்கிக்கொள்வது அல்லது விளங்கிக்கொள்வதற்கான வல்லமையினைத் தருகின்ற அறிவு' அவசியமாகிறது. ஏனெனில் முதியவர்கள் தாமாகச் சமூகத்தை விட்டு ஒதுங்க நினைப்பதும், அவர்களை ஒதுக்கிவிட நினைக்கின்ற ஒரு சமூக நிலைப்பாட்டிலும் முதியவர்களின் நிலை காணப்படுகின்றது.

**முதியோர் எதிர்கால நலனில் அக்கறை கொள்ளவேண்டும்**

முதியோர்களின் எதிர்கால நலன்கள் தொடர்பாக முழுமையாக அக்கறை செலுத்தும் நிலை உலக நாடுகளிடையே இன்று காணப்படுகின்றது. உதாரணமாக , முதியோர் தொடர்பான நிலைப்பாட்டில் கனடா நாடு மிக முன்னேற்றம் கண்ட நாடாகத் திகழ்கின்றது. சமூக பொருளாதார கலாசார மாற்றங்களின் வடிவங்களாகக் காணப்படும் கைத்தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், உள்நாட்டு வெளிநாட்டு இடப்பெயர்வுகள், ஊழியர் சந்தையில் அதிகரித்து வரும் பெண்களின் பங்கேற்பு போன்ற செயற்பாடுகள் நாளுக்கு நாள் குடும்பக் கட்டமைப்பில் பலவித மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இவ்வாறான மாற்றங்களுக்குள் முதியோரை உள்வாங்கி அவர்களை பராமரித்த



லில் இன்றைய சமூகம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றது. எது எவ்வாறிருப்பினும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலே முதியோரது சமூக, பொருளாதாரப் பாதுகாப்புக்கான முக்கிய பங்கை அந்தந்த நாடோ அல்லது தனிப்பட்ட குடும்பமோ ஏற்க வேண்டியுள்ளது.

முதியோர் வயது என்பது 60 வயதுக்கு மேல் என உலகளாவிய ரீதியில் வரையறுக்கப்பட்ட நிலையில், முதியோர் சனத்தொகை துரித கதியில் அதிகரித்து வருவது பற்றி பல்வேறு ஆய்வாளர்களும் பலவகையான எதிர்வுகூறல்களை கூறிவருவதைக் காணக்கூடியதாய் உள்ளது. உலகின் மொத்த சனத்தொகையில் 60 வயதுக்கும் அதற்கு மேற்பட்ட வயதினரது விகிதாசாரமானது 2000ஆம் ஆண்டுக்கும் 2050க்கும் இடைப்பட்ட காலத்தில் இரட்டிப்பு வளர்ச்சியைக் கொண்டிருக்கும் என புள்ளிவிபரவியல் திணைக்களம் கூறியுள்ளது. இந்த வளர்ச்சியானது 10 வீதத்திலிருந்து 21 வீதமாகக் காணப்படும் என்றும், 2002ஆம் ஆண்டில் உலகில் மொத்த முதியோர் சனத்தொகையில் 52 வீதமானோர் ஆசியாவிலும் பசுபிக் பிராந்தியத்திலும் உள்ளனர் எனவும் இந்த விகிதத்தின் அடிப்படையில் 2025ஆம் ஆண்டில் இது 59 வீதமாக அதிகரிக்கும் எனவும் கூறப்பட்டமையைக் காணலாம்.

இவ்வாறு உலக நாடுகளிடையே முதியோர் தொடர்பான விழிப்புணர்வு நிலை எழுச்சிபெற முதியோர் சனத்தொகையும் உலகளவில் அதிகரித்தே செல்லும் என்பது இன்று நிதர்சனமாகிக் கொண்டு வருகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளிடையே முதியோர்களுக்கான காப்பகம் அமைக்கப்பட்டு அந்தந்த நாட்டு அரசுகள் அவர்களைப் பராமரித்து வருகின்றன. ஆனால் வளர்முக நாடுகளிடையே அவ்வாறான அரச காப்பகங்கள் இல்லையாயினும் முதியோர் தொடர்பான அக்கறையும், அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளும் என்றுமில்லாத அளவிற்கு துரிதம் பெற்றுள்ளன. இன்று முதியோர் பிரச்சினை என்பது ஒரு குடும்பத்தின் பிரச்சினையோ அல்லது சமூகப்பிரச்சினையோ என்ற நிலைமாறி அது ஒரு சர்வதேசப் பிரச்சினையாக மாற்றம் பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழ் இனத்தைப் பொறுத்தவரை காலங்காலமாகக் கடைக்கப்பிடிக்கப்பட்டு வந்த தாய், தந்தை,பிள்ளைகள், பேரன், பேர்த்தி என்ற தொடரான குடும்ப உறவுகளின் சங்கமமானது தற்கால சூழ்நிலையில் விரிவடைந்து செல்வதைக் காணலாம். போர்ச்சூழல், இடப்பெயர்வு போன்ற காரணிகளே இதற்கு ஆரம்ப காரணிகளாக இருந்தாலும், எமது தமிழ் பண்பாட்டை நாங்கள் இழந்து வருகிறோம் என்பது பொருத்தமானதா? எவ்வகையான இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதும் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையி னின்றும் வழுவாமல் வாழ்ந்த தமிழினம் தன் இருப்பை இழந்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. இன்று உலகம் முழுவதும் முதியோர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அறைகூவல் விடுக்கப்பட்டு முதியோர்கள் பாதுகாப்பாகவும் அவர்களுக்கான சகல உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்ற ரீதியில் அமைந்த இன்றைய உலக இயக்கமானது, தமிழ் இனத்தின் பாரம்பரிய கலாசார விழுமியங்களே என்பதில் தமிழினம் பெருமையடைய முடியும். ஆனால் அதே தமிழினத்தில் இன்று நடப்பது என்ன? பெற்றோர்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கிறார்கள். முதியோர் இல்லங்களிலே விடப்படுகிறார்கள். மிகப்பழைய காலத்திலிருந்து இன்று வரை தமிழ்ப் பண்பாடு கலாசாரம் காத்து நின்ற எமது முதியோர்கள் இன்று தெரு நாய்களுக்கு சமமாக உலாவருவது ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்குமே வெட்கம். ஆகவே எமது முந்தைய தமிழரின் முதன்மைக் குறிக்கோளாக விளங்கிய 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பது போன்ற பொன்மொழிகளுக்கு உயிர்கொடுத்து முதியவர்களைக் காத்து முதன்மையடைவோம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சாது மிரண்டால்.....

ஒரு காட்டு வழியே யானை ஒன்று வந்துகொண்டிருந்தது. அந்தப் பாதையைக் கடந்து கொண்டிருந்த நான்கு எறும்புகள் யானையைக் கண்டதும் தமக்குள் பல விதமாக விவாதிக்கத் தொடங்கின.

முதலாவது எறும்பு கொஞ்சம் ஆத்திரத்தோடு, "இவனுக்கு என்ன துணிச்சல்? நாங்கள் செல்லும் பாதையில் குறுக்கிட்ட இவனைச் சும்மா விடக்கூடாது. அப்போது தான் புத்தி வரும்"என்று சொன்னது.

மற்ற எறும்பு இதைக் கேட்டவுடன், " ஆம், எனக்கு வருகின்ற கோபத்துக்கு இந்த யானையை அப்படியே தூக்கி எறியப் போகிறேன்" என்று வீராவேசமாகச் சொன்னது.

அடுத்த எறும்போ " வேண்டாம், அப்படி எறிந்தால் பாதை அடைபட்டு , ஏனையவர்கள் போய் வர முடியாமல் போய்விடும்" என்று தடுத்தது.

கடைசியாக இன்னொரு எறும்பு சொன்னது "சரி, இதுவே முதலும் கடைசியுமாக இருக்கட்டும்,. அந்த யானையை மன்னித்து விடுவோம்" என்று அது சொன்னதை மற்றைய எறும்புகளும் ஏற்றுக் கொண்டு அப்பால் நகர்ந்து போயினவாம்.

இந்தக் கதையில், அந்த யானையை எதுவுமே செய்ய முடியாது என்று தெரிந்தும், எறும்புகள் தங்கள் மனத் திருப்திக்காக வாய்க்கு வந்ததையெல்லாம், அடித்து விட்டிருந்தன. அது அவைக்கு ஒரு விதச் சந்தோசம். அப்பிடிச் சுய சந்தோசப்பட்டுக் கொள்வதற்காக , சிலர் பரப்பிய தகவல்கள் கடந்த சில வாரங்களாக உலவி வந்தன. தமிழ் மக்களின் அதிகபட்ச ஆதரவைப் பெற்ற அரசியல் சக்தியான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், தமிழரசுக் கட்சியினதும் தலைமைத்துவங்களில் மாற்றம் தேவை என்ற கருத்தும், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் திறமையுள்ளவர்களுக்கு, அவர்களை நேர்முகம் செய்வதனூடாக இனங்கண்டு தெரிவு செய்து போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் , மாவை சேனாதிராசா தேர்தலில் போட்டியிட மாட்டார் எனவும் அந்தக் கதையாடல்கள் அமைந்திருந்தன.

யானையைப் பார்த்து, எறும்புகள் பொங்கியது போன்றிருந்த இந்தக் கதையாடல்களுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா மிக அழுத்தமான காத்திரமான முற்றுப்புள்ளியொன்றை வைத்துள்ளார். " கூட்டமைப்பினதும், தமிழரசுக் கட்சியினதும் தலைமைத்துவ மாற்றத்துக்கு இப்போதைக்கு எவ்வித அவசியமும் இல்லை. நான் தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்பதை நான் தான் தீர்மானிக்க வேண்டும். வேறெந்த தனிநபரும் கட்சிசார் முடிவுகளைத் தீர்மானிக்க முடியாது" என்று ஒரே போடாகப் போட்டுள்ளார். இதனால் தம்முடைய கதையாடல் பரவி, ஒரு கருத்துருவாக்கமாக மாறி, அதைவைத்து மாவை.சேனாதிராசாவை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வேட்டு வைத்து , அந்த இடத்தில் குந்தலாம் எனக் கணக்குப்போட்டவர்களுக்கு மாவை சேனாதிராசாவின் இந்த வெட்டு ஒன்று;துண்டு இரண்டு ரீதியிலானபதில்கள்செருப்படியாகவிழுந்துள்ளன.

வழக்கமாக அதிகாரத்துக்கு எதிராக 'போராட்டம் வெடிக்கும்' என்றெல்லாம் கடுந்தொனியில் எச்சரிக்கை விடுக்கும், மாவை சேனாதிராசா , உட்கட்சி விவகாரங்களில் மென்போக்கையே கடைப்பிடித்து வந்திருந்தார். அதனால் தான் முதலமைச்சர் வேட்பாளராக 'மாவை தான் களமிறங்க வேண்டும்" என தமிழரசுக் கட்சியின் தொகுதிக்கிளைகள் எல்லாம் ஒரே குரலில் கோரிய போதும், சம்பந்தரின் தெரிவான விக்னேஸ்வரனுக்காக, அந்த வாய்ப்பை விட்டுக் கொடுக்குமளவுக்கு நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டி வந்தவர்தான் மாவை. அப்படிப்பட்ட அவரின் விட்டுக் கொடுப்புடனான தலைமைத்துவத்தைப் பலவீனமாக எண்ணிய சிலர், அதில் குளிர்காய எண்ணியே கட்சிக்குள்ளும், மக்களிடையேயும் குழப்பங்களை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். ஆனால் சாதுவாக இருந்த மாவை சேனாதிராசா இப்படி , உறுதியான நிலைப்பாட்டை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. இப்போது பழைய 'கெத்தோடு' மாவையர் களமிறங்கி இருப்பதும், உறுதியான முடிவுகளை எடுப்பதும் கட்சிக்கு மட்டுமல்லாது, தமிழ்த் தேசியம் என்ற கொள்கை வழியில், கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்களுக்கும் ஆரோக்கியமானதாக இருக்கப் போகின்றது.

## விசாரணை செய்ய கோத்தா பணிப்பு


கொழும்பு, பெப்.3

எயார்பஸ் கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் ஜனாதிபதியின் பணிப்புரையின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விமானக் கொள்வனவு தொடர்பில் சிறிலங்கன் விமானசேவை மற்றும் எயார்பஸ்நிறுவனத்துக்கு இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலின் போது முறைகேடுகள் இடம்பெற்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகமுழுமையான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கூட்டணியாகவே தேர்தலில் போட்டி



கொழும்பு, பெப்.3

பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிடுவது எமது நோக்கமல்ல .

அனைத்து பங்காளி கட்சிகளுடன் கூட்டணிய மைத்தே தேர்தலை வெற்றி கொள்வோம்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மூன்றில் இரண்டு பெரும்பான்மையான ஆதரவுடன் அரசு தோற்றம் பெறாவிட்டால் முரண்பாடுகள் மாத்திரமே தொடரும். இந்த முறை அந்தத் தவறு திருத்திக் கொள்ளப்படுவது அவசியமாகும்.

சிறிலங்காபொதுஜனபெரமுன இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் பங்காளி கட்சிகளுடன் கூட்டணியமைத்தே போட்டியிடும். சின்னம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. ஆளும் தரப்பைப் பலவீனப்படுத்தும் எதிர்கட்சியின் முயற்சிகள் வெற்றி பெறாது . தேர்தலை வெற்றி கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பசில் ராஜபக்ச தலைமையில் நடைபெறும்-என்றார். (எ)

## பெப். 4ஆம் திகதியன்று கொடியேற்றப் பணிப்பு

கொழும்பு, பெப்.3

சுதந்திர தினத்தை முன்னிட்டு இம் மாதம் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரையான ஒரு வார காலத்துக்கு அனைத்து வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் தேசியக் கொடியை ஏற்றிவைக்க வேண்டும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

72ஆவது சுதந்திர தின வைபவம் எதிர்வரும் 4ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதற்கு அமைவாக பல வீடுகளிலும் அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களில் மின்ஒளியால் அலங்கரிக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 3 மற்றும் 4ஆம் திகதிகளில் மின் ஒளி அலங்காரம் அரச நிறுவனங்களில் இடம் பெறவுள்ளன.

அதேவேளை 72ஆவது சுதந்திர தின வைபவத்தில் இராணுவத்தின் குதிரைப் பிரிவும் பங்கேற்கவுள்ளது. இலங்கை இராணுவத்தின் குதிரைப்படை தேசிய சுதந்திர தின வைபவத்தில் இம்முறை இரண்டாவது முறையாக பங்கு கொள்கின்றது.

72ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இலங்கை கடற்படை 4ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு காலி முகத்திடலை மையமாகக் கொண்டுபலநிகழ்ச்சிகளை நடத்தத்திட்டமிட்டுள்ளது.

அன்றைய தினம் காலி முகத்திடல் கடல் பகுதியில் நங்கூரமிட்ட கடற்படையின் உயர் தொழில்நுட்ப ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்கள், கடற்படை துரித தாக்குதல் படகுகள் மூலம் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகள், அங்கம் பொர நிகழ்ச்சிகள் மற்றும் பல கடற்படை நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்க பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)

## வனங்களில் தீ



கொழும்பு, பெப்.3

நாட்டிலுள்ள வனப் பகுதிகளில் காட்டுத் தீ பரவுவது அதிகரித்துள்ளது என்று வனப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள வனப் பகுதிகளில் கடந்த மாதத்தில் அதிக தீப்பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.ஏ.சி. வேரகொட குறிப்பிட்டுள்ளார்.

வறட்சி மற்றும் மனித செயற்பாடுகளால் வனப்பகுதிகளில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் தற்போது பரவிய சம்பவங்கள் அதிகரித்துள்ளது என்று வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரவு வேளைகளிலேயே தீ மூட்டப்படுள்ளது என்று தெரிவித்துள்ள வனப் பாதுகாப்புத் திணைக்களம், இதனால் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் சிக்கல் தோன்றியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, நுவரெலியா - நானுஓயா எடின்பேர்க் தோட்டத்திலுள்ள வனப்பகுதியில் தீ பரவியுள்ளது. நேற்றுமுன்தினம் நண்பகல் வேளையில் தீ பரவ ஆரம்பித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி பொலிஸாரும் நுவரெலிய வனப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (எ)

# உலகம் என்ற சொல்லுக்கு பொருள் அறிக!

பேராசிரியர். ம. இரகுநாதன்,
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

'அனைத்துலக' என்பதன் அர்த்தம் என்ன?என்றதலைப்பில்20.01.2020 செவ்வாய் உதயனில் ந.பரமேஸ்வரன் மீண்டும் தனது ஐயத்தை வெளிப்படுத்தியிருந்தார். 'அனைத்துலக' என்ற தொடரில் உள்ள 'உலகம்' என்ற சொல்லுக்கே நான் விளக்கம் கூறியிருந்தேன் என்றும் 'அனைத்து' என்ற சொல்லுக்கு விளக்கம் கூறவில்லை என்பதும் அவரது குற்றச்சாட்டு.

'உலகம்' என்ற சொல் குறிக்கும் பொருளைப் புரிந்து கொண்டால் அனைத்துலகம் என்பதை விளங்கிக்கொள்ள அகராதிகள் தேவைப்படாது. மேலும் பரமேஸ்வரனுக்கு 'அனைத்துலக' என்றால் Whole World என்று ஆங்கிலத்தில் பொருள் உள்ளது என்று தெரிந்திருக்கின்றது. இங்கு Whorle World என்பதை அவர் முழு உலகமும் என்று பொருள் கொண்டு பாதாள உலகங்களையும் கற்பனைசெய்ய மாட்டார் என்றே கருதுகின்றேன்.

உலகம் ஒன்றுதான். அந்த உலகத்தில் பரந்து வாழும், தமிழ் ஆர்வம் கொண்டவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் மாநாடு என்ற பொருளிலேயே அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு என்ற தொடர் கையாளப்பட்டது.

அதுநிற்க, பரமேஸ்வரன் நாவலரின் கந்தபுராணப் பதிப்பில் பிழை கண்டு பிடித்த முதலாவது ஆளாக என்னைக் கருதுகின்றார்.

29.01.2020 புதன் கிழமை வெளியான உதயனில் கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை பசுபதி என்ற புராண படனம் செய்பவர் ஒருவரும் ஆறுமுக நாவலரிடம் தவறா என்று என் மீது ஆத்திரப்படுகின்றார். ஏட்டுப்பிரதிகளில் உள்ளவற்றை அச்சிற் பதிப்பிக்க முற்படும்போது எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்களை பதிப்பாசிரியர்கள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். ஆய்வுலகத்தவர்கள் தற்செயல் பிழைகள், குறிக்கோட் பிழைகள் எனத் தவறுகளை வகுத்து விளக்கியுள்ளனர். இவை ஆய்வுலகம் தொடர்பான பிரச்சினைகள். இது கோயிலில் புராணபடனம் செய்பவர்களுக்குரிய பிரச்சினையல்ல.

ஆறுமுகநாவலரின்பதிப்பில்பிழையே ஏற்படாது என்று நம்புவது உங்களின் நம்பிக்கை.

கல்லைக் கடவுளாக நம்பினால் அது கடவுள் தான், நம்பாதவர்களுக்கு அது வெறும் கல் மட்டும் தான். பிழை என்பது வேறு, தவறு என்பது வேறு.

ஆறுமுகநாவலரின் கந்தபுராணப் பதிப்பிற்கூடத் தவறுகள் இருக்கின்றன என்றேநான் குறிப்பிட்டிருந்தேன். கந்தபுராணத்தை ஏட்டிலிருந்து முதன் முதலில் அச்சிற் பதிப்பித்தவர் ஆறுமுக நாவலரே.

நாவலருக்குப் பின்வந்தவர்கள் நாவலரின் பதிப்பை அடியொற்றியே இதனைப் பதிப்பித்தனர். நாவலரின் கந்தபுராணப் பதிப்பில் உற்பத்தி காண்டம் திருநாட்டுப் படலத்தில் வருகின்ற ஒன்பதாம், பத்தாம், பதினோராம் செய்யுள்கள் பொருளாலும், பாவகையாலும், சொற்பிரயோகத்தாலும் ஒரே தன்மையினவாய் தேவகாண்டம் தெய்வயானையம்மை திருமணப்படலத்தில் 158, 159, 160ஆம் செய்யுள்களாக இடம்பெற்றுள்ளன. சான்றாக, உற்பத்திக் காண்டம் திருநாட்டுப்படலம் ஒன்பதாவது செய்யுள், 'வாடுகின்றார்சிலர் மயங்கி நெஞ்சொடும் ஊடுகின்றார்சில ருயிர்க்கின் றார்சிலர்பாடுகின் றார்சிலர் பணிகின்றார்சிலர் ஆடுகின்றார்சிலர் நறவ மார்ந்துளார்' என அமைய, தேவகாண்டம் தெய்வயானையம்மை திரும ணப்படலம்158ஆவது செய்யுள்பின்வருமாறு உள்ளது.

'வாடுகின் றார்சிலர் மகிழ்நர் வந்திட வூடுகின் றார்சில ருவக்கின் றார்சிலர் பாடுகின் றார்சிலர் பணிகின் றார்சிலர் ராடுகின் றார்சிலர் நறவ மார்ந்துளார்.'

இரண்டு செய்யுள்களிலும் ஒரு சில சொற்களே வேறுபட்டுள்ளன - தவிர இவை அனைத்து வகையாலும் ஒத்தனவாகவே உள்ளன.

விரிவஞ்சி ஏனைய செய்யுள்களை எடுத்துக்காட்டவில்லை. கந்தபுராணத்தில் கண்டுகொள்ளலாம்.

நாட்டார் பாடல்களில் ஒரே அடி திரும்பத் திரும்ப இடம்பெறுவதுண்டு. கந்தபுராணம் வாய்மொழி இலக்கியமல்ல. பெரும்புலவரான கச்சியப்பர் ஒரே தன்மையானசெய்யுள்களை அமைத்திருப்பார் என்று கருதமுடியாது என்பதால், நாவலர் இதனைக் கவனிக்கத் தவறிவிட்டார்.

இது அவரது பதிப்பிலும் குற்றம் காண வாய்ப்பாகிவிட்டது என்பதைப் புரிந்து கொள்ளவும்.

மேலும் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தனது கலாநிதிப்பட்ட ஆய்வு நூலான 'ஈழத்துத் தமிழ் உரைமரபு' என்னும் நூலில் இவ்விடயத்தை மிகவும் தெளிவாகவே எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலதிக விளக்கம் தேவையெனின் அந்நூலைப் பார்க்கவும். பார்த்துத் தெளிந்து மனதைச் சமநிலைப்படுத்திக் கொள்ளுங்கள். மனிதர்கள் தவறுவிடுவது இயற்கை. ஆறும்முகநாவலரும் மனிதரே என்பதால் தவறுகள் குற்றங்கள்அல்லஎன்பதைஉணர்ந்து உங்கள் நம்பிக்கையை மாற்றிக் கொள்ள முயற்சிக்கவும். ■

# பிரெக்ஸிட் விளைவுகள் என்னென்ன?



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியது. இதன் மூலம் தங்கள் பணக்கார உறுப்பு நாடு ஒன்றினை ஐரோப்பிய ஒன்றியம் இழந்து விட்டது.

11 மாத மாற்றக் காலகட்டம்வரை பிரச்சினையில்லை.

பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய தினசரி நடவடிக்கைகளில் இதுவரை எந்த மாற்றமும் இருக்காது, ஆனால் 2021க்கு பிறகுதான் மாற்றம் குறித்துத் தெரியவரும்.

லண்டனும் பிரஸல்சும் புதிய ஏற்பாட்டினை நோக்கி தங்கள் உறவுகளைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும், ஆனால் அதுவரை சில நடைமுறை மாற்றங்களைத் தவிர்ப்பதற்கில்லை.

இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் 66 மில்லியன் மக்களை இழந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மக்கள் தொகை இனி 446 மில்லியன்கள் தான்.

மீண்டும் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய வேண்டுமெனில், ஏனைய வெளி விண்ணப்பதா ரர்களுக்குரிய நடைமுறைதான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

பிரஸல்ஸில் யூனியன் ஜாக் கொடியை இறக்குவது என்பது தூலமான மாற்றதுக்கான அறிகுறியாகும்.

ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகியது, இனி அது '3ஆம் நாடு தான்'. கடந்த மே மாதம் ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்காக தேர்வு செய்யப்பட்ட 73 பிரித்தானியர்களுக்கு இனி அங்கு வேலை இல்லை. இதில் 46 இடங்கள் எதிர்கால ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 27 இடங்களை இதுவரை பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத ஐரோப்பிய நாடுகள் பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது.

ஐரோப்பிய கமிஷனுக்காக பிரிட்டன் இனி உயரதிகாரியை நியமிக்க வேண்டிய தேவையில்லை.

ஐரோப்பிய கவுன்சில் தலைவர்கள் உச்சி மாநாடுகளுக்கு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் இனி அழைக்கப்பட மாட்டார்.

ஐரோப்பிய ஒன்றிய கவுன்சில் கூட்டங்களில் பிரிட்டன் அமைச்சர்கள் இனி கலந்து கொள்ள மாட்டார்கள்.

ஐரோப்பிய குடிமகன்கள் அல்லாத பிரித்தானியர்கள், இனி பிரஸல்ஸில் மூத்த ஆட்சியதிகாரப் பதவிகளை வகிக்க முடியாது.

ஆனால் பலரும் இரட்டைக் குடியுரிமையை ஏற்கெனவே பெற்றுள்ளனர். ஆனாலும் மாற்றம் முழுவதும் நிறைவடையும் 11 மாத காலம் வரை ஐரோப்பிய யூனியன் பட்ஜெட்டுக்கு பிரிட்டன் நிதி ஆதாரம் அளிக்கும்.

குடிமக்கள் உரிமைகள்:

ஐ.நா தகவல்களின் படி ஸ்பெயின், அயர்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 1.2 மில்லியன் பிரிட்டன் குடிமக்கள் உள்ளனர்.

அதேபோல் பிரிட்டன் புள்ளி விவரக் கணக்குகளின்படி, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த சுமார் '2.9 மில்லியன் குடிமக்கள் பிரிட்டனில் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் இவர்களின் நிலை பிரெக்ஸிட்டுக்கு முந்தைய நிலையிலேயே இருக்கும், பாதிப்பு எதுவும் ஏற்படாது.

ஆனால் பிரிட்டனில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய குடிமக்களும், ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பிரிட்டன் குடிமக்களும் உறுப்பு நாடுகள் வகுக்கும் வழிமுறைகளின் கீழ் அதிகாரிகளிடம் புதிதாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முழுவதும் வெளியேறும் நடைமுறை இன்னமும் 11 மாதங்கள் நீடிக்கும் என்பதால் அதுவரை சுதந்திர நடைமுறைகள் நீடிக்கும், அதன் பிறகு பிரிட்டனில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய குடிமக்கள் அங்கு தங்கள் பணியைத் தொடர்ந்தால் தொடர்ந்து அங்கு இருக்கலாம்.

ஆனால் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டனுக்கு எதிர்காலத்தில் வருபவர்களுக்கான சுதந்திர குடியேற்றத்தை பிரிட்டன் முடித்து விடும் என்று ஏற்கெனவே பிரிட்டன் அறிவித்துள்ளது.

இந்த விடயங்கள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டியவை. ஆனாலும் பிரிட்டன் தொடர்ந்து ஐரோப்பிய யூனியன் சட்டங்களுக்கும், ஐரோப்பிய நீதிமன்றத்துக்கும் உட்பட்டதுதான், இதுவும் முழுமையாக வெளியேறும் வரை நீடிக்கும். அதற்குள் நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண வேண்டி வரும்.

ஐரோப்பிய யூனியனை விட்டு வெளியேறியதால் பிரிட்டன் இந்த நாடுகளுக்கு வெளியே நல்ல சாதகப் பலன்களை அடைய முடியாது என்று ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் ஏற்கெனவே எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரின் தலையீட்டால் குளச் சீரமைப்புத் தாமதம்!

யாழ்ப்பாணம்,பெப்.3

குளங்கள் புனரமைப்புத் தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதை மாற்றியமைக்குமாறு யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சர் ஒருவர் கோரியுள்ளதால் குளப் புனரமைப்புப் பணிகள் தாமதமடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

யாழ். நகரில் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ள இரு குளங்களைப் புனரமைக்க அமைச்சரவைத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அதில் மாற்றங்கள் ஏற்படுத்தி வேறு இரு குளங்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் அமைந்துள்ள 44 குளங்களையும் உலக வங்கி நிதி உதயில் புனரமைப்புச் செய்ய, உலக வங்கி இணக்கம் தெரிவித்தது. அதற்கான திட்டங்கள் அனைத்தும் தயாரித்து இணக்கம் காணப்பட்டது. அதனடிப்படையில் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இரு குளங்களை மாதிரியாகப் புனரமைத்த பின்னர், எஞ்சிய குளங்களை ஒப்பந்த அடிப்படையில் புனரமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதன் பிரகாரம் முதல் கட்ட புனரமைப்புக்காக, பொஸ்கோ ஆரம்ப வித்தியாலயம் முன்பாக மாணவர்கள் மற்றும் சுற்றுப்புறத்தின் நன்மை கருதி பிள்ளையார் குளமும், அதன் அருகே இருந்த தேவரிக்குளமும் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட இரு குளங்கள் மற்றும் அதனோடு இணைந்த வாய்க்கால் பணிக்காக 110 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு, அமைச்சரவை அனுமதிக்காக கடந்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். ஆனால் முதல் கட்டமாக மாதிரியாக அமைக்கும் இரு குளங்களையும் மாற்றி புல்லுக்குளம் மற்றும் கஸ்தூரியார் வீதிக்குளங்களைப் பரிந்துரைக்குமாறு அந்த அமைச்சர் கோரியுள்ளார். அதன் காரணமாக மீண்டும் உலக வங்கியுடன் உரையாடுவதற்காக கோவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதனால் அமைச்சரணவையின் அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (க-105)

## வடிகான்கள் சுத்திகரிப்பு

குருநகர்,பெப்.3

குருநகர் பகுதியில் கழிவுநீர் செல்லும் வடிகான்கள் யாழ்மாநகர சுகாதாரப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன. குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதி, யாழ் சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதி ஆகியவற்றில் உள்ள வடிகான்களே சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன.

வடிகான்களில் தேங்கி நின்று கழிவு நீர் செல்வதற்குத் தடையாக காணப்பட்ட கழிவுகள் அகற்றப்பட்டு, வீதியோரங்களின் அருகில் கொட்டப்பட்டுள்ளன. அவை கழிவு நீர் அகற்றும் வாகனம் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன. அத்துடன் சுத்திகரிக்கப்பட்ட வடிகான்களில் புகையூட்டல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (க-51)

## சைக்கிள் கையளிப்பு



யாழ்ப்பாணம், பெப்.3

யாழ். இராணுவத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் சைக்கிள்கள் வழங்கும் வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இலங்கையின் 72 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 100 வறிய மாணவர்களின் கற்றல் நடவடிக்கையை மேம்படுத்தும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் உட்பட்ட பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்டவறிய மாணவர்களுக்கு இந்த சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பலாலி பாதுகாப்புக் கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி ருவான் வணிகசூரிய பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சைக்கிள்களை வழங்கி வைத்தார். (ந-111)



முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் 59 படைப்பிரிவினரால் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை கடந்த சனிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது. சுதந்திர தினத்தை முன்னிட்டு சுமார் 200 படையினர் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையைத் துப்புரவு செய்து, வர்ணம் பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (க-19)

## மாணவர்களுக்கான பற்சிகிச்சை முகாம்

கிளிநொச்சி,பெப்.3

நடமாடும் பற்சிகிச்சை முகாம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையும், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து கனடா தமிழ் மருத்துவ நலச் சங்கத்தின் நிதி அனுசரணையில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

இச் சேவையின் போது 109 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு அதில் 42 மாணவர்களுக்கு சிகிச்சையும் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு பல் அடைத்தல், பல் பிடுங்குதல், பல் சுத்தம் செய்தல் போன்ற சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் அ. பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் பல் மருத்துவர் ஜீவானந்தம், கிளிநொச்சி பிராந்திய சிகிச்சை மேற்பார்வையாளர் மருத்துவர் அனஸ்ரா, பற்சிகிச்சையாளர் திருமதி இராஜதுரை, கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் உத்தியோத்தர்கள் ளான நிதுசன், றோமியோ ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)



## அனைத்துக்கும் நாளை பூட்டு

சாவகச்சேரி,பெப்.3

தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நாளை நாடு முழுவதினும் உள்ள கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படும் கொல்களங்கள், மதுபானச்சாலைகள், அங்கீகாரம் பெற்ற மதுபான விற்பனைநிலையங்கள், கடலுணவுகள் விற்பனை நிலையங்கள், போன்றவற்றை மூடிவிடுமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர். எச். ஹெட்டியாராச்சி அறிவித்துள்ளார். (சு-9)

## கொழும்பு கடற்படையினரால் மன். மீனவர்கள் 11 பேர் கைது

### தண்டம் செலுத்தி வெளியேறினர்

தலைமன்னார், பெப். 3

மன்னாரில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி தொழில் செய்த 11 மீனவர்களை, கொழும்பிலிருந்து படகில் வந்த கடற்படையினர் கைது செய்து மன்னார் தாழ்வுப்பாடு கடற்படையினரிடம் கையளித்துச் சென்றுள்ளனர். சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

அவர்கள் மன்னார் தென் கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து கடற்பிராந்தியத்தில் ரோந்து வந்த கடற்படையினரே மூன்று படகுகளில் பயணித்த பதினொரு மீனவர்களை கைதுசெய்து தாழ்வுப்பாடு கடற்படையினரிடம் கையளித்துச் சென்றுள்ளனர். 11பேரும் மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் சட்டநடவடிக்கைக்காக, மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களுக்கு எதிராக கடற்றொழில் திணைக்கள அதிகாரி ஒவ்வொரு படகுக்கும் எதிராக கடந்த வெள்ளிக்கிழமை தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்திருந்தார்.

இரண்டு படகுகளில் சென்ற எட்டு மீனவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்றும் மற்றைய படகில் சென்ற மூன்று மீனவர்களும் அனுமதிப்பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்றும் குற்றஞ்சா ட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மன்றில் மீனவர்கள் தங்கள் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதவான். ஒவ்வொருவருக்கும் தலா மூவாயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

சான்றுப் பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும்படியும் நீதிமன்று கட்டளையிட்டது. (த-60)

# தமிழரைக் கட்டுப்படுத்தவே ராணுவத்தினரின் தடைகள்!

## சரவணபவன் எம்.பி காட்டம்

யாழ்ப்பாணம், பெப். 3
தற்போது வீதிகளில் மீண்டும் தடைகள் போடப்பட்டுள்ளன. இராணுவம் நின்றாலும் இல்லை என்றாலும் அந்தத் தடைகள் உள்ளன. அவை வேகக் கட்டுப்பாடுகள் அல்ல. தமிழர்கள் மீதான கட்டுப்பாடு. அவர்கள் தமிழர்களைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.



கிளிநொச்சி, பள்ளிக்குடாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னாள் போராளிகளின் குடும்பங்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
இப்போது நாங்கள் ஒரு இக்கட்டான நிலைமைக்குள்ளே ஓடிக் கொண்டிருக்கிறோம், யாழ்ப்பாணத்தில், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தது.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் என்ற பதம் அங்கு பாவிக்கப்படவில்லை.

மாவட்ட சபைக் கூட்டமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள கோத்தபாய ராஜபக்ச ஒன்றையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தன்னுடைய முடிவின் மூலமே நினைப்பதைச் சாதிக்க முனைகிறார் என்று தெரிகிறது.

அவர் செய்பவை குறித்து நாங்கள் நன்றாக யோசிக்க வேண்டியுள்ளது.

அரசமைப்புச் சொல்கிறது தமிழுக்கு அந்தஸ்து உள்ளது என்று. இங்கே அவர்கள் சொல்கிறார்கள் சுதந்திர தினமன்று சிங்களத்தில் தான் தேசிய கீதம் என்று.

பின்னர் ஏன் எங்களை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?, எங்களை எங்களுடைய பாட்டுக்கு விட்டு விடலாமே.

எங்களுக்கான உரிமைகளை வழங்கி எங்களை சரிசமமாக உங்களால் மதிக்க முடியாது என்றால்,ஏன் உங்கள் பிரதிநிதிகளை இங்கே போடுகிறீர்கள்.

இது ஒரு விதமான அரக்க ஆட்சி என்றுதான் நான் நினை க்கிறேன்.

அப்படித்தான் நாங்கள் யோசிக்க வேண்டும். மிகத் துணிவாக சிங்களம் மாத்திரம் தான் என்று அறிவிக்கின்ற துணிச்சல் அவர்களுக்கு இருக்கிறது.

நீங்கள் சிங்கப்பூருக்குப் போனாலும், யப்பானுக்குப் போனாலும் அங்கெல்லாம் தமிழ் இருக்கிறது. ஒரு சிறிய நாடாக இருந்தாலும், தமிழ்க் கலாசாரத்தைப் பேணுவதற்கு ஒரு இடம் அங்கு உண்டு. ஆனால் இவர்கள் பௌத்த தர்மம் பற்றிப் பேசிப் பேசி, அந்த பௌத்தம் என்ன சொல்கிறதோ, அதற்கு எதிரான செயற்பாடுகளை மற்றொரு இன மக்கள் மீது பயன்படுத்துகிறார்கள், தங்களுடைய அசுரத்தனத்தைக் காட்டுகிறார்கள்.

இப்போது நாங்கள் வீதிகளால் செல்லும் போது மீண்டும் எத்தனையோ வீதித் தடைகள் உள்ளன. எதற்காக அந்த வீதித் தடைகள் என்று எனக்குத் தெரியவில்லை.

அந்த வீதித் தடைகளில் இராணுவம் நிற்பதும் உண்டு. சும்மா தடைகளைப் போட்டு வைத்திருப்பதும் உண்டு. இது வேகக் கட்டுப்பாடல்ல, தமிழர் கட்டுப்பாடு. அவர்கள் தமிழர்களைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

நீ இப்படித்தான் இருக்கலாம், இப்படித்தான் செல்லலாம் என்று எங்களைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

இன்னும் சில நாள்களில் அப்படிப்பட்ட அரசின் பிரதிநிதிகள் என்று சிலர் எம் மத்தியில் வருவார்கள். மக்கள் மத்தியில் படிவங்களுடன் வருவார்கள். அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம், ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் தருகிறோம், உணவு தருகிறோம் என்பார்கள். அந்தப் படிவங்களை நிரப்பியே உங்களுடைய வாழ்க்கை முடிந்து விடும். கட்டாயம் வருவார்கள், ஆனால் மக்கள் துணிய வேண்டும். அவர்களை எதிர்க்க வேண்டும், ஏற்கனவே தருவோம் என்று கூறியதைத் தாருங்கள் என்று அவர்கள் முன் கேட்கவேண்டும். எங்களிடமே முதன்மை, எங்களுடைய அரசியல் உரிமை எங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதுதான்.

அரசியல் உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும். அதே நேரத்தில், அபிவிருத்தியையும் சமாந்தரமாக நாங்கள் கொண்டு செல்ல வேண்டும். அதற்காகத்தான் எங்களுடைய வேலைப்பாடுகள் நடக்கின்றன. அபிவிருத்தி இல்லாமல் இருந்தால், நாங்கள் எங்களுடைய கல்வியையோ, விளையாட்டையோ,ஒருநிலைக்கு கொண்டுவர முடியாது.

இன்றும் கூட நாங்கள் ஒன்பதாவது இடத்தில் தான் இருக்கிறோம்.

வேறு நாடுகளைப் பார்த்தால் போர் நடைபெற்றால், போர் நடைபெற்ற பிரதேசங்களில் உள்ள மக்களைப் பற்றிச் சிந்தித்தார்கள், அவர்களுடைய கல்வி, பொருளாதாரத்தைஒருநிலைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் எங்களுடைய நிலை அவ்வாறு அல்ல. எல்லா விதத்திலும், நாங்கள் ஒன்பதாவது மாகாணமாகவே இருக்கிறோம்.

அது கல்வியோ, சுகாதாரமோ, விளையாட்டோ எதுவாக இருந்தாலும் ஒன்பதாவது மாகாணமாகவே இருக்கிறோம். தமிழர்களுக்கென ஒரு ஆயுத பலம் இருந்தது, அந்தப் பலத்தை கள்ளங்கபடமாக மௌனிக்கச் செய்து, முறித்தெறிந்துவிட்டு, மீண்டும் தங்களுடைய அராஜக ஆட்சியைதமிழர்கள்மீதுசெலுத்த முனைகின்றார்கள்.

இதுதான் உண்மை. இதை மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (ப)

# சட்டம், ஒழுங்கு பற்றி கிளிநொச்சியில் கூட்டம்

கிளிநொச்சி, பெப். 3
கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க விஷேட கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமாரின் பணிப்பின் பேரில் அவருடைய தலைமையில் கூட்டம்நடைபெறவுள்ளது என்று மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் பொது அமைப்புக்கள், சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளார்.

கிளிநொச்சிமாவட்டத்தில்இடம்பெற்று வருகின்றசட்டவிரோதமணல்அகழ்வு, மரம்கடத்தல், கஞ்சா, கசிப்புகடத்தல், சண்டித்தனம் புரிவோரது நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதில் ஆராயப்படவுள்ளனஎன்றுதெரிவிக்கப்பட்டது.(த-214)

# சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள்

## வாழ்வுதய இயக்குநர் தெரிவிப்பு



மன்னார், பெப். 3
தமக்குக் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சிறுவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். இவர்களுக்கு பெற்றோர்கள் பங்களிப்பு மிக முக்கியமானது என்று மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' எனும் தொனிப்பொருளில் சிறுவர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் முற்பகல் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்குள்ள சிறார்களின் கல்விக்கு வெளிநாடுகளிலிருந்து உதவி செய்பவர்களின் எதிர்பார்ப்பு என்னவெனில், தாம் செய்யும் உதவியால் பிள்ளைகள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதே. எனவே அதற்கேற்ப சிறார்கள் கல்வி கற்கவேண்டும்.

பிள்ளைகளின் கல்விசார் முன்னேற்ற அறிக்கையை பெற்றோர்கள் ஒவ்வொரு தவணையும் பரிசீலனை செய்துபார்ப்பது மிக முக்கியம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கருத்தமர்வில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் திட்ட இலக்கு கிராமங்களிலிருந்து சுமார் 200 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

வளவாளராக மன்னார் நகர பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு பொறுப்பதிகாரி சந்திரபோஸ் கலந்துகொண்டார். சிறுவர்களின் கருத்துப் பகிர்வுகளும் இடம்பெற்றன. (த-56)

# வற்றாப்பளை வித்தியின் மெய்வன்மைப் போட்டி





முல்லைத்தீவு,பெப்.3
முல்லைத்தீவு முள்ளியவளை வற்றாப்பளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.திருக்குமரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக உதவி விரிவுரையாளர் செல்வி. நேருசா நரேந்திரன்.

சிறப்பு விருந்தினராகக் கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. ஸ்ரீபுஸ்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமான விளையாட்டுப் போட்டியைத் தொடர்ந்து மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சி, வினோத உடைப் போட்டி , பழைய மாணவர் மற்றும் பெற்றோர்களின் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. (ஜ-222)

# இலங்கைக்குள் வருவோரை விசாரிப்பதற்கு விசேட குழு

கொழும்பு, பெப்.3

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக தினமும் இலங்கைக்குள் நுழையும் அனைத்து பயணிகளையும் விசாரித்து அறிக்கை அளிக்க மூன்று பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சுகாதார அமைச்சின் பேரிடர் மேலாண்மைப் பிரிவின் மருத்துவர், விமான நிலையம் மற்றும் விமான சேவைகளின் பிரதிநிதி மற்றும் குடிவரவு, குடியகழ்வுத் துறையின் பிரதிநிதி ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸின் பரவல் காரணமாக உலக சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ள அவசரகால நிலையைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மூலம் தற்போதைய நிலைமையைக் கண்காணிப்பதில் ஒரு சுமுகமான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக அனைத்து சேவைகளையும் ஒன்றிணைக்க முடியும் என்றும் அவர் கூறினார்.




# வருடாந்தப் பெருவிழா

மன்னார், பெப்.3

மன்னார் மாவடத்தின் காத்தான்குளம் பாலைக்குழி தூய காணிக்கை மாதா ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்றுக் காலை வாழ்வுதய இயக்குநர் அருட்பணி அன்ரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. கடந்த ஒன்பது நாள்கள் நவநாள் வழிபாடுகள் ஆலயப்பங்குத்தந்தை அருட்பணி வெ.எமில் எமில்ராஜ் அடிகளார் தலைமையில் இடம்பெற்று வந்ததனைத் தொடர்ந்து பெருவிழா நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (ந)

# கள்ளால் 8 கோடி ரூபா



யாழ்ப்பாணம், பெப்.3


வடக்கு மாகாணத்தில் உள்ள 21 கள் அடைக்கும் பனை தெ.சங்கங்கள் மற்றும் நிலையங்களின் ஊடாக ஒரு வருடத்தில் மட்டும் 7 கோடியே 94 லட்சத்து 750 ரூபா மதுவரித் திணைக்களத்துக்கு வரியாகச் செலுத்தப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள சங்கங்கள் போத்தல்களில் கள் அடைப்பதானால், போத்தல் ஒன்றுக்கு 37 ரூபா விகிதம் வரி செலுத்த வேண்டும். அவ்வாறு 7 கோடியே 94 லட்சத்து 750 ரூபா வரி ஒரு வருடத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் அதிக பட்சமாக கிளிநொச்சி கோணாவில் சங்கம் ஒரு கோடியே 80 லட்சத்து 61 ஆயிரத்து 906 ரூபாவும் , முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் சங்கம் 58 லட்சத்து 52 ஆயிரத்து 687 ரூபாவும் புதுக்குடியிருப்புச் சங்கம் 50 லட்சத்து 41 ஆயிரத்து 531 ரூபாவும் , சுன்னாகம் சங்கம் 48 லட்சத்து 25 ஆயிரத்து 506 ரூபாவும் ,கொடிகாமம் சங்கம் 45 லட்சத்து 10 ஆயிரத்து 656 ரூபாவும் , சாவகச்சேரி சங்கம் 43 லட்சத்து 55ஆயிரத்து 656 ரூபாவும் , முல்லைத்தீவு மேற்குச் சங்கம் 40லட்சத்து93 ஆயிரத்து 750 ரூபாவும் வரி செலுத்தியுள்ளன.

அதேபோன்று சங்கானை சங்கம் 38 லட்சத்து 90 ஆயிரத்து 593 ரூபாவும் , மல்லாகம் சங்கம் 37 லட்சத்து 33 ஆயிரத்து 968 ரூபாவும் , கோப்பாய் சங்கம் 31 லட்சத்து 90 ஆயிரத்து 437 ரூபாவும் , பண்டத்தரிப்பு சங்கம் 27 லட்சத்து 57 ஆயிரத்து 375 ரூபாவும் , முல்லைத்தீவு கிழக்குச் சங்கம் 26 லட்சத்து 44 ஆயிரத்து 906 ரூபாவும் , காரைநகர் சங்கம் 25 லட்சத்து 20 ஆயிரத்து 843 ரூபாவும் , நவாலி சங்கம் 23 லட்சத்து 10 ஆயிரத்து 656 ரூபாவும் , வரணி சங்கம் 20 லட்சத்து 80 ஆயிரத்து 31 ரூபாவும் வரி செலுத்தியுள்ளன.

அச்சுவேலி சங்கம் 19 லட்சத்து 35 ஆயிரத்து 218 ரூபாவும், மானிப்பாய் சங்கம் 14 லட்சத்து 75 ஆயிரத்து 156 ரூபாவும், யாழ்ப்பாணம் சங்கம் 13 லட்சத்து 59 ஆயிரத்து 875 ரூபாவும் என்ற அடிப்படையில் மது வரித் திணைக்களத்துக்கு வடக்கு மாகாண பனை தென்னைச் சங்கங்களின் ஊடாக வரி செலுத்தப்பட்டுள்ளது என்று திணைக்களத்தினர் தகவல் தெரிவித்தனர். (க-105)




# சி.ஐ.டி.அதிகாரி சாட்சியம்

கொழும்பு, பெப்.3

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர், தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளார்.

இந்த சாட்சியப் பதிவு இரகசியமாக நடைபெற்றது என்று ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். அந்த அதிகாரி மீண்டும் எதிர்வரும் வியாழக்கிழமை ஆணைக் குழுவில் சாட்சியமளிப்பார் என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, மாவனெல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ஆணைக் குழுவிவில் சாட்சியமளித்துள்ளார். மாவனெல்லப் பிரதேசத்தில் புத்தர் சிலைகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக இதுவரை 460 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 59 பேர் சாட்சியமளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# மெய்வன்மை போட்டி

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மென்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

வித்தியாலய அதிபர் நடேசு தயாளன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பிரதேச செயலகக் கணக்காளர் எஸ். அகிலன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (க)

# மாந்தையில் நடந்த மாட்டுவண்டிச் சவாரி





மன்னார், பெப். 3

வடக்கின் பாரம்பரிய நிகழ்வான இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மன்னார் மாந்தை இரட்டை மாட்டு வண்டி சவாரித் திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

மன்னார் கள்ளியடியை வசிப்பிடமாகக் கொண்ட அமரர் சண்முகம் அமிர்தலிங்கத்தின் 2ஆவது ஆண்டு நினைவை ஒட்டி இது நடத்தப் பட்டது. மன்னார் மாவட்ட மாட்டு வண்டிச் சவாரிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடை பெற்ற இந்தப் போட்டியில், 51 சோடி காளைகள் போட்டியில் ஈடுபடுத்தப்பட்டன. குறித்த மாட்டு வண்டி சவாரியானது A,B,C,D ஆகிய நான்கு பிரிவுகளாக இடம் பெற்றது. குறித்த 4 பிரிவுகளிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த போட்டியாளர்களின் காளைகள் வெற்றி பெற்றுள்ளன.

போட்டியில் வெற்றிபெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு ஏற்பாட்டுக்குழுவினர் பரிசில்கள் வழங்கினர். (து-56)





## அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா பெப்.3

வவுனியா நேரியகுளம் குமாரசாமி முன்பள்ளிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அதன் நிர்வாக இயக்குநர் சந்திரமோகன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நான்கு மதங்களையும் சேர்ந்த மதகுருமார்களின் ஆசியுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் கை.சிவகரன், பிரதேச சபை தவிசாளர் ஆ.அந்தோனி, வவுனியா வடக்கு கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் எஸ். முரளிதரன் மற்றும் இராஜ்மோகன் ,பொலிஸ் அதிகாரி, வட்டார பிரதேச சபை உறுப்பினர்களான ஜெ.டெல்சன், திருமதி ம.சாந்தகுமாரி ,நேரியகுளம் தபால் அதிபர் வி.றெக்ஸ்சன், கிராம அலுவலர் திருமதி கே.தேவகி,அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.ஏ.அப்பாஸ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.அனஸ், ஆலயங்கள் சார்பில் இ. கிருபாகரன் மற்றும் கே. கேதீஸ்வரன், கிராமஅபிவிருத்திச்சங்கம் சார்பில் ச. சசிகுமார், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பில் செயலர் திருமதி கே.சிந்துஜா, முன்னாள் தவிசாளர் க.அந்தோனிஐயா மற்றும் குமாரசாமி முன்பள்ளி ஆசிரியை திருமதி வேணுமதி முன்பள்ளி மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ந)

## மணவாளக்கோல பெருவிழா

யாழ்ப்பாணம் பெப்.3

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீசாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த மணவாளக்கோல பெருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 10 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். தொடர்ந்து மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெறவுள்ளது. (ந)

# தொடர் சோதனைகளால் நடு வீதியில் அந்தரிக்கும் பயணிகள்!!

வவுனியா,பெப்.3

வடக்கில் ஏ-9 வீதியை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் சோதனை நடவடிக்கைகளால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர்.



ஆனையிறவு, மாங்குளம்,புளியங்குளம் ,ஓமந்தை ஆகிய பகுதிகளில் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு பயணிகள் பஸ்கள் சோதனை செய்யப்பட்டு வருகின் றன.

கடந்த ஒரு வாரகாலமாக போர்க்காலத்துடன் ஒப்பிடும் வகையில் பஸ்களில் செல்லும் பயணிகள் முழுமையாக இறக்கிவிடப்பட்டு அவர்களது பயணப்பொதிகள் சோதனையிடப்படுகின்றன.

இதனால் பல்வேறு இடைஞ்சல்களுக்கு மத்தியில் பொதுமக்கள் தமது பயணத்தைத் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

வன்னிப் பகுதியில் மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிக்கு அடுத்தபடியாக புதூர் சந்தியில் 15 கிலோமீற்றர் இடைவெளியில் மற்றொரு சோதனைச் சாவடியும், அதற்கு அடுத்ததாக 15கிலோமீற்றர் தூர இடைவெளியில் ஓமந்தையில் ஒரு சோதனைச் சாவடியும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சாவடிகளில் பொதுமக்கள் வாகனங்களில் இருந்து இறக்கிவிடப்பட்டு, வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டு அவர்களது பைகள் சோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஏற்றப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கையால் ஒரு சோதனைச் சாவடியில் 15 நிமிடத்துக்கும் அதிகமான தாமதம் ஏற்படுகின்றது.

கடமையில் இருக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் நிலையில், அதிகமான பஸ்கள் வருகை தரும்போது சோதனை நடவடிக்கைகளுக்காக நீண்டநேரம் எடுப்பதுடன் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சோதனைகளின் மூலம் சில பஸ்களில் கொண்டு வரப்படும் கஞ்சா மற்றும் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் முறியடிக்கபட்டு வந்தாலும்; பொதுமக்களைக் கடுமையாக அசௌகரியப்படுத்துவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ஐ-110)



கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு வீதி ஓட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ந)

# யதார்த்தத்தை தமிழர்கள் தற்போதே உணர்கின்றனர்

## கஜேந்திர்குமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.3

யதார்த்தத்தை உணரத் தொடங்கியுள்ள தமிழ் மக்கள் உண்மையான - நேர்மையான கொள்கையில் விட்டுக் கொடுப்பில்லாத எங்களுக்கே இனி முழுமையான ஆதரவைத் தருவார்கள். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எம்மைப் பொறுத்தவரையில் கூட்டுத் தலைமைத்துவம் முக்கியமான விடயமல்ல. கூட்டுத் தலைமைத்துவம் என்பதை விடவும் நேர்மை தான் முக்கியம்.

ஊழலில்லாத ,நேர்மையாக தமிழ் மக்களுடைய நலன்களை மட்டும் மையப்படுத்திச் செயற்படக் கூடிய உறுதியான தலைமைத்துவம் தான் முக்கியம். அந்தப் பண்புகள் தான் முக்கியம். எண்ணிக்கை முக்கியமல்ல. கூட்டுத் தலைமை என்று சொல்வது வெறும் எண்ணிக்கைதான். வெறும் எண்ணிக்கையைக் காட்டுகிற சொற்பதம்தான்கூட்டுத்தலைமை. இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு எத்தனையோ ஆயுத அமைப்புக்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. ஆனால் ஒரேயொரு ஆயுத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு மட்டும் தான் தமிழ் மக்களுடைய உண்மையான விடுதலையை நோக்கிச் செயற்பட்டது.

ஏனைய தரப்புக்கள் எல்லாம் ஒன்றாகக் கூட்டாக இருந்தார்கள். ஆனால் தமிழ் மக்கள் யாரைத் தெரிவு செய்தவர்கள்?. நேர்மையாக, தங்களுக்காக உயிர்த் தியாகம் செய்த, தமிழ் மக்களின் நலன்களை மையப்படுத்தி செயற்படக் கூடிய ஒரேயொரு தரப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையே தமிழ் மக்கள் இனங் கண்டனர். அங்கு ஒரு கூட்டும் இருக்கவில்லையே?.

தமிழ் மக்கள் தற்போது சரியான முடிவுக்கு வருகின்றார்கள். அந்த முடிவு நேர்மையாகச் செயற்படுகின்ற எங்கள் தரப்புக்கான ஆதரவாக அமையும். நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம். உண்மையாக, நேர்மையாகச் செயற்படக் கூடிய சரியான தரப்பை மக்கள் தெரிவு செய்வார்கள் - என்றார். (ஐ-120)

# வரியிறுப்பாளர்களின் கருத்தை ஆராய்ந்தே வரி

## கரைச்சி தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப். 3

கரைச்சியில் வரி அறவிடுவது தொடர்பில் பெரும்பான்மை வரி இறுப்பாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துத் தீர்மானம் மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கரைச்சிப்பிரதேசசபைத்தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 29ஆம் திகதிய அமர்வின் போது வரி அறவீடு தொடர்பில் பேசப்பட்டது. அதன்போது உறுப்பினர்களுக்கிடையே கைகலப்பும் இடம்பெற்றிருந்தது. இது பற்றிய செய்தி மறுநாள் வெளியாகிய நிலையில், தவிசாளர் அனுப்பிய குறித்த சம்பவம் பற்றிய விளக்கக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:

சபை உறுப்பினர்கள் ஒப்பமிட்டு சிறப்புத் தீர்மானம் ஒன்றுக்கான சபை அமர்வைக் கோரியமைக்கு அமைவாக இந்தச் சிறப்புச் சபை அமர்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

விவாதத்தின் நோக்கம் ஆதன வரி அறவீடு பற்றிய மீள் பார்வை.

இந்தச் சிறப்பு அமர்வில் ஆதன வரியை 5 வீதமாகக் குறைப்பதற்காக வாக்கெடுப்புக்கு, சுயேச்சைக் குழுவினர் மாத்திரமே கோரியிருந்தனர். எனினும் சபையின் பெரும்பான்மையானவர்கள் பின்வரும் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றினார்கள்.

அதாவது,கரைச்சி பிரதேச சபையின் கட்டமைந்த பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட 7 வட்டாரங்களில் உள்ள 20ஆயிரத்து 397 ஆதன உரிமையாளர்களில் ஆதனவரியைக் குறைக்குமாறு ஒருவரே விண்ணப்பித்துள்ளார். தவிர, வணிக நோக்கிலிருந்து சபை செயற்பட முடியாது என்றும், ஏழை மக்கள் வாழ்கின்ற பிரதேச அபிவிருத்தி கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆதன வரி குறைக்கப்பட வேண்டுமானால் கட்டமைந்த பிரதேசங்க ளின் வரி இறுப்பாளர்களின் கருத்தறிவதற்கு எதிர்வரும் 90 நாள்களில் வரி அறவிடுவது தொடர்பில் பெரும்பான்மை வரி இறுப்பாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துத் தீர்மானம் மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின்போது பெறப்படுகின்ற அறிக்கைகளை மீளச் சபையில் சமர்ப்பித்து ஆராய்வதென்றும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து ஊடகவியலாளர்களும் ஒலி, ஒளிப் பதிவுகள் செய்திருந்தனர். ஆகவே பக்கச்சார்பான செய்தியாளர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு சபை உத்தியோகபூர்வ தீர்மானத்தை மாற்றிப் பிரசுரம் செய்தமை வருத்தமளிக்கின்றது. என்று கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (கு)

# இலங்கை முழுதும் 2,500 மது நிலையங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.3

இலங்கையில் தற்போது 2 ஆயிரத்து 550 மதுபான விற்பனை நிலையங்கள் அல்லது அருந்தும் இடங்கள் உள்ளன. அவைஅதிகபட்சமாக கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கு அடுத்த படியாக கம்பஹா, கண்டி, காலி மாவட்டங்கள் உள்ளன. 5 ஆவது இடத்தில் உள்ள நுவரெலியா மாவட்டத்தில் 175 நிலையங்கள் காணப்படுகின்றன.

அவற்றுக்கு அடுத்தபடியாக களுத்துறை, அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் மாத்தளை மாவட்டங்கள் உள்ளன.

இவற்றுக்கு அடுத்த நிலைகளில் குருநாகல், கேகாலை, மொனராகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

அதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டம் 16 இடத்திலும், அம்பாந்தோட்டை மாவட்டம் 17 ஆவது இடத்திலும், திருகோணமலை மாவட்டம் 18 ஆவது இடத்திலும், மட்டக்களப்பு மாவட்டம் 19 ஆவது இடத்திலும், அம்பாறை மாவட்டம் 20 ஆவது இடத்திலும் உள்ளது.

அதேவேளை வவுனியாவில் 22 மது விற்பனை நிலையங்களும், மன்னாரில் 11 நிலையங்களும், முல்லைத்தீவில் 6 நிலையங்களும், கிளிநொச்சியில் இரு நிலையங்களும் காணப்படுகின்றன.

இலங்கையில் 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 619 மதுபான சாலை உரிமங்களுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனடிப்படையில் 2006 ஆம் ஆண்டு 35 அனுமதிகளும், 2007 ஆம் ஆண்டு 42 அனுமதிகளும், 2008 ஆம் ஆண்டில் 36 அனுமதிகளும், 2009 ஆம் ஆண்டில் 40 அனுமதிகளும், 2010 ஆம் ஆண்டில் 51 அனுமதிகளும், 2011 ஆம் ஆண்டில் 41 அனுமதிகளும், 2012 ஆம் ஆண்டில் 55 அனுமதிகளும், 2013 ஆம் ஆண்டில் 62 அனுமதிகளும், 2014 ஆம் ஆண்டில் 83 அனுமதிகளும், 2015 ஆம் ஆண்டில் 52 அனுமதிகளும், 2016 ஆம் ஆண்டில் 38 அனுமதிகளும், 2017 ஆம் ஆண்டில் 10 அனுமதிகளும், 2018 ஆம் ஆண்டில் 74 அனுமதிகளும் மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன. (க-105)



## தேசத்துக்காக கற்கவேண்டும்

### சிறிதரன் எம்.பி. உரை

கிளிநொச்சி, பெப். 3

தாய்த் தேசத்துக்காக மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் கற்றுக் கொள்ளும் கல்வி எமது தாய்த் தேசத்துக்காகவும் எமது இனத்தின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பாரம்பரிய பண்பாட்டியலைக் கொண்டவர்கள் தமிழர்கள். ஆனால் எங்கள் மாணவர்களும் இளைஞர்களும் இந்த மண் பற்றியோ இனம் பற்றியோ சிந்திக்கக் கூடாது என்பதற்காகவே எங்கள் இளம் சமுதாயத்தினரைத் தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாக்க நினைக்கிறார்கள். நாம் எதற்கும் விலை போகாதவர்களாக கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கவேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.

பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச சபை உறுப்பினர்கள், கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், இலங்கை வங்கி முழங்காவில் கிளையின் முகாமையாளர், அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-6)



## வருமானம் குறைந்த குடும்பத்துக்கு வீடு

முல்லைத்தீவு, பெப். 3

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நிரந்தர வீடில்லாத, குறைந்த வருமானம் பெறும் ஒரு குடும்பத்துக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் நோக்கில் முல்லைத்தீவில் வீடு அமைக்க அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதியின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சமான நோக்கு' திட்டத்துக்கு அமைய இது இடம்பெற்றது.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் கணுக்கேணி மேற்கு முள்ளியவளையில் முதலாவது வீட்டுக்கு அடிக்கல் நடுகை இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ச.கனகரத்தினம் அடிக்கல் நட்டார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் விஜித கமகே தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலர் க. கனகேஸ்வரன், மாவட்ட நிர்வாக அலுவலர், பொறியியலாளர், தொழில்நுட்ப உதவியாளர்கள், கிராம அலுவலர்கள்+, அபிவிருத்தி அலுவலர், அரசியல் பிரமுகர்கள், மதகுருமார்கள், பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-19)

## அரச அதிகாரிகளுக்கு அரசுத்தரப்பு அழுத்தம்

### சரவணபவன் எம்.பி. கடும் தாக்கு

கொடிகாமம்,பெப்.3

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ திறமை கொண்டவர் என்றும் நிர்வாகத்தைச் சரியாக நடத்துபவர் என்றும் எல்லோரும் நினைக்கின்றார்கள். ஆனால் அவருடைய ஆட்சியில்தான் மிக மோசமான நிர்வாகம் இலங்கையில் நடக்கப்போகின்றது என்று தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.



கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இனிவரும் நாள்களில் மோசமான நிர்வாகம் நடக்கப்போகின்றது என்பதை நாங்கள் எல்லோரும் உணரவேண்டும் . அதை எதிர்கொண்டு, எதிர்த்து நில்லுங்கள். இல்லை என்றால் நிச்சயம் அடிமைகள் ஆக்கப்படுவோம். அதற்கு இடம் கொடுத்துவிடாதீர்கள்.

கடந்த நான்கு வருடங்களாக எங்களுக்கும் அதிகாரங்கள் இருந்தன. ஆனால் தற்போதைய அரசு போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஆட்சியில் அதிகாரம் செய்யவில்லை. அரச அலுவலர்கள் எவராக இருந்தாலும் எந்தவித பயமுமின்றி எங்களோடு சேர்ந்து வேலை செய்தார்கள். எங்களால் முடிந்த ஒத்துழைப்பை நாமும் கொடுத்தோம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் அரச அலுவலர்களுடனும் சேர்ந்துதான் வேலை செய்தோம். எந்தவிதமான அழுத்தங்களும் எங்களால் அரச அலுவலர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால், இந்த அரசாங்கம் சகல அதிகாரிகளுக்கும் அழுத்தம் கொடுத்தே காரியங்களைச் சாதிக்க நினைக்கிறது.

இந்த அழுத்தம் பொதுத் தேர்தலின்பின்னர் இரட்டிப்பாகலாம். எனவே தலையாட்டிப் பொம்மைகளாக அரச அலுவலர்கள் மாறப்போகிறார்கள். இதற்குத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள் மாவட்டச் செயலராக இருந்தாலென்ன பாடசாலை அதிபர்களாக இருந்தாலென்ன, மருத்துவர்களாக இருந்தாலென்ன நிலைமை இங்கே அப்படித்தான். எனவே அந்த நிலையை மாற்றுவது உங்கள் கையில் தான் " உள்ளது- என்றார். (த-159)

## சான்றிதழ் வழங்கல் சுட்டிபுரத்தில்!

கொடிகாமம், பெப். 3

வரணி கலாசார மத்திய நிலையத்தில் நடனக் கற்கையைப் பூர்த்தி செய்து தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வரணி கலாசார மத்திய நிலையத்தில் அபிவிருத்திச் சங்கத் தலைவரும் நிலையப் பொறுப்பதிகாரியுமான சி.மகிந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி வினோஜிதா கௌசிகன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக கொடிகாமம் தென்மராட்சி ப.நோ.கூ.ச தலைவர் இ.அ. ஆனந்தராசா, பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கப் பொது முகாமையாளர் க.அருட்செல்வம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ.குமாரசாமி குருக்களது ஆசியுரையும் மீசாலை கிராமிய இல்லத்தின் ஆங்கிலப் பாடலும் ஆங்கிலப் பேச்சும், கைதடி கிராமிய நிலையத்தின் கணேசகௌத்துவம் நடனமும் நுணாவில் கிராமிய நிலையத்தின் வயலின் இசையும் இடம்பெறும்.

வளவாளர்கள் கௌரவிப்பும், மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்குதலும் நதியோர நாணல்கள் இலக்கியமன்ற வெற்றியாளர்களுக்கான கௌரவிப்பும் நடைபெறவுள்ளன.

(த-159, 122)

# மக்களுக்கான தலைவருக்கு கட்சி, பதவி தேவையில்லை

## மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, பெப்.3

மக்களுக்காக உழைக்கும் தலைவருக்கு தேர்தலில் வெற்றி பெறக் கட்சி, பதவிகள் தேவையில்லையென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் வீடற்றவர்களுக்கு வீடுகளை வழங்கும் திட்டத்தின் முதலாவது வேலைத் திட்டத்தை இன்று ஆரம்பித்து இருக்கின்றோம். அதற்கான நிதியையும் வழங்கவுள்ளோம்.

கிராமங்களுக்குச் சென்று பார்க்கும்போது அங்கு காணப்படுகின்ற வீடுகள் வசதியற்ற முறையில் காணப்படுபகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நாம் கடந்த அரசைப் போன்று இந்த விடயங்களுக்கு நான்கு வருடங்களை பயன்படுத்தாமல் ஒரு வருடத்தில் நிறைவு செய்யும் வகையிலேயே இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றோம்.

இந்த வருடம் நிறைவடைவதற்குள் இந்த வீட்டுத்திட்டத்தை அமைத்து மக்களிடம் கையளிப்போம். இந்த வேலைத்திட்டத்துக்குள் சிங்களம், முஸ்லிம், தமிழ் என வேறுபாடுகள் காட்டப்படமாட்டாது பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என அவதானித்து பாகுபாடு காட்டமாட்டோம்.

நாம் ஆட்சிக்கு வந்துவிட்டோம் என்ற காரணத்துக்காக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவில்லை. அதேபோன்று இது அரசியலில் பிரவேசிக்க வேண்டுமென்பதற்காக செய்யும் வியாபார வேலைத்திட்டமும் அல்ல.

சிறந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, 2/3 பெருமான்மையை பெற வேண்டியதே தற்போதைய எங்களது தேவைப்பாடாக இருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் இதுவரை காலமும் நிகழாத ஒரு சம்பவமாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவிக்காக ஒருவருடன் ஒருவர் மோதுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவிக்காக ஒரு கூட்டம் நடத்தப்பட்டமையையும் இலங்கை இதிகாசங்களில் இதுவரை காலமும் காணவில்லை.

தற்போது ஐக்கிய தேசியக்கட்சி பிளவடைந்து காணப்படுகிறது. தேர்தலில் வெற்றிப் பெறுவதற்குத் தலைவர் பதவி அவசியமில்லை. நான் நாட்டின் ஜனாதிபதியாக வரும்போது கட்சியின் தலைவராக இருக்கவில்லை. மாறாக ஜனாதிபதியானதன் பின்னரே அந்தப் பதவி எனக்குக் கிடைத்தது. மக்களுக்காக உழைக்கும் தலைவருக்கு தேர்தலில் வெற்றி பெற கட்சிப் பதவிகள் தேவையில்லை- என்றார்.

(எ)

## மெய்வன்மைப் போட்டிகள்






புதுக்குடியிருப்பு,பெப்.3

புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோ, ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் நாகரத்தினம் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர். (ஐ-222)

★ ★ ★



கொடிகாமம்.பெப்.3

கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லலிதா லிங்கேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ச.யுனிற்றன், ஆசிரிய ஆலோசகர் க.ஶ்ரீகணேசன் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி மல்லிகா பாலச்சந்திரன், ஓய்வுபெற்ற கணித ஆசிரியர் தி.சர்வேஸ்வரன் அயற் பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## முத்துசாமியின் மறைவுக்கு இந்துமாமன்றம் அஞ்சலி

பிரபல வர்த்தகப் பிரமுகரும் சமய, சமூகப் பணிகள் ஆற்றியவருமான எஸ். முத்துசாமியின் மறைவுக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் அஞ்சலி தெரிவித்துள்ளது.

அவர் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பணிகளை மலையகம் நோக்கி விரிவுபடுத்துவதற்குப் பல வழிகளில் உதவிசெய்த ஒருவராவார்.

அதுமட்டுமன்றி மாமன்றத்தின் பேராளர்களுள் ஒருவராகவும பதவிவகித்து மாமன்றத்தின் சமய, சமூக, கல்வி, மருத்துவப் பணிகளுக்குத் தன்னாலான உதவிகளைப் புரிந்தவர் என்று அஞ்சலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)





## விளையாட்டு நிகழ்வும் சிறுவர் பூங்கா திறப்பும்

கொடிகாமம்.பெப்.3

குடமியன் அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வும், சிறுவர் பூங்கா திறப்பும் கடந்த வியாழக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக பாதுகாப்புச் சேவைப் பணிப்பாளர் வி.சுகுமாரன், தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

கொடி தொடுதல், வளையம் இடுதல், பந்து பரிமாறல், தடி தாண்டல், கிழங்கு பொறுக்குதல் உள்ளிட்ட விளையாட்டுக்கள் நடைபெற்றன.

இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் கம்பன் இல்லம் 158 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், இளங்கோ இல்லம் 130 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து விருந்தினர்கள் சிறுவர் பூங்காவை நாடா வெட்டித் திறந்து வைத்தனர். நினைவுக் கல்லை பிரதம விருந்தினர் திரை நீக்கம் செய்து வைத்தார். (ஐ-159)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு





முல்லைத்தீவு,பெப்.3

முல்லைத்தீவு பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் பனிக்கன்குளம் கலைமகள் முன்பள்ளி ஆகியவற்றின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை முற்பகல் 1.30 மணியளவில் பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டு போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. அலைமகள், மலைமகள் என்ற இரண்டு இல்லங்களுக்கு இடையில் போட்டிகள் நடைபெற்றன.

169 புள்ளிகளைப் பெற்று அலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், 164 புள்ளிகளைப் பெற்று மலைமகள் இல்லம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

கலைமகள் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள்நடைபெற்றன. தொடர்ந்து சிறந்தவிளையாட்டு வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலை மற்றும் கிராமத்துக்கான பல்வேறு உதவிகளை வழங்கிய புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா பிரேமகாந் மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் இ. சந்திரரூபன் ஆகியோர் பாடசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-19)

# முடிவின்றி நீள்கிறது ஐ.தே.கட்சி குழப்பம்

## 6ஆம் திகதி கூடுகின்றது செயற்குழு!

கொழும்பு, பெப்.3

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அவருக்கு ஆதரவான உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என அறியமுடிகின்றது. இவர்கள் கடைசியாக நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலை 90 சதவீதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் அடுத்த செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் பிரச்சினை முற்றுப்பெறும் என அந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் அமையவுள்ள பரந்து பட்ட அரசியல் கூட்டணியின் தலைமைப் பதவியையும், வேட்பு மனுக் குழுவின் தலைவர் பதவியையும் சஜித்துக்கு வழங்குவதற்கு ரணில் அணி இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால் புதிய கூட்டணியின் செயலராக எவரை நியமிப்பது என்பதிலேயே தற்போது சிக்கல்நிலை உருவாகியுள்ளது.

ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு சஜித் அணியும், ரவி கருணாநாயக்க, நவீன் திஸாநாயக்க, தயாகமகே ஆகிய மூவரில் ஒருவரை நியமிப்பதற்கு ரணில் அணியும் முயற்சிக்கின்றன. இது தொடர்பில் இரு அணிகளுக்குமிடையில் நேற்றும் பேச்சுகள் தொடர்ந்தன. இன்றும் இடம்பெறவுள்ளன.

இறுதி முடிவு எட்டப்பட்ட பின்னர் அது தொடர்பில் அங்கீகாரத்தை பெறுவதற்காகவே 6 ஆம் திகதி ஐ.தே.கவின் மத்தியகுழு கூடுகின்றது. ஐ.தே.கவின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டிருந்த சரத் பொன்சேக்கா, ரோஸி சேனாநாயக்க, அஜித் பி. பெரேரா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் ஆகியோரை செயற்குழுவில் இணைத்துக் கொள்வது தொடர்பிலும் இதன் போது முடிவெடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது. (எ-44)

# தேர்தல் காலங்களில் ஒட்டினால் நன்மை

## கனகரத்தினம் கூறுகின்றார்

முல்லைத்தீவு, பெப். 3



தேர்தல் காலங்களில் அரசுடன் இணைந்து செயற்பட்டால் நன்மை கிடைக்கும் என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

கிராமத்துக்கு ஒரு வீடு திட்டத்துக்கான முள்ளியவளையில் நேற்றுமுன்தினம் அடிக்கல் நடும் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் விடுதலைப்போராட்ட காலத்தில் அன்று தொடக்கம் இன்றுவரை மாற்றங்கள் பல உள்ளன. தந்தை செல்வா காலத்தில் இருந்த போராட்டத்தின் தத்துவம் வேறு, தலைவர் பிரபாகரன் இருந்த போராட்ட காலத்தின் தத்துவங்கள் வேறு. இன்று எல்லாம் முடிந்து தமிழர்கள் நலிந்து கஸ்டப்பட்டு எல்லாவற்றையும் இழந்து நிற்கின்றனர்.

இந்தவேளையில், தமிழர்கள் எவருடன் சேர்ந்து நின்றால் தமிழ் நன்மை பெறலாம், தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்பதைப் புரிந்துகொண்டு அரசுக்கு ஆதரவு கொடுத்து, நல்லவாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டிய கடமை அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உள்ளது.

இனிவரப்போகும் தேர்தல் காலங்களில் இந்த அரசுடன் இணைந்து செயற்பட்டால் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கும்- என்றார். (த-19)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்ப்பாணம் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க. தேவநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கணக்காளர் திருமதி சிவமதி நந்தகுமார் கலந்துகொள்ளவுள் ளார்.

சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் வி. தயாபரநாதன், கௌரவிருந்தினர்களாக தென்மராட்சிவலய முதன்மை ஆசிரியர் வ.கன கரட்னம், தென்மராட்சிக் கல்வி வலயத் தொழில் வழிகாட்டி அதிகாரி க.ஈஸ்வரன், தென்மராட்சி சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# விசாரணை அதிகாரிக்கு கடைக்காரர் இடையூறா?

## நீண்ட வாதத்தின் பின் மறியல்

தலைமன்னார், பெப். 3

கடமை செய்யச்சென்ற நுகர்வோர் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரியைத் தாக்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கடை உரிமையாளர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த வியாழக்கிழமை மதியம் அந்த அதிகாரி உட்பட நான்கு அதிகாரிகள் மன்னார் மடு வீதிச் சந்தியிலுள்ள இனிப்பு பண்டங்கள் விற்கும் கடைக்குச் சென்று தங்களை அடையாளப்படுத்தி காட்சிப்படுத்தப்பட்ட உணவுப் பண்டங்களைப் பரிசோதனை செய்ய முயற்சித்தனர் என்றும், கடை உரிமையாளர் இடையூறுசெய்து கத்தியைக் காட்டி அவர்களை அச்சுறுத்தினார் என்றும் கடைக்காரர் மீது பாவனையாளர் அதிகார சபைத் தரப்பினர் குற்றஞ்சாட்டி மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடை உரிமையாளரை மறுநாள் கைது செய்த பொலிஸார் மன்னார் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் முற்படுத்தினர்.

கடைக்காரர் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணிகளான பா.டெனிஸ்வரன், செ.டினேசன் ஆகியோருக்கும் நுகர்வோர் அத்தியாவசியப் புலன்விசாரணை அதிகாரிகள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி எல்.அர்ஜுனுக்கும் இடையே மன்றில் கடும் விவாதம் நீண்டநேரம் இடம்பெற்றது. இறுதியில் சந்தேகநபரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-60,56)



# சுதந்திர தினத்துக்கான அணிநடை ஒத்திகை

வவுனியா, பெப்.3

சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா நகரசபை மைதானத்தில் அணிநடை ஒத்திகை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கை நாட்டின் 72 ஆவது சுதந்திர தினம்நாளை செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையில் இந்தஅணிநடை ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.

சுதந்திர தின நிகழ்வுகள் வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மைதானத்தில் நாளை சிறப்பாக நடைபெறவுள்ளன. இதற்கான அணிநடை ஒத்திகை பாடசாலை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தி. திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இந்த அணிநடை ஒத்திகை நடைபெற்றது. (ஜ-18)





# மெய்வன்மைப் போட்டி

கொடிகாமம், பெப்.3

மந்துவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி நிருபராணி அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் உரிமையாளர் வே.சிவநிதன், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஜ-159)



## மன்னன்குறிச்சி வீதியை சீரமைக்க கோரிக்கை

தென்மராட்சி, பெப். 3

நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதுள்ள மிருசுவில் பழைய வாய்க்கால் மன்னன்குறிச்சி வீதியை மிக விரைவில் சீரமைத்துத் தருமாறு அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பல தடவைகள் இவ்வாறு கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை குறித்த வீதி சீரமைக்கப்படவில்லை.

இந்த வீதியில் மன்னன்குறிச்சி கந்தசுவாமி கோவில் மற்றும் தேவாலயமும் உள்ளன. தினமும் ஏராளமானோர் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே விரைவில் இதனைச் சீரமைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்டபோது, பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏராளமான வீதிகள் சீரமைக்கப்படவேண்டியுள்ளன. வீதிகளைச் சீரமைக்குமாறு மக்களிடமிருந்து தினமும் மனுக்கள் வருகின்றன.

சபைக்குக் கிடைக்கும் வருமானம் வீதிகளைச் சீரமைத்து வழங்கும் அளவுக்குப் போதுமானதல்ல. அரசிடமிருந்து கிடைக்கும் நிதி மூலமாகவே வீதிகளைச் சீரமைக்கலாம்.

கடந்த வருடம் கிராம எழுச்சித் திட்டம் உட்பட்ட திட்டங்கள் மூலம் 200 வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த வீதி தொடர்பில் அந்தப் பகுதிக்குரிய வட்டார உறுப்பினருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (த-9)

## காட்டு யானைகள் அட்டகாசம் பயன்தரும் மரங்கள் சேதம்





வவுனியா,பெப்.3

வவுனியா சின்னத்தம்பனை கிராமத்தில் நேற்றுமுன்தினம் தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் பெறுமதியான வாழை மற்றும், தென்னை போன்ற பயன்தரும் மரங்களை அழித்துவிட்டுச் சென்றுள்ளன.

வவுனியா பூவரசங்குளம், சின்னத்தம்பனை, வேலங்குளம் சிவனகர் கந்தங்குளம் போன்ற கிராமங்களில் கடந்த சில மாதங்களாக காட்டுயானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலைத் தெரிவித்தனர்.

"தோட்டத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டே வாழ்ந்து வருகின்றோம். ஒருவாழைக் குலை ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்கிறோம். ஆனால் தற்போது பெறுமதியான 15 தொடக்கம் 20 வரையான வாழைக் குலைகள் சுமார்100 தொடக்கம் 150 வரையான வாழைமரங்கள் மற்றும் 100 தென்னை மரங்களை யானைகள் முற்றாக அழித்துவிட்டுச் சென்றுள்ளன" என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் யானை பாதுகாப்பு வேலிகள் அமைத்து தருமாறு பலதடவைகள் கோரிக்கை முன்வைத்த போதிலும் அதிகாரிகள் அது குறித்து அசமந்தமாக இருப்பதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-110)

## மன்னாரில் 'டைனமெட்' வெடி பொருள்கள் மீட்பு

மன்னார்,பெப்.3

மன்னார் சௌத்பார் கடற்கரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 'டைனமெட்' வெடி பொருள்கள்சில மீட்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடற்படையினரால் மீட்கப்பட்டன.

கடற்கரைப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அந்தப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொலித்தின் பையொன்றைச் சோதனையிட்ட போது அதில் இருந்து இந்த வெடி பொருள்கள் மீட்கப்பட்டன.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப் பட்டவில்லை. மேலதிக விசாரணைகளைக் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-56)



### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அமரர் திருமதி

**நவரத்தினராசா அருந்தவநாயகி**



மலர்வு 16.07.1963 மறைவு 04.01.2020

திதி: 03.02.2020

எமது அன்புத் தாயார் நவரத்தினராசா அருந்தவநாயகி அவர்கள் சிவபதம் அடைந்த 31 ஆம் நாள் கிரியைகள் இன்று (03.02.2020) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நிகழ இருப்பதால் அத்தருணம் யாபேரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சோடா கொம்பனி முன் ஒழுங்கை,
மல்லாகம்

குடும்பத்தினர்.

(es 30800) (13.17)

### 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 06 . 1939

மறைவு 26 . 01 . 2018

**திருமதி சாந்தநாயகி தணிகாசலம்**

திதி: தை மாத பூர்வபக்க நவமி

சேய்களுக்காக வரம் வேண்டி
தாய்மை தவம் இருந்த எம் அம்மாவே
உங்கள் நிழலெனும் சொர்க்கத்தில்
வாழ்ந்திருந்த எம்மை - தனியே
தவிக்க விட்டு கரம் பிடித்தவரை
நாடிச் சென்றது நியாயமா
அன்பைக் கற்றது உங்கள் அரவணைப்பில்
வேதனையிலும் ஆனந்தம் கண்டது உங்கள் அருகில்
ஒளியெல்லாம் உங்கள் உருவமாக
ஒலியெல்லாம் உங்கள் குரலாக
மனமெல்லாம் உங்கள் நினைவாக
கனவெல்லாம் உங்கள் வரவாக
உங்கள் நினைவிலே நீந்துகின்றோம்
எம் நிலையினை மறக்கின்றோம்
ஒரு தடவை உங்களை காண
உயிர் கூட நாம் தருவோம்
அம்மா மீண்டும் எம்மிடம் வந்துவிடுங்கள்
உங்கள் ஞாபகம் என்றும் எம் வாழ்விலே
எம்காலம் முடிந்தாலும் நீங்கள்
வாழ்வீர்கள் எம் நெஞ்சிலே....

151/1 (528) பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### மரண அறிவித்தல்

**திருமதி அனுரதி சசிதரன்**

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை)



திருமதி அனுரதி சசிதரன் நேற்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தாமோதரம்பிள்ளை - சிவ ராஜேஸ்வரி தம்பதிகளின் சிரேஸ்ட மகளும், சசிதரனின் அன்பு மனைவியும், அபினா (மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை), கிருசன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரதிக்காவின் அன்புச் சகோதரியும், அரவிந்தன், கிரிதரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளானை, இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

(es12469)(1.17)

தகவல்: குடும்பத்தினர்.
077 742 7207

# ஓரம்கட்டப்படுகின்றது நறுவிலிக்குளம் கிராமம்

## அங்குள்ள மாதர் சங்கத்தினர் குற்றச்சாட்டு

மன்னார்,பெப்.3

மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட நறுவிலிக்குளம் கிராமம் வீட்டுத்திட்டங்கள் உட்பட அனைத்து விதமான அபிவிருத்திகளிலும் ஓரங்கட்டப்படுகிறது. பாகுபாடுகள் பார்க்கப்பட்டே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மாதர் சங்கத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

வீட்டுத்திட்டம் வழங்கும்போது, மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.

நாங்கள் பொறுமையாகவே இருந்தோம். ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டம் வந்தவுடன் இதுதான் கடைசி இனி வீட்டுத் திட்டம் இல்லை என்று சொல்லப்பட்டதால் அதைப் பெற்றுக் கொண்டோம். கடன் பட்டு வீட்டைக் கட்டி முடித்தால் மிகுதிப் பணம் தரவில்லை.

அந்த வீட்டுத் திட்டம் கொடுக்காமல் இருந்திருந்தால் நாங்கள் கடனாளியாகாமல் நிம்மதியாக இருந்திருப்போம்.

ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான வீடு கொடுத்தபின் பத்து லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டம் 2018ஆம் ஆண்டு திருமணம் முடித்த வர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருமணம் முடித்தவர்கள் இன்னமும் வீடுகள் இல்லாமலும் உள்ளார்கள். உண்மையில் வீடு இல்லாதவர்களுக்கு கொடுத்திருந்தால் அவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கும். வீடு உள்ளவர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டதால் அரைகுறையாகவே உள்ளது.

அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும், எமது ஊர்ப்பக்கம் வருவதில்லை. எத்தனை உள்ளக வீதிகள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன. மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள் முதியவர்கள் சிரமப்படுகின்றனர். நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமப் பகுதியில் தெருவிளக்குகள் எரிவதில்லை.

உரியவர்களிடம் தெரியப்படுத்தினால் 'வருகிறோம்' என்றும் பதில் மட்டுமே வரும் தெருவிளக்குகளும் வராது உரியவர்களும் வர மாட்டார்கள்-என்றனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நறுவிலிக்குளம் கிராம அலுவலர்;

வீட்டுத்திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் போரால் பாதிக்கப்பட்டவர்கள், இந்தியாவிலிருந்து நாடுதிரும்பியவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருந்தன குறிப்பிட்ட சிலருக்கு வீடுகள் கிடைக்காமல் இருந்த கோபத்திலும் இந்த மாதிரியான குற்றச்சாட்டுக்களை தெரிவித்திருக்கலாம். ஆனால் சமுர்த்தி நிவாரணம் உட்பட அந்த கிராமத்து மக்களுக்கான அனைத்துச் சேவைகளும் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

மக்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் கருத்துத் தெரிவித்த போது, நறுவிலிக்குளம் கிராமம் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளது.

காரணம், கிடைக்கின்ற நிதியில் வட்டார உறுப்பினர்கள் ஊடாகவே அபிவிருத்திகள் செய்யப்படுகின்றன. நறுவிலிக்குளம் கிராமம் வங்காலை வட்டாரத்தினுள் வருகிறது. வட்டார உறுப்பினர்கள் தங்களது வட்டாரத்தின்மீது கவனம் எடுக்க வேண்டியது அவர்களது கடமை. நறுவிலிக்குளம் பகுதியில் தெருவிளக்குகள் பொறுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். அத்துடன் உள்ளக வீதிகளைப் பொறுத்தமட்டில் நறுவிலிக்குளம் ஆறு சிறு கிராமங்களை உள்ளடங்கிய பெரிய கிராமமாக இருப்பதால் வீதிகள் அதிகம்.

அபிவிருத்திப் பணிகளில் முன்னுரிமை நறுவிலிக்குளம் கிரமத்துக்கு வழங்கப்படும்.என்றார்.

(ஐ213)

## வவுனியாவுக்கு வந்தது சக்கரநாற்காலிப் பயணம்

4ஆம் திகதி கொழும்பைச் சென்றடையும்



வவுனியா,பெப். 3

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தி லிருந்து நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த சக்கர நாற்காலிப் பயணம் வவுனியாவை நேற்று வந்தடைந்தது.

முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட ம.மொகமட் அலி, ஜெகதீஸ்வரன், சகோதர மொழிபேசும் பிறேமச்சந்திர ஆகியோர் இந்தப் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவை வந்தடைந்த மூவரையும் புதிய பேருந்து நிலையத்தில் வைத்து வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் எஸ்.எஸ்.வாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் ச.கண்ணன், வர்த்தக பிரதிநிதிகள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் வரவேற்று வாழ்த்தினர்.

அவர்களின் செலவுக்காக தமிழ்விருட்சம் அமைப்பு 10ஆயிரம் ரூபாவையும், வவுனியா வர்த்தக சங்கத்தினர் 10ஆயிரம் ரூபாவையும் வழங்கினர்.

சிறப்புத் தேவையுடையோருக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும், மும்மதங்களுக்கிடையில் சமூக நல்லிணக்கம் ஏற்படுவதை நோக்காகக் கொண்டும் இலங்கை முழுவதுமான சுற்றுப்ப யணத்தை மேற்கொண்டுள்ளனர். இந்தப் பயணம் சுதந்திரதினத்தன்று கொழும்பைச் சென்றடையவுள்ளது.

மாற்றுத்திறனாளிகளான நாம் சமூக நல்லிணக்கம் வேண்டியும் எம்மைப்போன்று நாடு முழுவதிலுமுள்ள மாற்றுத்திறனுடையோரின் சிறப்பான எதிர்கால வாழ்வு கருதியும் சக்கர நாற்காலியில் இலங்கையைச் சுற்றி வலம் வருகிறோம். இந்தச் சுற்றுப் பயணத்தின் மூலமாக சில கோரிக்கைகளை நாம் இந்தச் சமூகத்திடம் முன் வைக்கின்றோம். அதாவது,

இன ரீதியான நல்லிணக்கத்தை நாட்டில் அனைவரும் பின்பற்ற வேண்டும். சிறப்புத் தேவையுடையோர் சமூகத்தில் ஏனையோர் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்க வழியேற்படுத்தப்பட வேண்டும்.

நாட்டிலுள்ள சகல மாற்றுத்திறனாளிகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்.

சிறப்புத் தேவையுடையோருக்கு சமூக, சமய, கலாசார விளையாட்டு, கல்வி, பொருளாதார விடயங்களில் சமவாய்ப்பு வழங்கப்படவேண்டும். அனைவருக்கும் அணுகு வசதிகளை பொதுநிறுவனங்கள், அரங்கு மேடைகள், பொது மலசல கூடங்கள், பொதுப் போக்குவரத்துகள், பொதுக்கட்டடங்கள், அலுவலகங்கள், மருத்துவமனைகள், சேவை மையங்கள், போக்குவரத்து தரிப்பிடங்கள் என சகல துறைகளிலும் அணுகும் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். வங்கிகள், மருத்துவமனைகள் போன்ற சேவைபெறும் மையங்களில் எமக்கு முன்னுரிமை வழங்க மாற்றுத்திறனாளிகளுக்கு விஷேட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். என்று அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள மனுவில் தெரிவித்துள்ளனர்.

(த-110)

## கட்டடத் திறப்பு விழா




கிளிநொச்சி,பெப்.3

கிளிநொச்சி பரந்தன் நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பரந்தன் சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலய அதிபர் செ.அம்பிகைபாகன், கண்டாவளை பிரதேச உதவிதிட்டமிடல் பணிப்பாளர் பூ.ராஜ்விேனாத்,நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் செயலாளர் அ.சசிகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-173)

## சுகாதார படையணியின் செயற்பாடுகள் ஆரம்பம்

முல்லைத்தீவு,பெப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதார மேம்பாட்டு அதிரடிப் படையணியினர் தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.உணவுப் பாதுகாப்பு மற்றும் டெங்குக் கட்டுப்பாடு உட்பட பொதுச்சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காக படையணியினர் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு நகரத்தில் அதிரடிச் சுகாதாரப் பரிசோதனைகள் இடம்பெற்றன.

இந்தச் செயற்பாடு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும், மாவட்டத்தின் பொதுச் சுகாதார பிரிவுகள் ஒவ்வொன்றிலும் அனைத்துப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், உணவு மருந்துப் பரிசோதகர், டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் போன்றோர் அடங்கிய சுகாதார மேம்பாட்டு அதிரடிப்படையணியால் மேற்கொள்ளப்படும்.

இதன் போது பிரதேசத்தின் பொதுச் சுகாதாரம் மேம்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்படுவதுடன் அந்தப் பிரதேசத்தின் பொதுச்சுகாதார பரிசோதகரின் செயற்பாட்டுத்திறனும் மேலும் ஊக்கப்படுத்தப்படும் என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(க-105)

# மாணவர்களின் ஆளுமையை விளையாட்டு வெளிப்படுத்தும்

இரவிச்சந்திரன் அடிகளார் சுட்டிக்காட்டு

**குருநகர்,பெப்.3**
**மாணவர்களுக்குள் உள்ள ஆளுமையை விளையாட்டுக்கள் வெளிப்படுத்தும். கற்றலில் ஈடுபாடற்ற மாணவர்கள் விளையாட்டுக்களில் பங்குபற்றி தமக்குள் இருக்கும் ஆளுமையை வெளிப்படுத்தலாம்.**

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்திரு எம்.பி.இரவிச்சந்திரன் அடிகளார் தெரிவித்தார். அண்மையில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடத் தேசிய பாடசாலை நடத்திய இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

விளையாட்டுக்களில் பங்கு கொள்ளும் மாணவர்கள் அனைவரும் போட்டிகளில் வெற்றியடைய முடியாது. மாணவர்கள் விளையாட்டுக்களில் பங்கு பற்றும் போது அவர்களது உடல் உள ஆரோக்கியம் மேம்படுகிறது. அவர்களது ஆளுமையை அது மேம்படுத்துகிறது. நாட்டுக்கோழி எல்லா இடமும் திரிந்து இறுக்கமாக வளர்கிறது. அது போன்று மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் சக மாணவர்களுடன் சேர்ந்து விளையாட்டுக்களில் பங்குபற்றித் தம்மை மேம்படுத்த வேண்டும்- என்றார். (க-51)

## மாணவர் ஆரோக்கியத்துக்கு விளையாட்டுக்கள் அவசியம்

குருநகர்,பெப்.3
மாணவர்களது ஆரோக்கியத்தை வளர்க்கும் களம் விளையாட்டு மைதானமாகும். எனவே மாணவர்கள் தமது உடல் உள ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்வதற்கு விளையாட்டுக்களில் தவறாது பங்கு பற்றுவது அவசியமாகும்.

இவ்வாறு யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வித்தியாலய அதிபர் க.கலியுகன் தெரிவித்தார். மாணவர்கள் விளையாட்டுப் போட்டியின் போது பங்கு கொள்ளும் இசையும் அசைவுநிகழ்ச்சியின் போது, தங்கள் படைப்புக்களை வெளிப்படுத்துகின்றனர். அதனைப் போன்று அனைத்து விளையாட்டுக்களிலும் ஈடுபட வேண்டும். விளையாட்டு அவர்களது ஆரோக்கியத்துக்குக் கை கொடுக்கும். அத்துடன் இணைப்பாடவிதான செயற்பாட்டில் விளையாட்டு முக்கியத்துவம் பெறுகிறது என்றும் தமது உரையில் தெரிவித்தார். (க-51)



## வீதி ஓட்டப் போட்டி

கொடிகாமம்,பெப். 3
கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் வீதி ஓட்டப் போட்டி கடந்த 24 ஆம் திகதி அதிபர் பெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்தும், பெண்களுக்கான மரதன் ஓட்டம் கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்தும் ஆரம்பமானது. தொடர்ந்து இரு பிரிவுகளது வீதி ஓட்டமும் இரணைமடு சந்தி ஊடாகச் சென்று பாடசாலையில் நிறைவு பெற்றது.

ஆண்கள் பிரிவில் கே.செந்தாளன் முதலாம் இடத்தையும், கே.மோகன்சங்கர் இரண்டாம் இடத்தையும், சுடர் வேங்கை மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். பெண்கள் பிரிவில் எஸ்.சுரந்தினி முதலாம் இடத்தையும், கே.கலைமதி இரண்டாம் இடத்தையும், எஸ்.துவாதிகா மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (ஐ-159)

# மெய்வன்மைப் போட்டிகள்



மன்னார்,பெப்.3
நானாட்டான் சிவராஜா இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

மேலும் நிகழ்வில் நானாட்டான் சிறி செல்வ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுருக்கள், மருத்துவர் சக்திபாலன், நானாட்டான் கோட்டக்கல்வி அலுவலர் ஜெகநாதன், மன்னார் இந்து சமய ஆசிரிய ஆலோசகர் ரமேஸ், நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறிஸ்கந்தகுமார், மன்னார் சட்டத்தரணிகளான மாரி வினோதன், செல்வராஜா டினேசன், நீகன் ஸ்டார் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-213)

✦✦✦✦



மருதங்கேணி,பெப்.3
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 1:30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி ரி.நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினரான மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியாக வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, சிறப்பு விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவனத்தின் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். மாணவர்களின் அணிநடை நிகழ்வு, விளையாட்டுப் போட்டிகள் என்பவை நடைபெற்றன. புனிதவதி இல்லம் முதலாம் இடத்தையும், சிவஞானவதி இல்லம் இரண்டாம் இடத்தையும், திலகவதி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ஐ-160)

✦✦✦✦





யாழ்ப்பாணம் பெப்.3
யாழ்ப்பாணம் சென்.பத்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணியளவில் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை அ.பீ.திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் பேன்கோல்டிங் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான அலெக்ஸிஸ் இந்திரஜித் லவல், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்களத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் (அபிவிருத்தி) பீ.இ.ஜீ. சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்துகொண்டனர். இந்தப் போட்டியில் ஆறு புதிய மெய்வல்லுநர் சாதனைகள் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)







கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (க-108)

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி சனி பகவான் ஜனவரி மாதம் 24ஆம் திகதி, தமிழுக்குத் தை மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 10.03 மணிக்கு, தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்குப் பிரவேசம் செய்துள்ளார்.

# திருக்கணித சனிப்பெயர்ச்சி பலன்கள்



## மிதுனம்



மிதுன ராசிக்காரர்களுக்கு இந்தச் சனிப்பெயர்ச்சியில் சனி பகவான் ஏழாமிடத்திலிருந்து எட்டாமிடமான அஷ்டமஸ்தானத்துக்குச் செல்கிறார். அஷ்டம சனி தொடங்குகிறதென்றாலே எல்லோருக்கும் மனத்தில் ஒரு பயம் இருக்கும். ஆனால், மிதுன ராசிக்காரர்கள் இதுகுறித்து பயப்படத் தேவையில்லை. அதற்குக் காரணம், மிதுன ராசிக்காரர்களுக்கு 'கண்டக சனி' என்று சொல்லக்கூடிய ஏழாமிடத்தில் சனி பகவான் இருக்கும் காலகட்டமாக இது அமைவதுதான்.

இந்தக் காலகட்டத்தில் மூன்று ஆண்டு காலத்தில் மிதுன ராசிக்காரர்களுக்கு எதுவும் சரியாக நடக்கவில்லை. அதிலும் குறிப்பாக, 2019ஆம் ஆண்டு மிதுன ராசியில் ராகு பகவான் இருக்க, தனுசு ராசியில் சனி பகவான் ஒருவருக்கொருவர் பார்வை பெற்றிருந்தனர். இதனால், பல சிரமங்களை அனுபவித்து வந்தீர்கள்.

ஆனால், இப்போது சனி மகர ராசிக்குச் செல்ல, குரு பகவான் உங்களின் ராசியை நேரடியாகப் பார்ப்பதால், சுப பலன்கள் பலவும் உங்களுக்கு நிகழக் காத்திருக்கின்றன.

2020ம் ஆண்டு முழுவதும் சனி பகவானால் நிகழும் சாதகமற்ற பலன்கள் நிகழாதவாறு குரு பகவான் பார்வை செய்கிறார். எனவே, மிதுன ராசிக்காரர்கள் அஷ்டமச் சனியால் கெடுதல் நடைபெறும் என்று பயப்படத் தேவையில்லை.

**திருக்கணிதப்படி கடந்த 24.1.2020 சனிப்பெயர்ச்சி நடந்துள்ளது. வாக்கியப் பஞ்சாங்கப்படி 26 டிசெம்பர் 2020 அன்று சனிப்பெயர்ச்சி நடைபெற உள்ளது.**

மிதுன ராசிக்கு சனி பகவான் பாக்கியஸ்தான அதிபதியாக வருகிறார். பாக்கியங்களைக் கொடுக்கக் கூடிய ஒரு கிரகம், சொந்த வீட்டில் ஆட்சியாக இருக்கும்போது சுப பலன்களைத் தரும் என்பது ஒரு ஜோதிட விதி. மற்ற ராசியினருக்கு செய்யக்கூடிய அசுப பலன்களை உங்களுக்குச் செய்வதற்கு வாய்ப்பே இல்லை.

எப்போதெல்லாம் ராசியை குரு பகவான் பார்க்கிறாரோ அப்போதெல்லாம் அந்த ராசி ஒளி மிக்கதாகத் திகழும்.

அஷ்டம சனி ஆரம்பிக்கும்போது நாம் சில முன்னெச்சரிக்கையான விஷயங்களைச் செய்தோமானால் 'வருமுன் காப்போம்' என்பதுபோல் எம்மால் எம்மைத் தற்காத்துக்கொள்ள முடியும். குறிப்பாக, புதிதாகத் தொழில் தொடங்குவது, புதிய பங்குதாரர்களுடன் சேர்ந்து முதலீடு செய்வது போன்ற காரியங்களை அஷ்டமச் சனியின் காலகட்டத்தில் செய்யாமல் இருப்பது மிகவும் நல்லது. தற்போது இருக்கும் வேலையை விட்டு விட்டு இன்னொரு வேலையைத் தேடுவது கூடாது.

இந்த வேலையில் இருந்து விலகி இன்னொரு இடத்துக்கு இடமாறுதல் செய்ய நினைப்பவர்கள், தமக்குக் கிடைக்கப்போகும் வேலையை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு, வேலையிலிருந்து விலக வேண்டும். 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று எதையும் செய்துவிடக் கூடாது. புதிதாகத் தொழில் தொடங்கும் காரியங்களையும் இன்னும் சில ஆண்டுகளுக்குத் தள்ளி வைப்பது நல்லது.

அஷ்டம சனியின் மிக முக்கியமான பலன் என்னவென்றால், பொருளாதாரச் சரிவு, நெருங்கிய உறவினரின் பிரிவு ஆகியவைதாம். பண ரீதியாக ஏற்படக்கூடிய பற்றாக்குறைகளைச் சரிசெய்யும் விதமாகச் சில சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டால் அஷ்டம சனியின் அசுப பலன்களிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

தாய்தந்தையர், அண்ணன்தம்பி, கணவன்மனைவி ஆகியோருடன் பரஸ்பரம் வீண்வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம். கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அந்த இடத்தைவிட்டு விலகிவிடுங்கள். அஷ்டம சனியின் நோக்கமே, ஒருவருக்கு எங்கு அடித்தால் வலிக்குமோ அந்த இடத்தைப் பார்த்து அடிப்பதுதான். நீங்கள் எவர் மீது நம்பிக்கையோடு இருக்கிறீர்களோ, அவர்கள் உங்களின் நம்பிக்கையை இழப்பார்கள்.

சனி பகவான் எந்தவிதக் கெடுதலையும் எமக்குத் தரமாட்டார். நாம் விழிப்புணர்வுடனும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடனும் இருந்தால் எம்மை நாமே காப்பாற்றிக்கொள்வது எளிது.

திருமணத்தை எதிர்நோக்கி இருப்பவர்களுக்குத் திருமணம் தள்ளிப் போகக்கூடிய வாய்ப்புகள் அதிகம். அதற்குத் தகுந்தாற்போல் உங்களின் செயற்பாடுளை மாற்றிக்கொள்வது நல்லது. அஷ்டமச் சனியின் சாதகமான ஒரு பலன் என்று பார்த்தால், வெளிநாட்டு வேலைக்குக் காத்திருப்பவர்களுக்கு உடனடியாக விசா வந்து சேரும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பொருளீட்ட அந்நிய தேசங்களுக்குச் செல்லக் கூடிய வாய்ப்பு அமையும்.

கடுமையான கெடுபலன்களைத் தராமல் பிரிவு, மனஸ்தாபம் போன்றவற்றை உறவுகளுக்கிடையே ஏற்படுத்துவார். ஆகவே, நாம் கொஞ்சம் முன்னெச்சரிக்கையாகத் தியானம் அல்லது யோகா, தெய்வ வழிபாடு ஆகியவற்றில் எமது மனதைச் செலுத்தினால் அஷ்டமச் சனியின் கெடுபலனிலிருந்து எம்மை நாமே தற்காத்துக் கொள்ளலாம்.

தினம் ஒரு சிந்தனை

## சோகங்களை சுகமாக்குவோம்

வாழ்க்கையை அடியோடு புரட்டிப் போடும் துயரங்களை பெரும்பாலான மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் குறிப்பிட்ட ஒரு சாராருக்கு, உண்மையிலேயே அது நிகழும்போது, அவர்களது வாழ்வின் ஆதார சுருதிகளாக இருந்த அனைத்தும் பறிக்கப்பட்டு, ஆழமான சோகம் அவர்களுக்குள் தங்கிவிடுகிறது. இந்தச் சோகத்தைக் கையாள்வதற்கு அநேக வழிகள் உள்ளன. சிலர் ஒரு மூலையிலேயே உட்கார்ந்துகொண்டு, மற்றவர்களுக்குத் துன்பம் உருவாக்கியவாறு தங்களையே பைத்தியமாக்கிக் கொள்கின்றனர். வேறு சிலர் இருக்கிறார்கள், அவர்கள் அதிக வருத்தம் உண்டாகும்போது, ஏதோ ஒரு வழியில் உபயோகம் நிறைந்த வேலையைச் செய்வார்கள். வழக்கமாக, தங்கள் வாழ்வில் மாபெரும் கர்ம யோகிகளாக இருப்பவர்கள் இந்த மாதிரி காயப்பட்ட மக்களாகவே இருக்கின்றனர்.

நீங்கள் வருத்தம் கொள்ளும்போது, எரிச்சலாகவும், கோபமாகவும், ஒட்டுமொத்த உலகமும் தவறாக இருப்பதாகவும் நினைத்தால், நீங்கள் ஒரு முட்டாள்தான்.

எந்த ஒரு உணர்ச்சியையும், தங்களது வாழ்வில் ஒரு ஆக்கப்பூர்வமான சக்தியாக ஒருவரால் உருமாற்ற முடியும். அது ஒரு எதிர்மறையான ஆற்றல் அல்ல. படைப்பில் எதிர்மறையானது என்று எதுவும் இல்லை. ஏதோ ஒன்று எதிர்மறை என்றும், மற்றொன்று நேர்மறை என்றும் நாம் நினைக்கலாம். ஆனால் எதிர்மின்னோட்டமும், நேர்மின்னோட்டமும் இணைவதால்தான் ஒரு விளக்கு ஒளி தருகிறது. எதிர்மறையானது தவிர்ப்பதற்கானதல்ல. அதுவும் நேர்மறை போல முக்கியமானது.

உங்களுடைய துயரம் உங்களை முழுமையற்றவராக நினைவுபடுத்தினால், அது நல்லது. உங்கள் வளர்ச்சிக்கு அந்தத் துயரத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்குள் சோகம் எழும்போது, நீங்கள் இன்னும் அதிக கருணையுடையவராக, அதிக அக்கறையுள்ளவராக மற்றும் அதிக அன்பு கொள்பவராக மாறினால், உங்களிடம் சிறிதளவு புத்திசாலித்தனம் இருக்கிறது எனலாம். நீங்கள் வருத்தம் கொள்ளும்போது, எரிச்சலாகவும், கோபமாகவும், ஒட்டுமொத்த உலகமும் தவறாக இருப்பதாகவும் நினைத்தால், நீங்கள் ஒரு முட்டாள்தான். அந்தக் கணத்தில் எவராவது உங்களைத் தொடர்பு கொண்டால், உங்களது வருத்தம் மிக எளிதில் கோபமாக மாறமுடியும். ஆகவே துயரத்தை நீங்கள் கோபமாக மாற்றுகிறீர்களா அல்லது அன்பு மற்றும் கருணையாக மாற்றுகிறீர்களா என்பது முக்கியம். நீங்கள் வருத்தமாக இருக்கும்போது, கருணை யானவராக உருமாறுவது மிகவும் எளிது.

உங்களுடைய சகல உணர்ச்சிகளையும் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது. மகிழ்ச்சிகரமாக இருப்பது மட்டும் முக்கியமானதல்ல. துயரத்தை நீங்கள் அறியவில்லை என்றால், நீங்கள் பக்குவமடைய மாட்டீர்கள். துயரத்தையும், வலியையும் நீங்கள் அறிந்திருந்தால்தான், நீங்கள் ஒரு பக்குவமான நபர். இல்லையென்றால், உங்களுக்குள் நிகழ்வது என்ன என்பதை நீங்கள் ஒருபோதும் புரிந்து கொள்ள மாட்டீர்கள் அல்லது உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் என்ன நிகழ்கிறது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்கள்.

## நாளை 04.02.2020

செவ்வாய்க்கிழமை

**விகாரி - தை 21**

திதி: தசமி மு.இ. 06.46வரை
நட்சத்திரம்- ரோகிணி மு.இ.11.06 வரை

**ராகுகாலம்- 03.35- 05.05 வரை**
**சுப நேரம்- 11.05- 12.35 வரை**
**எமகண்டம்- 12.35-02.05 வரை**

## காணாமல்...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாடு நெருங்குகின்ற வேளையில், வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கோசங்களும் வலுப்பெறுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ராஜபக்ஷக்கள்தான் பொறுப்பு என்ற விதத்தில் அவர்களின் கோசங்கள் அமைகின்றன. இப்படிக் கோசங்களை எழுப்பவதாலோ அல்லதுஐ.நா. சென்று முழங்குவதாலோ அல்லது சர்வதேச விசாரணையை நடத்துவதாலோ காணாமல் ஆக்கப்பட்டோரை உயிருடன் மீட்க முடியாது. அத்துடன் ராஜபக்ஷ்க்களையும் பொறுப்புக் கூற வைக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் உயிரிழந்து விட்டார்கள் எனவும், இதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு எனவும் ராஜபக்ஷ தரப்பினர் ஏற்கனவே அறிவித்து விட்டார்கள்.

தற்போது, காணாமல் ஆக்கப்பட்டோரும் உயிருடன் இல்லை. விடுதலைப் புலிகளின் தலைமையும் உயிருடன் இல்லை. எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் வேண்டுமெனில் அவர்களை, அவர்களின் உறவுகள் மண்ணுக்குள்தான் தோண்டி எடுக்க வேண்டும் - என்றார். (ஒ-5-22)

## மாணவர்களில்...

கொரோனா வைரஸ் பாதிப்புக்களையடுத்து சீனாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த இலங்கை மாணவர்களை, இலங்கை அரசு சிறப்பு விமானம் மூலம் நாட்டுக்கு அழைத்து வந்துள்ளது. அவர்கள் தியத்தலாவையிலுள்ள இராணுவ பயிற்சி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 14 நாள்கள் கண்காணிப்புக்குப் பின்னரே அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

வட்டுக்கோட்டை மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த இரு மாணவிகளும் அழைத்து வரப்பட்ட 33 மாணவர்களில் உள்ளடங்குகின்றனர். இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட ஆறு பேர் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள். 'கடந்த ஒரு வாரமாக சீனாவில் பெரும் அச்சத்துடன் தனித்தே வாழ்ந்தோம். அந்தப் பகுதியில் வெளியில் செல்வதற்கே ஓர் மரண பீதி நிலவியது. நாட்டுக்கு வந்ததே போதும் என்ற மனநிலையில் உள்ளோம்' என்று தியத்தலாவையிலுள்ள மாணவர்கள் சிலர் தெரிவித்தனர். (ஒ-5-105)

## யாழ். மருத்து...

பட்டுள்ளது. அவர் நேற்று மாலை மருத்துவமனையிலிருந்து வெளியேறினார் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர், கடமை நிமித்தம் தாய்லாந்துக்கு அண்மையில் சென்றிருந்தார். அவர் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் திரும்பி வந்திருந்தார். இந்த நிலையில் உடல் நலக் குறைவால் அவர் பாதிக்கப்பட்டிருந்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குரிய அறிகுறிகள் காணப்பட்டதைத் தொடர்ந்து, யாழ். போதனா மருத்துவமனையில் புனர்வாழ்வு சிகிச்சைப் பிரிவில் நேற்று தனிமைப்படுத்தப்பட்டார். அவரைப் பார்வையிடுவதற்கும் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

அவரது குருதி மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இதன்போது ஆய்வு கூடத்துக்குள்ளும் எவரும் அனுமதிக்கப்படவில்லை. அதன் பின்னர் அவருக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு நேற்று மாலையே மருத்துவமனையிலிருந்து வெளியேறினார். (ஒ-5-105)

## 5 உறுப்பினர்...

கள் அனைவரும் விலகி, முற்றிலும் இளையவர்களை களமிறக்க முடியாது. அனுபவமிக்கவர்கள், பெண்கள், இளையவர்கள் ஒரு சரியான கலவையாக அமைய வேண்டும். ஏற்கனவே, ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் நிலையில், அவர்களுடன் ஐந்து புதிய முகங்களை இறக்கலாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான, நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் இளையோருக்கு வாய்ப்பளித்து, தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுங்க வேண்டுமென எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்கனவே உள்ள 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், ஐந்து புதிய முகங்களை இறக்கலாம். அதில் இளையவர்களும், பெண்களும் அடங்க வேண்டும். இதில் ஏற்கனவே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தோல்வியடையலாம். அல்லது அடுத்த முறை அவர்கள் ஒதுங்க வேண்டும். அந்த இடங்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும். இது ஒவ்வொரு தேர்தலிலும் முறைப்படி ஒரு சுற்றாக இடம்பெற வேண்டும்.

இளையோருக்கும், பெண்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்பதுதான் எமது நீண்டநாள் எதிர்பார்ப்பு. எனினும், எமக்கு யாழ்ப்பாணத்தில் இரண்டு வேட்பாளர்கள் மட்டும்தான் ஒதுக்கப்பட்டனர். இதற்காக இளையவர் ஒருவரை நாம் நீண்டநாளாக தயார்படுத்தி வைத்துள்ளோம்.

அதேபோல, ரெலோவும் இளையவர் ஒருவரை களமிறக்குகிறது. ஆகவே எஞ்சியுள்ள 3 வெற்றிடங்களுக்கும் தமிழ் அரசு கட்சி 3 பெண்களை களமிறக்கினால், மிகச்சரியான கலவையாக இருக்கும். பெண்களுக்கும் சம அங்கத்துவம் வழங்க வேண்டுமென்ற சுமந்திரனின் எதிர்பார்ப்பும் பூர்த்தியாகும். எமது எதிர்பார்ப்பும் பூர்த்தியாகும், என்றார். (ஒ,5)

## நாளை கரிநாள்...

கரிநாளாகக் கடைப்பிடிக்குமாறு கோரியுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகள், நாளை இடம்பெறும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு அறைகூவல் விடுத்துள்ளனர்.

வடகிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பத்மநாதன் கருணாவதி, கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த அழைப்பை விடுத்தார். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலிருந்து காலை 10 மணிக்கு பேரணி ஆரம்பமாகி பழைய பேருந்து வீதியைச் சென்றடையும்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்பவர்களுக்கான இலவசப் போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சுகந்தினி (0778218775), வடமராட்சி கிழக்கு அருள்மதி (0766524715), பூநகரி, வலைப்பாடு, கிராஞ்சி, நாச்சிக்குடா கமலா (0760436388), கிளிநொச்சி மாவட்டம் கருணாவதி (0774279987), கிளிநொச்சி கிருஸ்ணபுரம் உதயநகர், செல்வாநகர் ஊடாக கனகபுரம் தெரு வழியாக டிப்போ சந்தி, கந்தசுவாமி கோயில் வரை சு.இராமசாமி (0773749618), ஜெயந்திநகர் கனகபுரம் கணேசபுரம் திருநகர் ஊடாக கந்தசுவாமி ஆலயம் வரை நாகேஸ்வரி (0762189192), வவுனியா தி.அமுதா (0768078615), மன்னார் ரஞ்சினி (0772638399), முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மதி (0772123604), வள்ளிபுனம் பிருந்தா (0767355206), கொக்குளாய் உதயராணி (0778604511), முள்ளிவாய்க்கால் தயாழினி (0779219368) ஆகியோர் போக்குவரத்து ஒழுங்குக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கிழக்கு மாகாணத்துக்கான போராட்டம் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் ஆரம்பமாகி காந்தி பூங்காவைச் சென்றடையவுள்ளது. (ஒ-5-35)

## மாணவன்...

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று மதியம் உயிரிழந்துள்ளார். யாழ். மத்திய கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் , கோப்பாய் தெற்கு, கோப்பாயைச் சேர்ந்த சிவகுமார் நிலோஜன்(வயது 19) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை பிரத்தியேக வகுப்புக்குச் சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்துள்ளார்.

பின்னர் "படுக்கப்போகிறேன் எழுப்ப வேண்டாம்" எனக்கூறி வீட்டுக்குள் சென்றவர் தூக்கில் தொங்கியுள்ளார். அந்த நேரம், மாணவரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு வந்த போதும் அவர் அதற்குப் பதிலளிக்கவில்லை. நீண்டநேரமாக கைத்தொலைபேசியின் அழைப்பொலி கேட்டதால்,அவரின் சகோதரி அறைக்குள் சென்று பார்த்தபோது, மாணவன் தூக்கில் தொங்க முயல்வதைக் கண்டு கூச்சலிட்டுள்ளார்.

அதனையடுத்து தூக்கிலிருந்து அவர் உறவினர்களால் மீட்கப்பட்டு, யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும்,அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று மதியம் அவர் உயிரிழந்தாரென்று உறவினர்கள் தெரிவித்தனர்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமாரின் மரண விசாரணையை அடுத்து , உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ந)

## போராட்டத்துக்கு...

கள் நடத்தும் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குவதாக, கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலை வர் பா.உஜாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஈழத்தமிழர்கள் இலங்கை சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் இன்று வரையில் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் எம் மக்களும் காலாதிகாலமாக நீதி கேட்டுப்போராடிக் கொண்டிருக்கின்ற போதும் எமது மக்களின் போராட்டங்களை யாருமே கண்டு கொள்ளாத நிலையிலே விரக்தியின் விளிம்பில் நின்று இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடணப்படுத்தி எமக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும் என்று எமது உறவுகள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்பதற்காக கொழுத்தும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் எமது உறவுகள் கண்ணீரோடு வீதிகளில் இறங்கிப் போராடிக் கெண்டிருக்கும் போது உண்மையான அறத்துடன் தமிழ் இனத்தின் மீது பற்றுக்கொண்ட எவரும் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்க மாட்டார்கள்.

அதேவேளை சுதந்திர நாளை கரிநாளாக அறிவித்து அன்றைய நாளில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவும் கிழக்கில் அம்பாறை மாவட்டத்திலும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஒருங்கிணைப்பில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவிருக்கின்றது.

இதற்கு முழுமையான ஆதரவு வழங்குவதோடு போராட்டத்தில் கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு தமிழ் உறவுகள் அனைவரிடமும் அன்புரிமையுடன் கேட்டு நிற்கின்றோம், என்றுள்ளது. (ஒ,5)

## கொள்ளையர்கள்...

டிக் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

காசிலிங்கம் லீலா என்பவரது தற்காலிக வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மூன்று பெண்களும், ஆண் ஒருவரும் அந்த வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தனர். முகமூடி அணிந்த இரண்டு கொள்ளையர்கள் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். வீட்டிலிருந்த நான்கு பேரையும் கடுமையாகத் தாக்கிவிட்டு அவர்களைக் கயிற்றால் கட்டிப்போட்டு விட்டு வீட்டில் இருந்த பணம் நகை என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கைத்தொலைபேசிகள், மடிக்கணினி, கழுத்தில் அணிந்திருந்த ஏழரைப் பவுண் தங்க நகைகள், அலுமாரியிலிருந்த 80 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்றதொரு கொள்ளைச் சம்பவம் தேவிபுரத்தில் அண்மையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-19)





சீனாவில் கொரோனா வைரஸின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளது. அந்த நாட்டின் சனநெரிசல்மிக்க முதன்மை வீதிகள் அனைத்தும் தற்போது வெறிச்சோடிப் போயுள்ளன. அது தொடர்பான ஒளிப்படங்களை சர்வதேச ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)

# இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்களை முறியடிப்பார்கள் பலஸ்தீனர்கள்

## பலஸ்தீன அதிபர் அப்பாஸ் அறிவிப்பு

ஜெருசலேம், ஜன. 3

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்களில் இருந்து ஜெருசலேம் பகுதியை பலஸ்தீனர்கள் விடுவிப்பார்கள். அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் ஒருபோதும் நாம் அஞ்சப்போவதில்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் பலஸ்தீன அதிபர் அப்பாஸ்.



ஜெருசலேம் நகர் தொடர்ந்து சர்ச்சைக்குரியதாய் இருந்து வந்தது. இந்த நகரை ஆக்கிரமித்து வைத்திருந்த இஸ்ரேல், ஜெருசலேமைத் தனது தலைநகர் என்று அறிவித்திருந்தது. இதை 2018ஆம் ஆண்டு அமெரிக்கா அங்கீகரித்தது. இதையடுத்து கிழக்கு ஜெருசலேமில் தொடர்ந்து பதற்றம் நிலவியது. இந்தப் பதற்றத்துக்கு அண்மையில் தீர்வொன்றை முன்வைத்தார் ட்ரம்ப்.

இந்தத் திட்டத்தின்படி, மேற்குக் கரைப் பகுதியில் வசிக்கும் பலஸ்தீன மக்களின் எல்லைப்பகுதிக்கான தன்னாட்சி அதிகாரம் குறைக்கப்படும், அல்லது பறிக்கப்படும். மேலும், இஸ்ரேல் அரசால் ஜெருசலேம் நகரின் கிழக்கு பகுதியில் அமைக்கப்பட்ட குடியிருப்புகள் அனைத்தும் இஸ்ரேல் நாட்டு எல்லையுடன் இணைக்கப்படும். ஜோர்டான் பள்ளத்தாக்குப் பகுதியும் இந்த இணைப்புக்குள் அடங்கும். இதற்குப் பதிலாக, பலஸ்தீன நாட்டின் பூர்வீக குடிமக்களான ஹமாஸ் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஸா முனைக்கு தனி நாடு என்ற அந்தஸ்து அளிக்கப்படும் என்பது ட்ரம்ப்பின் சமரச திட்டத்தின் ஒருபகுதியாகும். இதற்கு முழுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ள பலஸ்தீன அதிபர் அப்பாஸ், இந்தத் திட்டத்தை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

"இந்த சமரசத் திட்டம் தொடர்பாக என்னுடன் தொலைபேசியில் பேசுவதற்கு முயன்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் அழைப்புகளை நான் நிராகரித்து விட்டேன். இவ்விவகாரம் தொடர்பாக எங்களுடன் (பலஸ்தீனம்) ஆலோசனை நடத்தினேன் என்று கூறும் வாய்ப்பாக இதை ட்ரம்ப் பயன்படுத்திக் கொள்வார் என்பதால் அவரது அழைப்புகளுக்கு நான் பதில் அளிக்கவில்லை. ஜெருசலேம் நகரை நான் விற்று விட்டேன் என்ற அவப்பெயர் எனது வரலாறில் பதிவாகி விடக்கூடாது என்பதால் அமெரிக்காவின் இந்தச் சமரசத் தீர்வை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று அப்பாஸ் மேலும் தெரிவித்தார். (ம)



# பலி 320

பீஜிங், ஜன. 3

சீனாவில் பரவிவரும் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 320ஆக அதிகரித்துள்ளது. பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு போதிலும் சீனாவில் நாளுக்குநாள் கொரோனாவின் தாக்கம் வலுவடைந்து வருகிறது. நேற்றுமுன்தினம் மட்டும் 45 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 320ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பார்த்த செயல் வெற்றி தரும். நண்பர்களிடம் இனிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** வழக்கத்திற்கான மாறான பணி தொந்தரவு தரலாம். குடும்பத்தினரின் உதவியால் செயல்கள் எளிதில் நிறைவேறும். பெண்கள் நகைப் பாதுகாப்பில் கவனம் தேவை.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த தாமதமான பணி நிறைவேறும்.

**கடகம்:** உழைப்புக்கு ஏற்ற நற்பலனை பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வாழ்வில் கூடுதல் நம்பிக்கை ஏற்படும். பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு கைகூடும்.

**சிம்மம்:** எளியசெயலும் கடினமாக தோன்றலாம். பொது விவகாரத்தில் நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கவும். சீரான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** அதிக பொறுப்புணர்வுடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள நடைமுறை சீராகும். முக்கிய தேவைகளுக்கு கடன் பெறும் சூழல் உருவாகும். குடும்பத்தில்மகிழ்ச்சிஅதிகரிக்கும்.

**துலாம்:** நண்பர்களின் செயலை நினைத்துப் பெருமை கொள்வீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பரிடம் சொந்த விஷயங்களைப் பேசுவீர்கள். செயல்களில் தேவையான உதவி கிடைக்கும். தொழிலில் குறிப்பிட்ட வளர்ச்சி இலக்கை உற்சாக மனதுடன் அடைவீர்கள்.

**தனுசு:** மனதில் சிறு சஞ்சலம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நன்மை தரும்.

**மகரம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. புதிய அணுகுமுறையால் தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். தியானம் செய்வதால் மனதில் புத்துணர்வு ஏற்படும்.

**கும்பம்:** சான்றோர்களின் ஆசி கிடைக்கும். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். ஆதாய வருமானம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு விலகும்.

**மீனம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விவாதப் பேச்சை தவிர்ப்பீர். தொழில், வியாபாரத்தில் குறிப்பிட்ட இலக்கை நிறைவேற்ற கூடுதல் அவகாசம் தேவைப்படும்.

# அமெ., ஆஸ்திரேலியாவுக்குள் சீனர்கள் செல்லத் தடை



வொஷிங்டன், ஜன. 3
சீனாவில் கொரோனாவின் தாக்கம் அதிகமானதை அடுத்து, சீனர்களுக்கும் கொரோனாவின் தாக்கம் உணரப்பட்டுள்ள சீனப் பகுதிகளுக்குச் சென்றுவரும் வெளிநாட்டவர்களுக்கும் தமது நாட்டுக்குள் நுழைவதற்கு அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகள் தடை விதித்துள்ளன.
இதுகுறித்து ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மோறிசன் கூறும்போது, 'சீனாவில் கொரோனா வைரஸ் பரவிய நகரிலிருந்து வருபவர்கள் இரு வாரங்களுக்கு ஆஸ்திரேலியாவுக்குள் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த முடிவு மூத்த மருத்துவ ஆலோசகர்களிடம் ஆலோசனை பெற்ற பின்னரே எடுக்கப்பட்டது' - என்றார். (ம)



# வெட்டுக்கிளியால் அவசர நிலை

இஸ்லாமபாத், ஜன. 3
பாகிஸ்தானில் வெட்டுக்கிளிகளின் தாக்கத்தை அடுத்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தான் நாட்டின் தெற்கு மாகாணமான சிந்து முதல் வடகிழக்கு மாகாணமான கைபர் பக்துவா வரையிலான பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டுள்ள கோதுமை உள்ளிட்ட பயிர்களை வெட்டுக்கிளிகள் நாசம் செய்து வருகின்றன. கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பயிர்களை வெட்டுக்கிளிகள் நாசம் செய்துள்ளதால், லட்சக்கணக்கான ஹெக்டெர் விவசாய நிலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு கோடிக்கணக்கான நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.
இந்த வெட்டுக்கிளித் தாக்குதலை சமாளிக்க அந்த நாட்டில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நோபல் வெல்வாரா கிரெட்டா?




ஸ்டோக்ஹோம், ஜன. 3
பருவநிலை மாற்றத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து வரும் சுவீடன் மாணவி கிரெட்டா தன்பேர்க் நோபல் பரிசுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள் ளார்.
2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், பருவநிலை மாற்றத்துக்கு எதிராகப் பள்ளி மாணவர்கள் போராட்டத்தை சுவீடன் நாடாளுமன்றத்துக்கு வெளியே கிரெட்டா தன்பெர்க் என்ற இளம் மாணவி தொடங்கினார்.
ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது 'பிரைடேஸ் பார் பியூச்சர்' என்ற ஹாஷ்டேக் உலக அளவில் பிரபலமானது. அந்தப் போராட்டத்தில் லட்சக்கணக்கானோரை பங்கேற்கச் செய்ததில் கிரெட்டா முக்கிய உந்துசக்தியாகத் திகழ்ந்தார். இந்த நிலையில் 2020ஆம் ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசுக்கு கிரெட்டா தன்பெர்க் மற்றும் 'பிரைடேஸ் பார் பியூச்சர்' அமைப்பின் பெயரை சுவீடன் நாட்டின் இடதுசாரி கட்சி எம்.பி.க்கள் ஜென்ஸ் ஹோலம் மற்றும் ஹக்கன் ஸ்வெண்ணலிங் ஆகியோர் பரிந்துரை செய்துள்ளனர். (ம)

LOLC FINANCE PLC
LOLC FINANCE
Gigantic Motor Vehicle Auction Sale
On Thursday 06th February 2020



TO BE HELD AT
NO. 363, MANNAR ROAD, VEPPANKULAM, VAVUNIYA.
Commencing 10.00 a.m Onwards

FOUR WHEEL TRACTOR

| | | | | |
|---|---|---|---|---|
| FARMTRAC FT60N | 3147CC | 2011 | RD | XXXX |
| JOHN DEERE 5047D | 2900CC | 2012 | RD | XXXX |
| JOHN DEERE 5045D | 2900CC | 2012 | RE | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2016 | RF | XXXX |
| MASSEY FERGUSON | 2955CC | 2017 | RF | XXXX |
| TAFE 45DI | 7500CC | 2015 | RE | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2016 | RE | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2017 | RF | XXXX |
| JOHN DEERE | 2300CC | 2012 | RC | XXXX |
| KUBOTA L4508 | 2197CC | 2017 | RE | XXXX |
| JOHN DEERE 3036E | 1642CC | 2018 | RF | XXXX |
| JOHN DEERE 3036E | 1642CC | 2018 | RF | XXXX |
| KUBOTA L4508 | 2197CC | 2017 | RF | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2015 | RE | XXXX |
| MAHINDRA GX 3600 | 1663CC | 2018 | RF | XXXX |
| MAHINDRA GX 3600 | 1663CC | 2018 | RF | XXXX |

HARVESTER

KUBOTA
VIMCO
DANXIA
AGROTECH
DSL
MUBOTA
AGROTECH

LORRY

| | | | | |
|---|---|---|---|---|
| TATA LPK1615 | 5883CC | 2006 | LB | XXXX |
| TATA LPT709 | 3783CC | 2017 | LN | XXXX |
| TATA SFC407 | 2956CC | 2011 | LJ | XXXX |
| MITSUBISHI CANTER | 3900CC | 1997 | GT | XXXX |
| TATA LPT709 | 3784CC | 2010 | LH | XXXX |
| NISSAN GC-8K82TN | 2180CC | 2000 | JZ | XXXX |
| JAC HFC1048K | 4324CC | 2008 | LF | XXXX |
| ISUZU TKG-NJR85AD ELF | 2990CC | 2012 | LM | XXXX |

THREE WHEELER

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ | 174CC | 2010 | YD | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | AAY | XXXX |
| BAJAJ | 174CC | 2009 | QV | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | JW | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAB | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | AAU | XXXX |
| TVS KING | 200CC | 2011 | YR | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YP | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YN | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | AAR | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAA | XXXX |
| BAJAJ | 198CC | 2013 | AAM | XXXX |
| PIAGGIO | 395CC | 2014 | QY | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | YF | XXXX |
| BAJAJ | 174CC | 2008 | QQ | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAD | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YO | XXXX |
| BAJAJ | 198CC | 2010 | YG | XXXX |
| BAJAJ | 174CC | 2008 | QQ | XXXX |
| BAJAJ | 174CC | 2009 | QV | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAE | XXXX |
| BAJAJ | 198CC | 2015 | AAW | XXXX |
| BAJAJ | 174CC | 2010 | QX | XXXX |

TIPPER

| | | | | |
|---|---|---|---|---|
| ASHOK LEYLAND COMMET | 6540CC | 2010 | LH | XXXX |
| ASHOK LEYLAND COMMET | 6540CC | 2005 | LD | XXXX |

TRUCK

| | | | | |
|---|---|---|---|---|
| MAHINDRA MAXXIMO PLUS | 909CC | 2013 | PV | XXXX |
| CAKY SC1021CD11 | 1809CC | 2015 | DAD | XXXX |

JEEP

| | | | | |
|---|---|---|---|---|
| HONDA V-HH3 | 650CC | 1999 | JY | XXXX |

TWO WHEEL TRACTOR

| | | | | |
|---|---|---|---|---|
| LION RK125 | 624CC | 2016 | SO | XXXX |

VAN

| | | | | |
|---|---|---|---|---|
| TOYOTA U-LH113V | 2770CC | 1990 | 57 | XXXX |

CAR

| | | | | |
|---|---|---|---|---|
| NISSAN SUNNY | 1500CC | 1983 | 14 | XXXX |

JCB

| | | | | |
|---|---|---|---|---|
| JCB 3CX BACKHOE LOADER | 3990CC | 1996 | RS | XXXX |

MOTOR BIKE

| | | | | |
|---|---|---|---|---|
| MAHINDRA ROCKSTAR | 110CC | 2017 | BFV | XXXX |
| TVS APACHE | 150CC | 2018 | BGO | XXXX |
| TVS SCOOTY ZEST | 110CC | 2013 | BCT | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2016 | BEQ | XXXX |
| BAJAJ | 130CC | 2017 | BFB | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | BCR | XXXX |
| SUZUKI GIXXER SF-GSX | 150CC | 2016 | BDT | XXXX |
| HERO PLEASUERE | 100CC | 2014 | BBA | XXXX |

MOTOR BIKE

| | | | | |
|---|---|---|---|---|
| TVS STRYKER | 124CC | 2018 | BGH | XXXX |
| YAMAHA RAY-ZR | 113CC | 2017 | BFZ | XXXX |
| TVS METRO | 100CC | 2015 | BCL | XXXX |
| TVS METRO | 99.7CC | 2017 | BFL | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2017 | BFX | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | BEO | XXXX |
| BAJAJ PULSAR 200NS | 199CC | 2017 | BFJ | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2016 | BEO | XXXX |
| HERO HF DELUXE | 97CC | 2016 | BDS | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2017 | BGH | XXXX |
| BAJAJ CT100 | 100CC | 2015 | BCG | XXXX |
| TVS APACHE | 150CC | 2017 | BGO | XXXX |
| BAJAJ CT100 | 99CC | 2017 | BGF | XXXX |
| TVS XLSUPER HAVYDURY | 69.9CC | 2017 | BGG | XXXX |
| YAMAHA FZ-S VER2 | 149CC | 2017 | BFI | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2017 | BEY | XXXX |
| HERO SPLENDOR ISMART | 97CC | 2014 | BCG | XXXX |
| BAJAJ PULSAR 150 UG4.5 | 149CC | 2018 | BGJ | XXXX |
| TVS SCOOTY PEP | 90CC | 2017 | BFK | XXXX |
| TVS APACHE | 180CC | 2017 | BFU | XXXX |
| BAJAJ CT 100 | 99.27CC | 2017 | BEV | XXXX |
| HERO MAESTRO EDGE | 110CC | 2018 | BGO | XXXX |
| HONDA DIOSCV110 | 110CC | 2018 | BHI | XXXX |
| BAJAJ CT 100 | 99.27CC | 2015 | BCV | XXXX |
| YAMAHA FZSVER3 | 149CC | 2017 | BFX | XXXX |
| TVS SCOOTY PEPT | 90CC | 2017 | BGA | XXXX |
| HONDA DIO SCV | 110CC | 2018 | BGQ | XXXX |
| HERO HF DELUXE | 100CC | 2018 | BGJ | XXXX |
| BAJAJ AVENGER STREET | 150CC | 2016 | BEU | XXXX |
| YAMAHA RAY-ZR | 113CC | 2017 | BFV | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | BES | XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | BFH | XXXX |
| TVS APACHE | 150CC | 2018 | BGS | XXXX |
| DEMAK CIVIC | 110CC | 2016 | BFZ | XXXX |
| DEMAK CIVIC | 110CC | 2017 | BFP | XXXX |
| MAHINDRA GUSTO | 110CC | 2015 | BCK | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | BAW | XXXX |
| YAMAHA RAY | 113CC | 2013 | BAP | XXXX |
| MAHINDRA ROCKSTAR | 110CC | 2017 | BFC | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2016 | BEX | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | BAS | XXXX |
| TVS APACHI | 160CC | 2016 | BEX | XXXX |
| MAHINDRA GUSTO VX | 110CC | 2017 | BFI | XXXX |
| MAHINDRA UZO | 125CC | 2015 | BFQ | XXXX |
| YAMAHA FZ-S | 153CC | 2013 | BAW | XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2016 | BER | XXXX |
| HERO DASH VX | 100CC | 2017 | BEW | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | BEN | XXXX |
| HERO MAESTRO | 110CC | 2017 | BGB | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2015 | BCA | XXXX |
| TVS APACHE | 150CC | 2015 | BCZ | XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2017 | BFA | XXXX |
| TVS METRO | 100CC | 2017 | BFV | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2017 | BFC | XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2015 | BCH | XXXX |
| TVS METRO | 100CC | 2017 | BFI | XXXX |
| TVS METRO | 100CC | 2014 | BBK | XXXX |
| MAHINDRA GUSTO | 125CC | 2016 | BFI | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | BCA | XXXX |
| TVS Hd70 | 70CC | 2017 | BFZ | XXXX |
| HERO DASH | 110CC | 2015 | BDD | XXXX |
| MAHINDRA ROCKSTAR | 110CC | 2017 | BGU | XXXX |
| TVS APACHE | 150CC | 2014 | BBW | XXXX |
| TVS METRO | 100CC | 2016 | BEC | XXXX |
| HONDA CB HORNET | 160CC | 2016 | BFE | XXXX |
| YAMAHA FZ-16 | 153CC | 2015 | BDV | XXXX |
| TVS APACHE | 200CC | 2017 | BFE | XXXX |
| HONDA DIO | 110CC | 2015 | BDM | XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2014 | BBE | XXXX |
| HONDA HORNET | 160CC | 2016 | BEF | XXXX |
| HERO HUNK | 150CC | 2014 | BBK | XXXX |
| BAJAJ PULSAR | 200CC | 2016 | BED | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2016 | BFP | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | BDO | XXXX |
| HERO HUNK | 150CC | 2014 | BCH | XXXX |
| YAMAHA RAY-Z | 113CC | 2015 | BDD | XXXX |
| HONDA DIO | 110CC | 2016 | BEV | XXXX |
| BAJAJ PLATINA | 100CC | 2014 | BBB | XXXX |
| MAHINDRA GUSTO | 110CC | 2017 | BGW | XXXX |
| YAMAHA RAY ZR | 113CC | 2017 | BFO | XXXX |
| BAJAJ PLATINA | 100CC | 2014 | BAX | XXXX |
| TVS APACHE | 200CC | 2016 | BDP | XXXX |
| BAJAJ PLATINA | 100CC | 2013 | BAL | XXXX |
| HERO DASH | 110CC | 2017 | BFG | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2015 | BCP | XXXX |
| YAMAHA RAY | 113CC | 2014 | BBS | XXXX |
| TVS APACHE | 150CC | 2015 | BFB | XXXX |
| BAJAJ PULSAR | 160CC | 2017 | BFF | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2014 | BBV | XXXX |
| TVS APACHE | 150CC | 2014 | BBW | XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | BFG | XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | BEX | XXXX |
| TVS WEGO | 110CC | 2014 | BBB | XXXX |
| YAMAHA RAY ZR | 113CC | 2017 | BFU | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | BGC | XXXX |
| BAJAJ CT 100 | 100CC | 2015 | BDG | XXXX |
| BAJAJ CT100 | 100CC | 2015 | BCY | XXXX |
| SUZUKI GSX 150DXA | 150CC | 2017 | BFI | XXXX |

On View – 03rd & 05th February 2020
Between 9.00 a.m – 5.00 p.m

Conditions of Sale
✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per person on the day of Auction.
✓Payment: **Non – refundable** initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3:00 pm on Friday 14th February 2020 to be paid to LOLC Finance PLC No.27, 2nd Cross Street, Vavuniya.
✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
✓The decision of the Auctioneer will be final.

SCHOKMAN & SAMERAWICKREME
*One Country. One Auctioneer. Celebrating 128 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A, Fairfield Gardens, Colombo 08.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

web:www.sandslanka.com

# சென். நியூஸ்ரரார் மூன்றாவது இடம்



யாழ்ப்பாணம், பெப். 3
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரில் சென். நியூஸ்ரரார் அணி மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது.

சங்கரத்தை சென். நியூஸ்ரரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிய இந்த ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் சென். நியூஸ்ரரார் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 3

**கால்பந்தாட்டம்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்படும் ஏ, இ, சி பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கள்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரின் முதலாம் சுற்று ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி திருக்குடும்பம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## அம்பாள், துர்க்கா அணிகள் வெற்றி!

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாண மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் காளியம்பாள், துர்க்கா அணிகள் வெற்றிபெற்றன.

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும், தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் வெற்றிபெற்றது.

கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணிக்கும், கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணி 7:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)





## காரைநகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மை

காரைநகர், பெப். 3
காரைநகர் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக காரைநகர் பிரதேச செயலக ஆளனி உதவியாளர் எம்.அன்ரன் ஜேசுதாஸ் கலந்துகொண்டார். கௌரவ விருந்தினராக பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை பொருளாளர் மா.கனகசபாபதி கலந்துகொண்டார். (ம-250)

## இளந்தென்றல், சந்திரன் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், பெப். 3
முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் இளந்தென்றல், சந்திரன் அணிகள் வெற்றிபெற்றன.

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும், செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழகஅணிக்கும்இடையிலான ஆட்டத்தில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழக 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)




முல்லைத் தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் தற்காப்புக்கலை போட்டி நேற்று நடைபெற்றது. வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டிருந்தார். (ம-213)

# நியூசிலாந்துக்கு எதிரான ரி20 வழித்துத்துடைத்தது இந்தியா



நியூசிலாந்து அணிக்கு எதிரான இறுதி ரி20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரை 5:0 என்ற கணக்கில் கைப்பற்றி தொடரை வழித்துத் துடைத்தது இந்தியா.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் தலைவர் கோக்லிக்கு ஓய்வு வழங்கப்பட்டு பொறுப்புத் தலைவராக ரோகித் சர்மா செயற்பட்டார். ஆரம்ப வீரர்களாக ராகுல் மற்றும் சாம்சன் இருவரும் களமிறங்கினர். ரோகித் சர்மா தன்னை மூன்றாம் நிலை வீரராகத் தரமிறக்கி சாம்சனுக்கு ஆரம்ப வீரராகும் வாய்ப்பை வழங்கினார். எனினும் சாம்சன் சாதிக்கவில்லை. இரண்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ரோகித், ராகுல் இணைந்து இந்திய அணியைச் சரிவில் இருந்து மீட்டெடுத்தனர். 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராகுல். 60 ஓட்டங்களுடன் காயம் காரணமாக வெளியேறினார் ரோகித் சர்மா. ஸ்ரேயாஸ் 33 ஓட்டங்களைச் சேர்த்தார். இதற்காக அவர் 31 பந்துகளை எடுத்துக்கொண்டார். இந்த மந்தமான இன்னிங்ஸ் இந்திய அணிக்குச் சற்றுப் பின்னடைவைக் கொடுத்தது. மனிஸ் பாண்டே போன்ற அதிரடி வீரர் கைவசம் இருக்கையில்ஸ்ரேயாஸின் ஆட்டம் சிறிதும் ஏற்கத்தகாததே. முடிவில் 3 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.

பந்துவீச்சில் குக்கிரிஜின் 2 இலக்குகளையும், பெனட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணியை 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றத்துக்கு உட்படுத்தினார் கப்ரில். முன்றோ 15 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ஷெய்பெட் ஓர்முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் பேர்ஸ் ஓட்டமெதனையும் பெறாது ஏமாற்றமளித்தார். ஏமாற்றத்தின் பிடியில் சிக்கியிருந்த நியூசிலாந்து அணிக்கு ஒரேபந்துப்பரிமாற்றத்தில் 34 ஓட்டங்களை வாரிவழங்கி புத்துணர்ச்சி வழங்கினார் சிவம் டுபே. எனினும் சைனி, தாக்கூர் இணைந்து இலக்குகளைச் சரிக்க மீண்டும் பின்னடைவைச் சந்தித்தது நியூசிலாந்து அணி. முடிவில் அந்த அணியால் 9 இலக்குகள் இழப்புக்கு 156 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதையடுத்து 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி. (ம)







இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது ரி20 போட்டி நேற்று இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லியும், நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சனும் விளையாட வில்லை. இதனால் மைதானத்துக்கு வெளியே அமர்ந்தபடி அவர்கள் இருவரும் நீண்டநேரம் கலந்துரையாடினர். (ம)



## ரோகித்துக்கு காயம்

நியூசிலாந்துக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியானதுமான ரி20 ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா காயமடைந்தார். இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அணி 138 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரோகித் சர்மா 60 ஓட்டங்களுடன் காயம் கார ணமாக ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்து வெளியேறினார். இதை யடுத்து லோகேஸ் ராகுல் அணித் தலைவராகச் செயற்பட்டார். (ம)

## சலிஸ்பெரி, ராம் இணை சம்பியன்



அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில் சலிஸ்பெரி, ராம் இணை சம்பியனானது.

பிரிட்டனின் சலிஸ்பெரி, அமெரிக்காவின் ராம் இணையை எதிர்த்து ஆஸ்திரேலியாவின் சவில்லி, பேர்சல் இணை மோதியது. இந்த ஆட்டத்தில் சலிஸ்பெரி, ராம் இணை 6:4, 6:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம)

**கட்டட வரைபடங்கள் வரைந்து கொடுக்கப்படும்**

சகல விதமான கட்டட அனுமதி வரைபடங்கள் வாஸ்த்து சாஸ்த்திர முறைப்படி வரைந்து கட்டட அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.

இல.03, 2ஆவது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**077 074 3037/ 077 378 4474**

# வேலைவாய்ப்பு

**நெல்லியடி யில் உள்ள உதயன் பணிமனையில்**
பின்வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.



1. உதவி முகாமையாளர்
2. சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்கள்
3. எழுதுவினைஞர்
4. பாதுகாப்பு உத்தியோகத்தர்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன்
**இன்று (03.02.2020) திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை** நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல.55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

# NEW SCIENCE HALL

**KANNATHIDDY ROAD JAFFNA**

**ENGLISH MEDIUM CLASSES**

**A/L 2022 MECHANICS**

SAT, SUN 12.00 - 1.30 PM
WED, THU 5.30AM - 7.00AM

**A/L 2021 OPTICS**

SAT, SUN 7.30AM - 9.30 AM
MON - 3.00 PM- 4.30 PM
WED - 5.30PM - 7.00 PM

**A/L 2020 PROPERTIES OF MATTER**

SAT, SUN 9.30AM- 11.30 AM
MON - 5.30PM - 7.00 PM
TUE - 3.00 PM - 4.30 PM
MON, TUE 5.30AM - 7.00 AM (PAPER CLASS)

**DAY CLASS**

MON TO FRIDAY 3.00-4.30PM

**ENGLISH TAMIL MEDIUM**

**BY: M.KUKANESWARAN B.Sc(Hons) Dip. Edu.**



# அத்லெட்ரிகோவை வீழ்த்தியது ரியல்!

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திரில் வெற்றி பெற்றது ரியல் மட்ரிட் அணி.

ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து அத்லெட்ரிகோ மட்ரிட் அணி மோதியது. இரண்டு அணிகளும் ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் கோல்கள் எவையும் பதிவாக வில்லை. இரண்டாவது பாதியின் 56ஆவது நிமிடத்தில் பென் சிமா கோலொன்றைப் பதிவு செய்தார். அதுவே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைந்தது. இதையடுத்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

# யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயா முதல் இன்னிங்ஸில் முன்னிலை

*நாள் முடிந்ததை அடுத்து ஆட்டம் சமநிலையானது*

யாழ்ப்பாணம், பெப். 3

இலங்கை கிரிக்கெட் சபையின் அனுசரணையுடன் இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது.

ஸ்கந்தவரோதயவின் மைதானத்தில் அண்மையில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து பொலனறுவை றோயல் மத்திய கல்லூரி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய பொலனறுவை றோயல் மத்திய கல்லூரி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 45.3 பந்தப்பரிமாற்றங்களில் 132 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அந்த அணி சார்பாக எஸல் மகின்ச 34 ஓட்டங்களைப் பெற்றார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பாக பிரசன் 4 இலக்குகளையும் டானசன் 4 இலக்குகளையும் பிருந்தன் 2 இலக்குகளையும் கௌரிசங்கர் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 96 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு 8 இலக்குகளை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அந்த அணி சார்பாக எஸ்.டனுஜன் 88 ஓட்டங்களையும் எஸ்.துபிஸ்ரன் 49 ஓட்டங்களையும் எஸ்.அமிர்தசரதன் 38 ஓட்டங்களையும் எஸ்.டான்சன் 35 ஓட்டங்களையும் பி.பிருந்தன் 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பொலனறுவை றோயல் மத்திய கல்லூரி அணி சார்பாக டிலான் சாந்தருவான் 4 இலக்குகளையும் மகிந்த சாம 2 இலக்குகளையும் பியூமல் மற்றும் மதுசங்க தலா ஓர் இலக்கையும் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய றோயல் மத்திய கல்லூரி 4 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு 3 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களை மாத்திரம் பெற்றநிலையில் நாள் முடிவுக்குவர ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக சாமத் 73 ஓட்டங்களையும் கவீசர 41 ஓட்டங்களையும் மதுசங்க 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (ம)

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 6113**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.